ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீண்ட நாளைய விளம்பரத்திற்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ௵ ஐப்பசி ௴ 18௳ (3—11—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 25

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொரி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அல்திகாங்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(38)

## பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

கடவுள் கடவுளென

காசைத்

தொலைக்காதே

## விளம்பரம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
சங்கக் கல்லூரியின் உதவிக்கென
நடீட்டும் பெருநிதிச் சீட்டு.

18-1-1930 ஆம் தேதியில் தலை முறை சீட்டுக் குலுக்கப்பெறும். விற்பனையான சீட்டுப் புத்தகங்களின் அடிக் கட்டைகளையும் விற்பனைத் தொகைகளையும், விற்பனையாகாது மீதமிருக்கும் சீட்டுப் புத்தகங்களையும் 15-12-1929 ஆம் தேதிக்கு முன்னரே கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவருக்கு சீட்டு விற்போர் அனுப்புமாறு வேண்டுகிறேன்.

நா. கந்தசாமி,
சீட்டின் தலைவர்.

கரந்தை,
12-10-29 (71).



பழநி சி. எம். சாமி,

# ருத்ராம்பர பஸ்பம்

இது அபூர்வ சக்திவாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.
ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.
அன்னிய நாட்டார் ரூ. 5. முன் பணம் அனுப்பவேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.
(பி)



# மதன சிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியையும் போக சக்தியையும் இழந்த ஆண்மை (புருஷத்தன்மை) யையும், நல்ல பசியையும், மனதிற்கு உற்சாகத்தையும், பரமானந்த சுகத்தையும் உண்டாக்கக் கூடியது. (ஒருதரம் அநுபவித்தால் உள்ளநாளும் மறக்க மாட்டீர்கள்.) (நெ. 1. 1—சேர் டின் ரூபா. 2—8—0.) (நெ. 2. ரூபா 1—8—0.) இதில் தங்க பற்பம், உயர்ந்த கஸ்தூரி சேர்ந்தது. 1—சேர் டின் ரூபா 10—0—0, வி. பி. வேறு. அந்நிய நாட்டார் தபால் செலவு உள்பட முன்பணம் அனுப்பவும்.

குறிப்பு:—எங்கள் வைத்தியசாலை மற்ற மருந்து கேட்லாக் இனாம்.

டாக்டர் எஸ். பி. வைத்தியசாலை, தபால் பெட்டி நெ. 169,
28, கச்சாலீஸ்வரர் தோட்ட தெருவு, மதராஸ்,



## ஏன்?

### தேக ரக்ஷாமிர்தத்தையே
எல்லோரும் விரும்புகின்றார்கள்



1 அதில் ஒரு விதமான அபூர்வ சக்தி இருந்து வருகிறது.
2 உபயோகித்த நிமிஷமே குணம் கொடுக்கின்றது.
3 உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்
4 பாலர் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம்.
5 பத்தியமில்லை ஜெயமுண்டு, பயமில்லை.
6 தனிக் கணக்கில் உபயோகிக்கலாம்,
7 இரத்தத்தை சுத்திசெய்வதில் நிகரற்றது.
8 தலைவலி, காய்ச்சல், ஜன்னி, இருமல், சொரி சிரங்கு, கட்டி, வெட்டுக்காயம், வண்டு கடி, காலரா முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்தாக இருப்பது,
9 கொடுக்கும் பணத்திற்கு பன் மடங்கு அதிகமான நன்மையைக் கொடுப்பது. பல அருங்குணங்கள்

தேகரக்ஷாமிர்தத்திலிருக்கின்றது என்று தக்க அனுபவமுள்ளவர்களால் மதிக்கப்பெற்றது. புட்டி 1-க்கு ரூ 1-8-0 தபால் செலவு வேறு. நல்ல ஏஜண்டுகள் தேவை.

தேகரக்ஷாமிர்தம் கம்பெனி
(54) அம்மாபேட்டை சேலம் S1


# சாதிப் பிரிவினில் தீ மூட்டுவோம்


## ஒரு மாதத்திற்கு மாத்திரந்தான்


அமெரிக்கன் இமிடேஷன் டைமண்ட் எலக்ட்ரோ பிளேட் மோதிரங்கள் தகுந்த கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்பட்டது. இம் மோதிரத்தில் ஏழு கற்கள் பதித்திருக்கின்றது இக் கற்கள் வைரக் கற்களின் கெம்பீரமான பார்வை காட்டும் இது பார்வைக்கு வைர மோதிரமென்றே சொல்லுவார்கள், ரூ, 200-0-0 மதிப்புள்ள மோதிரத்தை தோற்கடிக்கக் கூடிய இமிடேஷன் வைர மோதிரம், இம்மோதிரத்தின் விலை ரூ. 1-4-0 மூன்று மோதிரம் ஒரே தடவையில் ஆர்டர் செய்பவர்களுக்கு (டேபில் டைம்பீஸ் இனாம்) ஆறு மோதிரம் ஆர்டர் செய்பவர்களுக்கு (பிடோரிஸ்ட் லீவர் கெடியாரம இனாம்) மனதிற்கு திருப்திகரமில்லாவிட்டால் பணம் வாபீஸ்,

K. N. R. Bros., 421, Mint Street, Sowcarpet, Madras.



### நாடகக்காரர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

ஈரோடு டவுன்மத்தியில் எலெக்ட்ரிக்-பார்க்-பேலஸ் என்றஓர் பெரிய தியேட்டர் தயாராகி விட்டது. ஸ்திரிகள் அமர மேல்மெத்தை கட்டியுள்ளது. எலெக்ட்ரிக் விளக்குகளால் அலங்கரித்துள்ளது. ஸ்டேஜ் மிகப் பெரியது. வாடகை மிகக் குறைவு. முந்துங்கள் !, சீக்கிரம் முந்துங்கள் !! தயாரிவிருக்கிறது ! ! !



## முன்னேற்றம்

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிரோட், சிங்கப்பூர்.

# மதமாற்றத்தின் விளக்கமும் ஆராய்ச்சியும்

(கைவல்யம்)

2

ஒருவருக்கொருவர் உள்ள விரோதம் நிறைந்த மதத்துவேஷ குணத்தையும், அன்னியோன்னியமுள்ள வெறுப்பையும் விட்டு நற்காரியம், நல்லுபாயங்கள், நல்ல தைரியமுடையவர்களாகி இந்து சமயத்திலுள்ள முக்கிய கொடுமைகளைப் போக்கினால் அல்லாது இப்பொழுது இருந்துவருவதும் எண்ணிக்கொண்டிருப்பதுமான சனாதன தருமத்தை நிலை நிறுத்த எவ்விதமான பிரயத்தனம் செய்தாலும் இந்து சமயத்திற்கொரு பலனுமளிக்காது.

நம்முடைய மூடவழக்கங்கள் எல்லாவற்றையும் ஆதரித்து சாஸ்திரீயமான நியாயங்கள்கூறுவதற்காக சனாதன தருமசபைகளும், அதைப் பிரசங்கப்படுத்தப் பத்திரிகைகளும், ஏற்படுத்த மடாதிபதிகளிடம் அவர்கள் ஸ்தானம் சீர்குலைந்து போகுமென்றும், சமயப்பற்றுடையவர்களிடம் சமயமழிந்துபோகுமென்றும், உத்தியோக அதிகாரம் வக்கீலின் ஆதிக்கம் முதலியவைகளால் மற்றபணக்காரர்களை வசப்படுத்தி மதத்தை நிலை நிறுத்துவதாகச் சொல்லியும், பணமும் சேர்க்க சனாதனதருமப்பத்திரிகையும் நடத்தலாம். இதனால் இந்து சமூகம் குறைந்து போகும்படியான மதமாற்றத்தைத் தடுக்க வழியுண்டா?

இந்து வென்றும், இந்து மதமென்றும் நமக்கு வந்த பெயர் நமக்கு வந்ததோ இருந்ததோ அது எப்படியோ ஆகட்டும். அது பழக்கத்தில்வழக்கமாய்விட்டபடியால் நாமும் இந்துவென்றே விவகரிப்போம். பூர்வ காலத்தில் இந்த சமயமே நமது நாட்டிலிருந்தது. இந்துமதத்திலிருந்தே பல பிரிவுகள் பிரிந்து நமது நாட்டில் சமயங்களாக வழங்கிற்று. இதற்கெல்லாம் வேதமே மூல காரணம். அநேக விஷயங்களில் வேதக்கொள்கைகளுக்குப் புறம்பான தென்னாட்டுக் கொள்கைகளும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே வேதத்தோடு கலப்புற்று கலந்து விட்டது. இந்து மதப்பிரிவைச்சேர்ந்த எல்லா சமய ஆசாரிகளும் ஈஸ்வர நிச்சயத்திலும் சமயவழிபாட்டிலும் கொள்கைகளிலும் மாறுபட்டு பல பிரிவுகளாகி பலவியாக்யானங்களெழுதி பல சமயங்களை நிலைநாட்டினார்கள். என்றாலும், இதற்கெல்லாம் மூலகாரணம்வேதம். வேதத்தை விரோதித்துவந்த சமணம், பௌத்தம், பிரகஸ்பதி முதலியமதங்களுக்கும் வேதசுருதிகளே பிரமாணம். புத்தரை விஷ்ணுவின் அவதாரமென்றும், சமண குருவை விஷ்ணுவின் அம்சமென்றும், பிரகஸ்பதியை தேவகுருவென்றும்ஒத்துக்கொண்டு அவர்கள் கொள்கைகளைத் தள்ளிவிட்டார்கள். அதற்குப் பிரமாணம் வேதமே. கர்ம காண்டத்தையும் யக்ஞயாதிகளையும் மாத்திரம் நம்பி ஆசாரம், ஞானம், தூய்மை, பரோபகாரம், கருணை முதலிய குணங்களில்லாமல் ஜீவர்களுக்கு இம்சைவிளைவிக்கும் மூட வைதீகர்களைக் கண்டிப்பதற்காகவே புத்த பகவான் ஏற்பட்டது போலவே சங்கராச்சாரியரும் ஏற்பட்டார். அவருடைய நூல்களில் கர்மத்தை நிந்தித்து ஞானத்தைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது என்றாலும், அவர் மதத்தைப் பிரச்சன்ன பௌத்தர்களென்று சிலரும், கருமத்தையே வற்புறுத்தியிருக்கிறார் என்று சிலரும், அதை நிலைநிறுத்த சில சுலோகங்கள் செய்து அவர் சொன்னதில் கலந்து விட்டவர்கள் சிலரும், அவர் சொன்னவைகளுக்குத் திருத்தி அர்த்தம் செய்யும் பலரும் இருந்ததினால் சங்கருடைய சீர்திருத்தமும் பார்ப்பனருக்கு அனுகூலமாகவும் மற்றவர்களுக்குப் பிரதிகூலமாகவும் முடிந்தது.

வேத கிரந்தங்கள் வழக்கமில்லாத பாஷையாக விருந்தமையாலும், வேதம் படிப்பது சொல்லிக்கொடுப்பதும் ஒரு வரம்புக்குள் கட்டுப்பாடாகி விட்டபடியாலும், வித்வசாமார்த்தியம் ஒரு கூட்டத்தாரிடமே யிருந்து வரவேது இருந்தமையாலும், இந்து தேசத்திலிருந்த எந்தமதத்திற்கும் வேதமே பிரமாணமென்று கூட்டிக்காட்டி தன் எண்ணத்திற்குள் சேர்த்துக் கொண்டு வந்தமையாலும், இந்து மதப்பிரிவுகளில் அநேகமாகப் பார்ப்பனரே கர்த்தாவாகவிருந்தமையால், தான் கொண்ட மதக்கொள்கைகளில் பாதியும் பார்ப்பனர்களின் உயர்வும் ஆதிக்கம் பாதியும் கலந்து எழுதப்பட்டமையாலும், இந்து சமயத்தில் பார்ப்பனரின் ஆதிக்கம் நீங்காமலும் தீண்டாமை போகாமலும் சமயக்கொடுமை தொலையாமலுமிருக்கிறது. இன்னிலைமைக்குச் சிறிது பங்கம் வருவதாயிருந்தால் தங்கள் சனாதனதருமத்தை எவ்வழியிலும் நிலை நிறுத்திக்கொள்ளுவார்கள். இப்படியே அநேக நூற்றாண்டுகள் கழிந்து வந்து விட்டன.

இந்த நூற்றாண்டு அப்படியில்லை. இந்து மதத்திலிருந்து பிரிந்து போகாததும், இந்து மத சம்பந்த மொன்றுமில்லாததுமான கிறிஸ்துவமதம், மகமதிய மதம் நமது நாட்டிற்கு வந்து நமக்குப் பகையாகி, பின் சிநேகமாகி, இப்பொழுது பந்துவாகி, திருச்சிச் சிங்காரத்தோப்பைப் பார்ப்பனருக்கு உண்டு பண்ணிக்கொடுத்து நமது கொடுங்கோன்மையில் அவஸ்தைப்படும்ஆதரவற்றவர்களை ஆதரித்து, அவர்கள் பரிசுத்த தீர்த்தத்தால் தீண்டாமையைப் போக்கியும் வருகின்றன.

கோயில், மடப்பள்ளியை விட்டு தன் கருணை செய்தறியாதக் குருக்களும் ஓம குண்டத்தை விட்டு அன்பை அப்பால் செலுத்தியறியாத புரோகிதனும் அந்தப் புறத்திலேயே ஆடம்பரங்களைச் செலுத்துவதே உத்தியோகமும், ஓமஞ்செய்விப்பதேசர்வசித்தியும், பார்ப்பனனுக்குத் தானமும் சாப்பாடும் போடுவதே கீர்த்தியும், அந்தப் பார்ப்பனப் பந்தியிலே உட்காருவதே பெருமையுமாகக் கொண்ட அரசர்களும் சேர்ந்து சமயத்தையும் ராஜ்ய நிருவாகத்தையும் நடத்திக் கொண்டு வந்த அந்த காலத்தில், இந்து மதங்களால் என்ன நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலும் அதைத் தடுக்க வழியில்லை நிர்ப்பந்தங்களிலிருந்து ஒரு சிறிது தலையை நீட்டினால் மூக்கையறுத்தாலும், நாக்கைப் பிடுங்கினாலும், தலையை வெட்டினாலும் கேள்வியில்லை. அதுவே சட்டம். கடவுள் ஆக்கினையின் பேரில்பெரியவர்கள் சொன்ன தரும சாஸ்திரமும் அதுவேயாகும். அதையே அனுபவிக்க வேண்டுமே ஒழிய வேறிடம் புகவழியில்லை. ஒதுக்கப்பட்டவர்கள் தீண்டப்படாதவர்கள் முதலிய சமூகங்கள் பட்ட துன்பங்களுக்குக் கணக்கில்லை அவையனைத்தும் பழங்கதையென்றும், இங்கிலீஷ் ராஜாங்கத்தில் அவையனைத்தும் போய் விட்டதென்றும் சொல்லலாமேயல்லாமல் சமத்துவத்தில் இங்கிலீஷ் நீதியைச் செல்லவிடாமல் தடைப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் நாமாகவே யிருக்கிறோம்.

இங்கிலீஷ் ராஜாங்க நிர்வாகங்களில் பல சிறு பெரும் பொறுப்புகளை நடத்துகிறவர்கள் நம்மவர்களல்லவா? இவர்கள் இப்பொழுதுள்ள மெய்யான உலகத்துடன் விவகாரங்கள் நடத்தப் பழக்கப்பட்டவர்களா? தங்கள் பழைய மூடப்பிடிவாதங்களினால் குழப்பட்டு அதனால் கட்டுண்டு நிற்பவர்களா? என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இதற்கொரு திருஷ்டாந்தமாக ஹைகோர்ட் ஜட்ஜ் உத்தியோகம் செய்த வி. வி. சீனிவாச அய்யங்கார் சனாதன சபை கூட்டி அதைப் பரப்புவதற்கு ஒரு பத்திரிகையும் ஏற்படுத்த முயற்சி செய்வதைக் கவனித்துப் பாருங்கள். இவ்விதமான வருணாசிரம நடையவர்கள் பிரிட்டிஷ் நீதியை எவ்விதம் உபயோகப்படுத்தியிருப்பார்கள் என்பதையும் கவனித்துப் பாருங்கள்

பிரிட்டிஷ் ராஜ்ஜியக்கொள்கை இயற்கையிலே ஜனங்கள் ஆட்சியில் கலக்கவேண்டுமென்கிறது. அன்னியர் யாரும் பொறுப்பின்றி அரசு செய்யும் முறைமையை அக்கொள்கை கண்டிக்கிறது. நம் தேசத்தில் இந்த விஷயத்தை அவர்கள் மறைத்து வைக்காமல் பள்ளிக்கூடங்களில் எல்லாருக்கும் கற்றுக் கொடுக்கிறார்கள். அவர்கள் வலன்ல் சாஸ்திரமோ பிறப்பிடத்தையும் நிறத்தையும் பொருட்டாக்காமல் எல்லாரையும் கூவியழைத்து விடுதலையின் எழிலைத்திறந்து விட்டிருக்கிறது. இதை உருப்போட்டு பரீட்சையும் தேறினேம். பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் சில அதிகாரங்களும் பெற்றோம். உடனே பிரிட்டிஷ் நீதியின் சத்தியத்தை மறந்து விட்டு மனு பராசருடைய பழைய பல்லவியை பாடினால் ஒதுக்கப்பட்டவர்கள் இவர்களின் துன்பம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் தான் எப்படி தீரும்? மதமாற்றத்தால் அத்துன்பங்களில் பல பாகங்கள் நீங்குவதைக் கண்ணால் நாமும் பார்க்கிறோம்.

பார்ப்பனர்கள் மனு பராசர்களுடைய தரும சாஸ்திரங்களைத் தள்ளிவிட்டு மேல்நாடு போகிறார்கள்.

இங்கு மனு பராசருடைய பல்லவி பாடிக் கொண்டிருப்பவர்களே அவர்களுக்கு மாலை போட்டு வழியனுப்புகிறார்கள். மேல்நாட்டார்கள் கேவலம் வாள் வலியாலும் பணப்பைகளைக் குவித்ததினாலும் இந்த நிலைமைக்கு வந்து விட்டார்களென்று சொல்லுவதானாலும் அதற்குக் காரணம் நியாயம் உண்மை விடுதலை யென்ற ஆதரங்களை யதார்த்தமாக நம்பின மற்ற பெரிய ஜாதியாருக்கு மகிமை தந்தக் குணப்பெருமையே இந்த ஆங்கிலேயருக்கும் மகிமை தருவதென்பதை மேல்நாட்டிற்குப் போனவர்கள் கற்றாலும் திரும்பிவந்தவுடன் அவை போகவும், நமது ஜாதியியல்பு வரவும் பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதுபோல் பிராயச்சித்தம் செய்து கொண்டதாகச் சொல்லி மனுபராசருடைய பழைய பல்லவியை பாழாய் போகவேண்டிய அதன் கொடுமையான பக்க மேளத்துடன் பாடுகிறார்களே? இதற்குத் திருஷ்டாந்தமாக சி பி. ராமசாமி அய்யருடைய கதையை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

உண்டி, உடை, ஒட்டல், பிரசங்க மேடை முதலியவைகளில் மேல்நாட்டாரைப் போலிருக்கிறவர்களுக்குக் கூட இங்கிலீஷ் நீதியைப் பழைய அசம்பாவிதங்களுக்கு உபயோகப்படுத்தும் குணம் போகவில்லையே இப்படிப்பட்ட அசம்பாவிதக் குணம் இத்தனைகாலிருந்ததுபோல இனியுமிருந்துவந்தால் மேது கூட்டங்கள் அன்னிய மதத்திற்குப் போய்க்கொண்டேயல்லவோ இருக்கும். அதுவுமல்லாமல் அவர்களில் அநேகர் நம்மைப் பகைக்கவும் செய்வார்கள்.

நமதுசமூகங்களில் நம்மிடம் பக்தி விஸ்வாசம் கொண்டு நம்மை மேலாக நினைத்துக்கொண்டிருக்கும் வீரர்களும் போர்க்குணமுடையவர்களும் கஷ்டத்தைச் சகிக்கும் தன்மையுடையவர்களுமான சமூகங்களை யெல்லாம் மத மாற்றத்திற்குத் தூரத்தி விட்டு வயிறு பெருத்தவர்களும், வைதிகமென்ற இரண்டு வயிறுண்டு திண்ணையில் சீட்டாடுகிறவர்களும், சனாதன தருமத்தை நிலை நிறுத்தப் புறப்பட்டிருக்கும் வக்கீல்களும், சமய

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—சுந்தர காண்டம்

### கட்டுரை—1

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கம் 1)

கடலைத் தாண்டும் பொருட்டு அனுமான் பேருருவுடன் மகேந்திர மலையில் நின்றான். அவன் பல பறவைகளை அச்சுறுத்தி பல மிருகங்களை அடித்துத் தள்ளி உலவினான். அதனால் மலை நடுங்கிற்று. பல உயிர்கள் அழிந்தன. முனிவர் ஓடினர். அங்கே வாழ்ந்த வித்தியாதரர்கள் கட்குடியால் கண்கள் சிவந்து மயங்கி மதுப் பாண்டங்களையும் பலவித மாமிசங்களையும் விட்டு பெண்களுடன் விண்ணில் சென்றனர். அனுமான் எப்படியாவது சீதையைக் கண்டு வருவதாகக் கூறி விண்ணிற் பறந்தான். அவன் சென்ற வேகத்தால் கடல் கொந்தளித்தது. கடலரசன் அனுமானுக்கு விருந்து செய்ய நினைத்து தன்னுள் அழுந்திக்கிடக்கும் மைநாக மலையைப்பார்த்து வளர்ந்து அனுமான் தங்கும்படி செய்ய ஏவினான். அம்மலையும் வளர்ந்தது. அதை அவன் தனக்குத் தடையென நினைத்து தன்மார்பினால் தள்ளி வீழ்த்தினான். அதனால் அது வீழ்ந்து மகிழ்ந்து உச்சியில் மனித உருவுடன் நின்றுகொண்டு அவனை நோக்கி, "உன் வலிகண்டு மகிழ்ந்தேன். உன்னை கடலரசன் களைப்புத் தீர்க்க விரும்பி என்னை வளர ஏவினான். என்மேல்தாங்கி இளைப்பாறிக் கடலரசனுடைய பூசனையைஏற்றுக்கொள். முன் கிருதாயுகத்தில் மலைகள் சிறகுகளையுடையனவாய் மிக வேகத்துடன் விண்ணில் பறந்து சென்றன. அதனால் பலரும் அஞ்சினர். அதுகண்டு இந்திரன் அவைகளின் சிறகுகளை வெட்டினான், என்னை அவன் வெட்டுமுன் உன் தந்தை வாயு இங்கே கொண்டுவந்து தள்ளிக் காப்பாற்றினான். எங்கள் அன்பை நீ ஏற்றுக்கொள்" என்றது. அனுமான், "உன் பேச்சால் மகிழ்ந்தேன், மன்னிக்கவும். நான் இங்கே தங்கமுடியாது" என்று கூறி அதைத் தாண்டிச் சென்றான்.

இந்திரன் மைநாக மலையின் செயலால் மனமகிழ்ந்து, "மலையரச! நீ சுகமாயிரு, உனக்கு நான் இனி கெடுதி செய்யேன்" என்றான். மலையரசன் இன்புற்றான். தேவர்களும் கந்தர்வரும் சித்தரும் முனிவரும் அப்போது பாம்புகளுக்குத் தாயாகிய சுரசையைப் பார்த்து "நீ இந்த அனுமானுக்குத் தடையாக இடையூறு செய். அவன் உன்னை எவ்வாறு வெல்கிறானெனப் பார்ப்போம்" என்றனர். அவள் உடனே பேருருக்கொண்டு அனுமானைத் தின்பதாகக் கூறி நின்றாள். அதுகண்டு அனுமான் அவளைக் கைகூப்பி வணங்கி, "அம்மா! இராமனுடைய நாட்டில் வாழும் நீ எனக்கு இடையூறு செய்யலாமா? வேண்டுமானால் நான் சீதையையும் இராமனையும் கண்டு பின் உன் வாயை வந்தடைகிறேன்" என வேண்டினான். சுரசை, "என்னை ஒருவரும் கடந்து செல்லமுடியாது" என்றனள். அவள் வாயைத்திறந்து கொண்டிருப்பதைக் கண்ட அனுமான் கட்டை விரலளவு உருவுடன் அவளுடைய வாயில் நுழைந்துவெளியில் வந்து, "அம்மா! உன் வாயில் புகுந்து வெளிப்பட்டேன். நான் போகிறேன்" என்றான். சுரசை அவனை வாழ்த்தி அனுப்பினாள்.

பின்னர் அனுமானுக்கு முன்னர் சிம்மிகை என்ற அரக்கி தோன்றி அவனுடைய நிழலைப் பிடித்து இழுத்தாள். அவன் அசைய முடியாமல் திகைத்து அவளைக் கண்டான். அனுமான் வளர்ந்தான்; அவள் வளர வளர அவள் வாயை விரித்து அவனை விழுங்க வந்தாள். அவன் திடீரென்று தன் உடலைச் சுருக்கி அவளுடைய வாயுட் குதித்து உள்ளேபோய் உயிர்நிலையைக்கிழித்து விட்டு அவள் வாயை மூடுவதற்குள் வெளியே வந்து விட்டான். அதனால் அவள் செத்து விழுந்தாள் பின் அனுமான் அக்கரையை அணுகி இலங்கையையும் மலய மலையையும் ஆறுகளையும் கண்டான். அவன் தனதுபேருடலை அரக்கர்காணின் தனக்கு இடையூறு உண்டாமென எண்ணித் தனது உடலைச் சுருக்கிக் கொண்டு அக்கரையில் சேர்ந்து இலங்கையைக் கண்டான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இதிலிருந்து சுந்தரகாண்ட ஆராய்ச்சி தொடங்குகிறது. அனுமான் கடலைத் தாண்டத் தொடங்கினான். அவன் பல பறவைகளை அச்சுறுத்தியதோடு பல மிருகங்களையும் அடித்தனனும். இதனால் அவனுடைய அருளுடைமை இத்தகையதென விளங்குகின்றது. மிருக சுபாவமுடையாரும் இவ்வாறு நடவாரே! அவனுடைய ஆர்ப்பாட்டங்களால் அஞ்சி வித்தியாதரர்கள் கட்குடியாற் சிவந்த கண்களுடன் தமது காமக் கிழத்தியரை அழைத்துக் கொண்டு மதுப்பாண்டங்களையும் மாமிசங்களையும் விட்டுவிட்டுச் சென்றனராம். வித்தியாதரர் என்பவர் தேவர்களுடைய வகுப்பில் ஒருவர் கள்ளைக் குடிப்பதிலும் புலாலுண்பதிலும் பெண்களுடன் மலைகாடுகளில் தனித்துத் திரிந்து காம இன்பம் நுகர்வதிலுமே பொழுதைப் போக்கினரென்பது தெரிகிறது! கற்றறிந்து புண்ணியம் செய்ததின் பலன் இதுதானோ? நல்லவர்களாகப் பூமியிலிருந்தவர்கள் இறந்தபின் தேவருலகடைந்து தேவராகி அடைத்து இவ்வித இழிந்த செயல்தானோ? இதற்காகவாபலர்தவம்புரிகின்றனர்? இவ்விழிந்தசெயல்களைப்பூமியிலேயே புரிதல் இயலாதா? என்னே மடமை! தேவர்கள், வித்தியாதரர்கள் தம் வாழ்க்கை மிக அழகிதே!

கடல் அனுமானுக்குவிருந்துசெய்ய நினைத்து தன்னுள் அழுந்திக்கிடந்த மைநாக மலையைவளரச் சொல்லிற்றாம்! அம்மலையும் வளர்ந்ததாம்! அனுமானாவது உயிருள்ள உடலுடையான், அதனால் வளர்ந்தான், சுருங்கினான் என்னலாம்! மலை எப்படி திடீரென வானுற ஓங்கி வளர்ந்தது? இது அறிவற்ற மிருகங்களும் நம்ப இயலாத பொய்யாக இருக்கிறதே! இத்தகைய பொய்க்கதைகளை நம்புகிற மக்களும் உளரோ! இவர்களை மக்களென்பது எங்ஙனம்? இத்தனைக்கும் மேலாக அனுமானால்அடிபட்ட அம்மலை மனித உருவுடன் தன் உச்சியில் நின்று பேசிற்றாம்! மலை மனித உருவெடுப்பதாவது! பொய்ம்மைக்கும் ஓர் அளவில்லையோ? இதனை நம்பும் மனிதர்களின் அறிவு மிருகங்களிடம் போய்விட்டதோ? மலை மனித உருவை எடுத்ததென்றே வைத்துக்கொள்வோம்! அப்புறம் மலை உருவேது? மலை உருவத்தோடு இருந்து கொண்டே மனித உருவத்தை எடுத்துத் தன் உச்சியில் அது நின்று அனுமானுடன் பேசிற்றாம்! என்னே ஆரியப்புரளி! இவைகளுக்கெல்லாம் மேலாக அம்மலை சொன்ன கதை மிகவும் வியப்பாக இருக்கிறது. கிருதாயுகத்தில் மலைகளுக்குச் சிறகுகளிருந்தனவாம்! அவை விண்ணில் வேகமாகப் பறந்து சென்றனவாம்! அவைகளின் சிறகுகளை இந்திரன் அறுத்தனனாம்! அவைகளில் ஒன்றாகிய மைநாக மலையை மட்டும் அனுமானின் தந்தையாகிய காற்றவராயன் தள்ளிக்கொண்டு வந்து கடலில் போட்டுக்காத்தானாம்! அதனை உடலெல்லாம் கண்களையுடையவனாகிய இந்திரன் காணவில்லையாம்! தந்தை செய்தநன்றியை மறவாமல் அம்மலை மகனாகிய அனுமனுக்கு உபசாரம் செய்ய வளர்ந்ததாம். என்னே ஆயிரப்புரளி! பதினாயிரப்புரளி! இவ்வாரியப்புரளி அனுமானுக்கு உபசரித்ததன் பொருட்டு இந்திரன் அம்மலையை மன்னித்துவிட்டானும் அப்படியாயின் அம்மலை இன்னும் உள்ளது போலும். அதனை யாரும் யாண்டும் இக்காலத்துக் கண்டிலரே! ஒரு வேளை கிழப்பருவத்தினால் அது தளர்ந்து மறைந்து கிடக்கின்றதோ அன்றி மாண்டு மடிந்து போயிற்றோ? இக்கதைகளெல்லாம் ஆரியர் புரளிகளுக்குத் தகுந்த எடுத்துக் காட்டுக்களாம். இனியாவது தமிழ் மக்கள் கண் விழித்துப் பார்த்தும் உண்மையைச் சிந்தித்து உணர்வார்களா?

தேவரும் கந்தருவரும் சித்தரும் முனிவரும் சுரசை என்றவளைப் பார்த்து அனுமானுக்கு இடையூறு செய்யுமாறு வேண்டினராம். இவருடைய மதியுடைமை தானென்னே? அனுமானுடைய ஆற்றலைச் சோதிக்க அது தான் அவர்களுக்குத் தகுந்த சமயம் போலும். தேவர்கள் கந்தருவர் சித்தர் முனிவர் இவர்களுடைய நியமதி இருந்தவாறு மிக அழகியதே.

இராமனுடைய நாட்டில் வாழும் நீ எனக்கு இடையூறு செய்யலாமா? என அனுமான் சுரசையிடம் வினவுகிறான். மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 15ல் இது எப்படிப் பொருந்தும்? என வினவுகிறார். இது உண்மையே இராமனுடைய அரசாட்சி எங்கெல்லாம்பரவி இருந்தது? உலகமெல்லாம் அவனுடையதா? என்னே பொருந்தாப் பொய்யுரை!

பாம்புகளின் தாயாகிய சுரசை அனுமானை விழுங்க நேர்ந்தபடி அவ்வளவ்வளவாகத் தனது உடலையும் வளர்த்தனளாம்! இவள் யாரிடம் பெற்ற வரத்தால் இந்நிலையடைந்தனளோ? அனுமான் திடீரென உடலைச் சுருக்கி அவளுடைய வாய் வழியாக நுழைந்து வெளியில் வந்தனனாம். அவளுடைய வாய் வழியாகவோ வெளியில் வந்தனனோ, அல்லது மலத்துளை வழியாக வெளியேறினனோ, அல்லதுவேறு எவ்வழி வெளிப் போந்தனனோ? அறிகிலம்!

பின்னர் அவன் சிம்மிகை என்ற அரக்கியின் வாயினுள் நுழைந்து அவளுடைய உயிர்நிலையைச் சிதைத்துத் திரும்ப வாய்வழியாகவேவெளியேறினனும்! என்னேபாதகச்செயல்! இப்பெண்கொலை! சிம்மிகை அனுமானை நிழலைப் பிடித்துஇழுத்தனளாம்! யாரையும் நிழலைப் பிடித்து இழுக்கும் தன்மை அவளுக்கிருந்ததாம்! நிழல் உருவப்பொருளா? அதனைப் பிடிப்பதெப்படி, இழுப்பதெப்படி? இனி கம்பர்போக்கைக் காண்பாம்.

அனுமான் வளர்ச்சியை ஒன்று பத்து நூறாகப் பெருக்குகிறார் கம்பர். மேலும் மைநாக மலையை அனுமான்தலைகீழாகமாற்றிவிட்டானென்றும் பின் அதன் பணிவுணர்ந்து அதனை மூக்கிலே கண்டானென்றும் அவர் கூறுகிறார். சிம்மிகையைக் கம்பர் அங்காரதாரையென்றார். அனுமான் அவளுடைய வாய்வழி நுழைந்து உயிர்நிலையைக் கிள்ளி வாய்வழியாகவே மீண்டான் என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவன் அவளுடைய குடலைப் பிடுங்கி வெளிவந்தானென்றுகூறுகிறாரே ஒழியஎவ்வழியாக வெளிவந்தானெனக் கூறுகின்றிலர். இனிமேற் செல்லுதும்.

# ஆராய்ச்சி முரசு

## "உண்மை உணர்ந்தோர்க்கு 'உயர்ந்தது, உண்டா?"

(தமிழ் மகன்)

இவ்வுலகில் பலதிறமான வியக்கத்தக்கதான, விநோதமான அறியாமைகளும், குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் நடைபெற்றுவரக்காண்கின்றோம். சிலஜனங்கள் ஒருபொருளை உயர்ந்ததாகவும், வேறொருபொருளை தாழ்மையாகவும் எண்ணுகிறார்கள்; மதிக்கின்றார்கள். மற்றொரு சில மக்கள், முன்னவர் உயரியதாக மதிக்கும் பொருளைத் தாழ்வாகவும், தாழ்வாக எண்ணப்பட்டுள்ள பொருளை உயர்ந்ததாகவும் கொள்ளுகின்றார்கள். 'இந்து சமயம்' என்று கூறப்படுவதில் பிறந்தவர் எனத்தங்களைக் கருதிக் கொண்டுள்ள மக்கள் ஏனைய, 'கிறிஸ்து சமயம்', 'மகமதிய சமயம்', 'புத்த சமயம்' என்று கூறிக்கொள்ளப்படுகின்ற 'சமயங்களை'த் தாழ்ந்தவை எனவும், தமது சமயமாகிய 'இந்து சமய'மே எல்லாச் 'சமய'ங்களையும் விட 'உயர்ந்தது' என்றும் கூறிக்கொள்ளுகிறார்கள்; உறுதிகொள்ளுகின்றார்கள். இதைப்போன்றே மற்ற 'சமயங்கள்' என்பனவற்றிலுள்ளோர் எனக்கூறிக் கொள்ளப்படுவோர் ஒவ்வொருவரும் தம் சமயமே உயர்ந்தது' ஏனைய சமயங்கள் எல்லாம் தாழ்ந்தவை எனச்சொல்லிக் கொள்ளுகிறார்கள். சில மக்கள், தாம் எந்த சமயத்தையும் சேர்ந்தவரல்லர் என்று கூறுகின்றனர். இவ்வாறாகவே, இவ்வுலகிலுள்ள மக்கள் சிறு சிறு கூட்டமாய்ப் பிரிந்து கொண்டு 'நாங்கள் தான் அறிவாளிகள். நீங்களெல்லாரும் முட்டாள்கள்' என்று பெருமையடித்துக் கொண்டு வாழ்கின்றனர். ஒருவர்க்கு உயர்ந்ததாகக் காணப்படுவது மற்றொருவருக்குத் தாழ்வாகத்தோன்றுகிறது. இவை போன்ற கருத்து வேற்றுமைகள் மக்களுக்குள் உண்டாகியிருப்பதின் முக்கிய காரணமாயும், மூலமாயும் இருந்து வருவது எது, என்பதை ஊன்றி நோக்குவோமானால், அது "மனமே" என்பதைத் தெற்றெனக் காணப்பெறலாம். "மனம்" அல்லது "சிந்தை" என்பதாலேயே ஒன்று உயர்வாகவும், வேறொன்று தாழ்வாகவும் கொள்ளுவதற்கு இடமிருந்து வருகிறது. உலகில் உள்ள மக்கள் எல்லாருக்கும் ஒரே விதமான மனம் இருந்திருக்குமானால் இருந்துவருமானால் உலகம் முழுதுமே அன்புமயமாயும், அறிவுமயமாயும், சகோதர மயமாயும் இருந்து கொண்டிருக்கும், இருந்து வரும் எனக்கூறும் அபிப்பிராயம். இந்தியன் என்று கூறப்படுபவன் என் நாட்டான்; ஆங்கிலேயன் என்று அழைக்கப்படுபவன் 'அயல் நாட்டான்' என 'இந்தியர்' என்று கூறிக் கொள்ளுகிறவர்கள் சொல்லுகிறார்கள். இந்தியர் என்பவர் யார்? ஆங்கிலேயர் என்பவர்யார்? இருவரும் மக்களே என்பதில் எவருக்கும் ஆட்சேபமிராதென்றே நம்புகின்றேன். இருவரும் மக்களே என்பதை ஒப்புக்கொள்ளுவோர் பின்னர் ஏன் அவன் ஆங்கிலேயன் நான் இந்தியன் என்று கூற வேண்டும்? ஆங்கிலேயன் என்று கூறப்படுகிறவன் ஏழாயிரம் மைல்கள் தூரத்திற்கப்பால் உள்ள நிலத்தில் பிறந்தவன் என்ற காரணத்தையும் அவனுடைய வெண்மையான நிறத்தையும் சில மாறுபாடான பழக்க வழக்கங்களையும் வேற்றுமையாகக் கருதிக் கொண்டு அவன்வேறு, நான்வேறு என்று கூறுவது பெரிதும் வியக்கத்தக்கதேயாகும்! அவனும் மனிதன்; நாமும் மனிதனே. பின்னர் வேற்றுமை கொள்ளக்காரணம் என்ன இருக்கின்றது? 'என் நாடு' 'அவன் நாடு' என்று வேற்றுமையாக எண்ணுவோர் உண்மை உணரப்பெறாதவரேயாவார்கள்; கடல், மலை, வனம், ஆறு ஆவன மக்களைப் பிரித்துவைத்திருக்கின்றன; அவைகள் தடை செய்யாவிட்டால் உலகில் உள்ள மக்கள் அனைவரும் அக்காலத்திலிருந்தே ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் போன்றே வாழ்ந்து வந்திருப்பார்கள். இந்தப் பூவனத்திலுள்ள மக்கள் அனைவரும் சகோதரரே என்பதை மறந்துபோய் 'அவன் அயலான்' 'இவன் நம்மவன் என்று கூறுவது எத்தகைய வியக்கத்தக்கபயங்கரமான அறியாமை அவனுக்கும் நமக்கும் எங்கே வேறுபாடு ஏதேனும் இருக்கின்றதா? இல்லை இல்லை. பின்னர் வேற்றுமையாக மதிப்பதின் காரணம் என்ன? அவனுடைய பழக்க வழக்கங்களே. அவன் பிறந்த இடத்திற்குத் தக்கவாறு பழக்கவழக்கங்களை உண்டாக்கியிருக்கின்றான். எனவே, அதை வேறாகக்கொண்டு அவனை 'அயல் மனிதன்' என்று கூறுவது பொருந்துமா? என யான் கேட்கின்றேன். இவ்வாறு வேற்றுமையாக எண்ணப்படுவதின் முக்கிய காரணமும் மூலமும் "மனமே" யாகும். "மனம்" மட்டும் ஒரே நிலைக்கு வந்துவிடுமானால், நாம் அறிஞர்களாகிவிடுவோம். நாம் மட்டுமல்ல, உலகிலுள்ள நமது சகோதரர்கள் அனைவரும் ஒரே 'சிந்தை' உடையவர்களாக ஆகியே தீரவேண்டும். அவ்வாறாகிவிட்டால் ஆ! ஆ!! உலகம் எத்தகைய அன்புமயமாய்-சகோதர மயமாய்-அறிவுமயமாய்-ஆனந்தமயமாய் [illegible]!

* * *

வைரம், கோமேதகம், மாணிக்கம், நீலம் முதலிய நவரத்தினங்கள், தங்கம், வெள்ளி, நாணயம், உண்டியல், கரன்சிநோட்டு, முத்திரைக்காகிதம், ஸ்டாம்பு முதலியனவும் 'உயரியன' என நமது 'மனம்' நம்பி மதிக்கின்றது. உண்மையில், வைரமோ, பத்தரைமாற்றுத் தங்கமோ இயற்கையிலேயே 'உயரியவை'களாக உண்டானவையல்ல. நமது 'மனம்' மதிப்பதாலேயே அவை உயரியவைகளாக இருந்து வருகின்றன. நமது 'மனம்' மட்டும் மேற்கண்டவற்றை நன்கு மதிக்காவிட்டால், அவைகளின் 'உயரிய தன்மை' அதோகதி தான்! சிலர் 'தலைவர்'களென்று கூறிக்கொண்டிருக்கவும், வேறு சிலர், 'மகாத்மாக்கள்' என்று சொல்லிக்கொண்டிருப்பதற்கும் உண்மையிலேயே அவர்கள் காரணஸ்தர்களல்லர். ஆனால், உண்மை என்ன? நம்மால் தான் 'தலைவர்களாகிறார்களே யல்லாமல், 'தலைவர்கள்' என்பவர்கள் பிறக்கும்போதே தலைவர்களாகப் பிறக்கவில்லை. நாம் மட்டும் விரும்பினால் தலைவர்களேயில்லாமல் செய்து விடலாம்; மற்றபடி என்னவேண்டுமானாலும் செய்யலாம்; சிறிது விளக்கமாய்க் கூறுவதென்றால் போற்றும் மக்கள் ஆதரவினாலேயே போற்றப்படுவோர் இருந்து வரக்காரணமிருந்து வருகிறதேயன்றி, போற்றப்படுவோர் உண்மையில் போற்றப்படும் நிலையில் தாமாக உண்டானவரல்லர். மண்ணைத் தாழ்வாகவும், மாணிக்கத்தை உயர்வாகவும் நாம் எண்ணுகிறோம். ஆனால், உண்மையில் மண் தாழ்ந்ததாகவோ, மாணிக்கம் உயர்ந்ததாகவோ கொள்வதற்கு எத்தகைய சான்றுமிருப்பதாய்த்தெரியவில்லை. வேண்டுமானால், நமது மனம் மட்டும் துணிந்து விடுமானால், மண்ணை உயரியதாகவும், மாணிக்கத்தைத் தாழ்ந்ததாகவும் செய்து விட முடியும முடியும் என்று பலமுறை கூறவேண்டுவது என்ன? மனமாற்றமே யாகும் பார்ப்பனர் என்பவர் உயர்ந்த சாதி என்றும் பார்ப்பனரல்லாதார் என்பார் தாழ்ந்த சாதி எனவும் எண்ணுவது மெய்யாகவே இவ்வுலகிலுள்ள எல்லா மனிதரும் சமமேயாவார்கள், பார்ப்பனர் என்பவர் உயரியவர் என்றோ பார்ப்பனரல்லாதார் என்பவர் தாழ்ந்தவர் என்றோ மெய்ப்பிப்பதற்கான எவ்வித ஏதுவுமில்லை. மனம மட்டும் எதையும் உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ எண்ணாமல் எல்லாவற்றையும் சமமாக எண்ணப்படுமானால் எண்ணிக் கொண்டு வருமானால் உலகில் உயர்வுதாழ்வு என்ற வேற்றுமை இல்லாமலே போய்விடும்.

6, 7 வருஷத்திற்குமுன் ஒத்துழையாமையின் போது திரு. ஈ. வெ. ராமசாமி மதுரையில் கிருஷ்ணராய குளத்தில் சொற்பொழிவாற்றுகையில் "கோயில்களில் கடவுள் இல்லை. [illegible] கல்லுகளே" என்று கூறிக்கொண்டு செல்லும்போதே பிரசங்கம் கேட்பார்களில் அனைவருமே விழுந்து விழுந்து நகைக்கலாயினர். அச்சமயத்தில் எனக்குப் பெருத்த ஆச்சரியமும் வருத்தமும் உண்டானதோடல்லாமல் ஜனங்கள் சிரிப்பதைக் கண்டு எனக்குநகைப்பும் உண்டானது. ஏனெனில் திரு. ராமசாமி கூறியதில் வியப்படைவதற்கோ ஏதுவானவிஷயம் என்னவிருக்கிறது ஒன்றுமேயில்லை கோயில்களில் கல்லுகள்தான் இருக்கின்றன என்பதை அனைவருமே கண்டவைதான். அக்கல்லுகளே சாமிகளாக இருப்பனவே என்பதும், அவை ஆடை வெளுப்பதற்குச் சிறிதும் பயன்படாதவைகளே என்பதும் தெரிந்த ரகசியம். அப்படிப்பட்ட பிரத்தியட்சத்திலும் பிரத்தியட்சமான விஷயத்தைத்தான் திரு ராமசாமி கூறினாரே யல்லாமல், பொய்யான விஷயத்தையோ புதுமையான விஷயத்தையோ, நகைப்பதற்கு ஏதுவான விஷயத்தையோ கூறினாரல்லர். எல்லாரும் அறிந்த உண்மையைத்தான் திரு ராமசாமி கூறினார். அதைக் கேட்டுவிட்டு 'நகைப்பது' என்றால் அதை என்னவென்று கூறுவது? மடமை என்றுதான் கூறவேண்டும். இத்தவறுகளுக்கெல்லாம முக்கிய காரணம் "மனமே"யாகும் என்பதை மறுமுறையும் வலியுறுத்திக் குறிப்பிட்டுக்கொள்ளல் அனுவசியமாகும்.

எல்லாவற்றிலும 'உயர்ந்தது' 'கடவுள்' என்று பலர் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் 'கடவுள்' என்று கூறப்படுவது 'உயர்ந்தது' ஆக தாமாகவே ஆகிவிடவில்லை. மக்களின் குருட்டுத்தனமான ஆதரவாலேயே இருந்து வருகின்றதே யல்லாமல், அதற்குள்ளதாகக் கருதப்படுகின்ற 'சர்வசக்தி'யின் மகத்துவத்தாலல்ல. மக்கள் மட்டும் துணிந்து விடுவார்களானால் 'உயர்ந்த கடவுளை' இல்லாமலேயே செய்து விட முடியும். மக்கள் மட்டும், 'கடவுள்' என ஒன்றிருப்பதாக ஒப்புக்கொள்ளாமல், கோயில்கள் கட்டாமல், அதை உயர்வாக மதித்து வழிபாடு செய்யாமல், அதைப்பற்றி எவ்விதமான விஷயத்தையும் பிரஸ்தாபியாமல், அதைப்பற்றிச் சிறிதும் கவலையே கொள்ளாமல் அதைப்பற்றிக் கூறப்படுகின்ற நூல்கள், பாடல்கள் ஆகியவற்றைச் சுட்டுப்பொசுக்கிவிட்டு கொஞ்சகாலத்திற்கு அலைக்கழித்துக் கொண்டு இருந்து வருவார்களானால், எல்லாஞ் செய்ய வல்ல எம்பிரான் ஒன்றுஞ் செய்ய இயலாத தம்பிரானாய் இறந்தே போய் விடுவார் வேண்டுவது என்ன? இவ்வுலகில் உயர்ந்தது ஒன்றுமேயில்லை என்ற மனமும் உறுதியுமே யாகும். உண்மையாகவே இவ்வுலகில் உண்மையை உணர்ந்தோர்க்கு உயர்ந்தது ஒன்றுமேயில்லை தாழ்ந்தது ஒன்றுமே இல்லை [illegible] இல்லை; "உன்னை நீ அறி!"

# அவர்கள் என்ன பேசுகிறார்கள்?

(அய்யாமுத்து)

பள்ளியில் வாசிக்கும் மாணவர்களின் கல்வித் தேர்ச்சியையும், படிப்பிக்கும் உபாத்தியாயர்களின் போதனா முறையையும், சுத்தத்தையும் பரிசோதிக்கப் பல உத்தியோகஸ்தர்கள் கல்வி இலாகாவில் அமர்த்தப்பட்டிருப்பது போற்றத்தக்கதே. ஆனால், படிக்கும் மாணவர்களுடையவும், படிப்பிக்கும் உபாத்தியாயர்களுடையவும் உடல் நலத்தைப் பரிசோதித்துப் பரிகரிக்க வைத்திய நிபுணர்கள் பள்ளிதோறும் சென்று பார்வையிட்டு வேண்டியது செய்விக்கும் நல்ல காலம் எப்போது வருமோ?

* * *

சரியான பார்வையற்றவர்களும், சதா தலைநோயால் வருந்துகின்றவர்களும், வயிற்றுப் போக்கால் கஷ்டப்படுகின்றவர்களும், மெலிந்த உடலைக் காற்றுப்போல் சுமந்துசெல்கின்றவர்களும், சதா அழுக்கு ஒவ் திரங்களோடும், அழுக்குப் படிந்த உடலோடும் நாற்றமுறுகின்றவர்களும், வாய் நாற்றம் பிடித்தவர்களும், கெட்டகாற்றை வெளிவிடும் பள்ளிக்கூடங்களின் சுகாதாரத்தைக் கெடுக்கின்றவர்களும் நிறைந்துள்ள பள்ளிகள்தோறும் வைத்தியர்கள் தாராளமாகச் சென்று, அரசாங்கப் பொக்கிஷத்தி லிருந்து மருந்து கொடுத்து சிகிச்சை செய்தல் அவசியமென்பதை சட்டசபை மெம்பர்கள் வற்புறுத்த மாட்டார்களா?

* 0 *

காலுக்குச் செருப்பின்றியும், வெய்யிலுக்கும், மழைக்கும் குடையின்றியும், இரண்டு வேளை ஆகாரம் சரிவரக் கிடைக்காமலும், உடுப்பதற்குப் போதுமான ஆடையின்றியும் கூனித்துப்போன மாணவர்களுக்கு உதவிபுரியும் அரசாங்கம் எப்போது வருமோ? எங்கிருந்து தோன்றுமோ? படித்துப் பள்ளியை விட்டு வெளி வந்து படித்தபடிப்புக்குக் கடன்பட்ட பெற்றோர் முகத்தை உற்று நோக்கச் சக்தியின்றி, வெள்ளைக்காகிதத்தைச் சுருட்டி ஜேபியில் போட்டுக்கொண்டு வேலையோ, வேலையென்று கதவுவைத்த காரியாலயங்கள் தோறும் உட்சென்று வெருட்டி வெளியே தள்ளப்பட்டு சென்னைத் தெருக்களில் அலைமோதும் இளைஞர்களுக்கு பற்பல வித்தைகளைக் கைத்தொழில் விடுதிகளைத் திறந்து, காட்டினின்று வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமை, பசிப் பிணியாகிய பேய்களையும் விரட்டி அடிக்க வல்ல அரசாங்கம் எங்கு தோன்றப்படுமோ?

* * *

'பஞ்சமர்'களையும் பள்ளியில் சேர்க்கவேண்டும் என்ற ... உத்திரவைச் சர்க்கார் செய்திருக்கும், 'பஞ்சம'ச்சிறார்களைச் சேர்த்திடாத பள்ளிகட்கு உதவித்தொகை கிடையா தெனச் சட்டம் இருப்பதோடும் கூட, 'பஞ்சம'ப் பிள்ளைகளை ஒட்டுத்திண்ணையிலும் வாசலிலும் உட்கார வைத்திடும் கிராமத்தார்களின் சாதித்திமிர் என்று ஒழியுமோ அறிகிலோம். சட்டம் இன்னுஞ் சற்று கடுமையாகவேண்டும். 'பஞ்சமப்' பிள்ளைகளை மற்ற மாணவருடன் சரியாக உட்கார வைக்காத கிராமத்தாருக்கு வெறுங் காவலும், கடுங்காவலும், அபராதமும் போடப்படவேண்டும். இல்லையேல் இச்சண்டாளச் சாதித் திமிர் ஒழியப் போவதேயில்லை.

* * *

''கண்ணில்லாதவன் குருடன், காலில்லாதவன் நொண்டி என்ற ஒன்றுக்கும் உதவாதப்படிப்பே போதிக்கப்படுகின்றன. அறிவையும், அன்பையும், அருளையும், பக்தியையும், ஒழுக்கநெறியையும் விருத்தி பண்ணத்தக்க பாடங்கள் கற்பிக்கப் படவேண்டும்''

என்று கர்ச்சிசெய்த தேசியக் கூச்சலால் விளைந்த பயன் என்ன? அன்புக்கும், அருளுக்கும், அறிவுக்கும், உண்மைக்கும் பொருத்தமில்லாத பல புராணக்கதைகள் தற்போது பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. சுயராச்சிய சத்தம் ஒன்றிலேயே படிப்பின் கதி இப்படிப்போனதென்றால், சுயராஜ்யம் வந்துவிடின் சண்டிப்பாய் 'மனுநீதி'யென்ற ஒரு குலத்துக்கொரு நீதியே பாடமாக வைக்கப்பட்டுவிடும். அந்தோ! அப்போது 'பார்ப்பன தருமமும்' சூத்திர தருமமும்' படித்தறியாத பள்ளி மாணவர்களே இருக்கமாட்டார்கள்.

* * *

கண்ணில்லாதவன் குருடன் என்பதும், கால் இல்லாதவன் நொண்டி என்பதும் அறிவை வளர்க்காவிட்டாலும் உண்மையான வற்றையே கூறுகின்றன. ஆனால், திருமாலன் சர்ப்பத்தின் மேல் நடனஞ் செய்ததையும் தசாவதாரக்கதைகளும், ஐந்துபேரை மணந்து கொண்ட ஆரியத்திரௌபதை நீதியும், உலகத்தைத் தாங்குகின்ற ஆதிசேடன் பாடமும், சூரியனையும், சந்திரனையும் விழுங்குகின்ற பாம்பினது சேதியும், அறுபதினாயிரம் பெண்டாட்டி கட்டிய தசரதனுடைய கதைகளும், பரந்தகடலைத் தாண்டியவனும், பர்வதத்தைத் தூக்கியவனுமான அனுமந்தராயன் கதைகளும் உண்மைக்கு எத்தனை பொருத்தம்! இவற்றைப் படிப்பதால் பிள்ளைகளின் அறிவும், ஆராய்ச்சியும், அன்பும், பக்தியும், ஒழுக்கமும் எத்தனை தூரம் பிரகாசிக்கும்! இவற்றிற்கு ... மாற்றான ... கல்யாண சுந்தரர் தாமே முன் வர வேண்டும்.

# தாலூகா போர்டு கட்டிட திறப்பு விழா

## தலைவர்களின் திருத்துறைப்பூண்டி விஜயம்

20-10-29ல் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தபடி, திருத்துறைப்பூண்டியில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் தாலூகா போர்டு கட்டிடத்திற்குக் கார்களில் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தாலூகாபோர்டு கட்டிடத்திற்கு முன் பெரிய பந்தல் போடப்பட்டு கொடிகளாலும் தோரணங்களாலும் வெகுஅழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் காலஞ்சென்ற பானகலரசர், டாக்டர் சுப்பராயன், ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம், திரு. என். ஆர். சாமியப்ப முதலியார் முதலியவர்களின் படங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள். முதல்மந்திரி டாக்டர் சுப்பராயன், திரு. ஈ. வெ. ராமசாமி, திரு பி. டி. ராஜன், திரு. ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல், எம். எல். ஏ., திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம், திருவாளர்கள் என். ஆர். சாமியப்ப முதலியார், வி. பி. காயாரோகணம் பிள்ளை, உமாமகேசுவரம் பிள்ளை, ஐ. குமாரசுவாமிபிள்ளை, கே. சி. சுப்பிரமணியம் பாரிஸ்டர், எஸ். வி. லிங்கம், மனத்துணை நாதர்தேசிகர், கே. சி. ராஜதுரை செட்டியார், ஜனாப்கள் டாஜுடீன் கவுன்சில் காரியதரிசி, எம். ஏ. ஷம்சுதீன் ஜில்லாபோர்டு மெம்பர், என். தையா முதலியார், சொக்கலிங்கமுதலியார், பக்கிரிசாமி நாயுடு தாலூகா போர்டு தலைவர், சேஷாசலமுதலியார், செல்லையா முதலியார், ஜனாப் அப்துல் லாசாயபு, டிவிஷனல் ஆபீஸர், போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர், இன்னும் மற்ற உத்தியோகஸ்தர்களும் பிரபலஸ்தர்களும் சுமார் 1500க்கு மேற்பட்டவர்கள் குழுமியிருந்தனர்.

### டாக்டர் பி. சுப்பராயன்

3மணிக்குத்தலைவர்களெல்லாம்வந்து சேர்ந்தனர் பெருத்தகரகோஷத்தோடு கனம் சுப்பராயன் அவர்கள் கட்டிடத்தை திறந்துவைத்து வரவேற்புப் பத்திரத்திற்கு பதிலளித்தார்.

### திரு. பி. டி. ராஜன்

பிறகு பானகலரசரின் படத்தைத் திறந்துவைக்கும்படிகேட்டுக்கொள்ள திரு. பி. டி. ராஜன் பானகலரசர் படத்தைத் திறந்து வைத்தார்.

### திரு. ஆர். கே. ஷண்முகம்

பிறகு திரு ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்கள் முதல்மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

### திரு. ஈ. வெ. ராமசாமி

நீண்ட கரகோஷத்தினிடையே திரு. ராமசாமி எழுந்து தஞ்சை ஜில்லாபோர்டு தலைவர் ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் படத்தைத் திறந்துவைக்கும் முன் பேசியதின் சாராம்சம் வருமாறு:—

சகோதரர்களே!

எனது நம்பிக்கைக்குரிய நண்பர் திரு. பன்னீர்செல்வத்தின் படத்தைத் திறந்துவைக்கும் தொண்டு எனக்குக் கிட்டியதற்கு சந்தோஷப்படுகிறேன். திரு. செல்வத்துடன் அன்றாடம் பழகிவரும் இந்த ஜில்லாவாசிகளான நீங்கள் அவரைப்பற்றி அதிகம் அறிந்திருப்பீர்கள். சாதாரணமாக அவர் ஓர் சீர்திருத்தக்காரர், ஜில்லா போர்டு தலைவர், என்பதின் நிலையில் அவர் படத்தைத் திறந்து வைப்பதை நான் அவ்வளவாக விரும்பவில்லை அவர் ஒரு மந்திரியாகி அதன் பின் அவர் படத்தைத் திறந்துவைக்கும் சமயம் இருக்குமேயானால் அதை தான் நான் பெருமையாக எண்ண இடமேற்படும். அவரின் அரிய தொண்டுக்கு இது ஓர் பெரிய பதவியாக மாட்டாது. அவர் பெரும் அறிவாளி என்பதும், உண்மை உழைப்பாளி என்பதும் தஞ்சைஜில்லாவின் இன்றைய நிலையில் பெரிய ஜில்லா போர்டின் தலைவராக அவர் வீற்றிருப்பதே தக்க சான்றாகும். இந்த மாகாணத்தில் எனது தொண்டுக்கு உண்மையான சகாக்களாக நம்பி இருக்கும் ஒரு சிலரில் இவரும் ஒருவராகும். (கரகோஷம்) எனது வேலைகளுக்கு அவர் இதுவரையில் காட்டி வந்த ஆதரவு மிக அதிகமாகும். மாகாண சுயமரியாதைச்சங்கத்தின் உதவித் தலைவராகவும் அவர் இருந்துவந்திருக்கிறார். எனது லட்சியங்களை நிறைவேற்றி வைப்பவரும், செயலில் செய்துவருபவரும் அவரேயாகும். உலக நன்மைக்குகாரம் நடத்தும்போராட்டத்தில் அவர் உண்மை ஊழியராகும். செல்வம் பெருமைகளைப்பற்றி நான் என்ன சொல்லக்கூடும். இந்த மாகாணத்திலேயே ஜில்லாபோர்டு தலைவர்களில் பார்ப்பனரல்லாதார் எவ்விதமிருக்க வேண்டுமென்பதற்கு இவர் உதாரண புருடராகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 30 பேர்களுக்கு மேல் இலவசமாய்ச்சாப்பாடு போட்டு பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார். ஓர் ஜாதி மட்டும் படிக்கவேண்டுமென்ற சமஸ்கிருத பள்ளியில் சகலரும் படிக்கும்படி செய்துள்ளார். தர்மஸ்தாபன பள்ளிக்கூடங்களில் இதற்குமுன் அக்கிரகாரமயமாய் இருந்ததை அடியுடன் மாற்றிவிட்டார். வருடா வருடம் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் ஆற்றுக்கணக்காய் ராஜாமடம், ஒரத்தநாடு இவைகளிலிருந்து படித்து வெளிவருவதற்குக் காரணம் அவரேயாகும். ஒரு தனி ஜாதியின் ஏகச் சக்கிராதிபத்தியம் அளவுக்கு மேற்பட்ட இந்த ஜில்லாவில் இவர் நமதியக்கத்

# மூட வைதிகம் அழிந்தது

ஆப்கானிஸ்தானத்தில் இப்பொழுது ஜனரல் நாதிர்கான் அமீராக நியமனம் செய்யப்பட்டிருப்பதைக் கேட்டு நாம் மகிழ்ச்சிப் பெருக்கு அடைகின்றோம். ஆப்கானிஸ்தானத்து முல்லாக்கள் தங்கள் மூடத்தனமான பிடிவாத வைதிகத்தைப் பிரசாரம் புரிந்து, என்றும் போல் ஆப்கன் தேசத்தை அறியாமையில் ஆழ்த்தி வைத்து தமது ஆதிக்கத்தையே நிலை நிறுத்த முயன்ற முல்லாக்களின் ஜெயம் அமானுல்லாவை நாடு கடத்தியதோடு முடிந்ததேயொழிய நீடித்ததாய் இல்லை. தங்கள் நாட்டை ஓர் கொள்ளைக்காரன் ஆளினும் ஆளுக; உண்மையான ஞானம் பெற்ற ஓர் சீர்திருத்த அரசன் ஆளாதொழிக; என்பதுவே ஆப்கன் முல்லாக்களின் கொள்கையாய் இருந்து வந்தது. இதிலிருந்து இவர்கள் ஒரு சமூகத்துக்கு அறிவைப் புகட்டும் யோக்கியதை உடையவர்களா என்பதை அறிந்து முடிவு கூறுதற்கு ஆழ்ந்த சிந்தனையே வேண்டுவதில்லை அறியாமையையே முதலாக வைத்துக் கொண்டு மத வியாபாரம் புரிவது எம்மதத்தினராயினும் அம்மதத்துப் புரோகிதர்களின் சிவன உபாயம்.

இந்த உபாய முறையில் அவர்கள் தற்பாதுகாப்புக்காக, அறிவுடைமையும் சீர்திருத்தமும் தோன்றும்போதெல்லாம் எதிர்ப்பது எந்நாட்டிலும் வழக்கமாய் விட்டது. அமானுல்லா அவர்கள் மேனாடு சென்று வந்தனர், மேனாட்டையும் தன்னாட்டையும் சீர்தூக்கிப்பார்த்து, தன்னுடைய ஆப்கன் தேசத்தின் இழிவான நிலைமையை உணர்ந்தார்; கொஞ்சம் பதைத்தார்; மதத்தின் பேரால் வழங்கப்படும் தீமைகளை அகற்றி, மேனாடுகள் போல் ஆப்கன் நாடும் பெருமையும் புகழும் செல்வமும் இன்பமும் பெற்றுத் திகழுமாறு, ஏற்ற சீர்திருத்தங்களை வழங்கினார். உடனே முல்லாக்கள், இனி அறியாமை என்னும் "சைத்தான்" ஆப்கானிஸ்தானத்தை விட்டு அகன்று போய், தங்கள் வாய்களில் மண்ணைப் போட்டு விடுமெனப் பயந்து மதத்தின் பேரால் பெரும் கிளர்ச்சியை விளைவித்து, கிளர்ச்சிக்கு சாதகமாக பொருளுதவியும் அளித்து அமானுல்லாவை வெளியேறும்படி செய்துவிட்டனர். ஆனால் அந்தோ! இம்முயற்சி விழலாயது; இதன் பயன் நீடிக்கவில்லை. அமானுல்லா வேற்றூர் சென்ற போதிலும், மெலடிக வைதீகர்களின் நியமனஸ்தனுள கொள்ளைக்கார பாச்சா சாக்கோ ஒழிந்து, அமானுல்லாவைப் போன்ற அளவில் முற்போக்கு படைத்த ஜனரல் நாதிர்கான் அவர்கள் இப்பொழுது அமீராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாம்மதம் ஆப்கன்தேசத்தைப் பற்றிய வரையில் முல்லாக்களின் மூடக்கட்டுப்பாடுகட்கு உட்படாமல் நாதிர்கான் கையில் அதன் உண்மைத் தோற்றத்துடன் விளங்கும் என்பது உறுதியே.

நிற்க; இஸ்லாம் மதம் என்பதற்கு நாம் கொடுத்திருக்கிற பெருமையும் உயர்வும் அம்மதம் துருக்கி, அரபுத்தேசம் எகிப்து, முதலிய நாடுகளில் அநுசரிக்கப்படும் வகையைக்கொண்டே ஒழிய, புதிதாகத் தோன்றி வரையறையில்லாமல் முரட்டுப் பிடிவாதத்துடன் இந்தப் பாகங்களில் பெரும்பாலும் இந்துக்களைப் பார்த்து காப்பி அடிக்கும் இஸ்லாம் மதத்தைக்கருதி அல்ல என்பதை நாம் எடுத்துரைக்க விரும்புகின்றோம். இங்குள்ள இஸ்லாம் மதம் காரியத்திற்கும் பேச்சுக்கும் மலைகு தூரம். இங்குள்ள மகமதியர்கள் பெரும்பாலும் நமது பாட்டனின் பேரன்மார்களேயாவார்கள். ஏனெனில், திரு. மகமதுநபி அவர்கள் பிறந்து நேர்முகமாகப் பிரசாரம் புரிந்து வந்த அராபுத்தேசத்திலும், அதன் அருகாமையில் உள்ள துருக்கி, எகிப்து, பாரசீகம் முதலிய தேசங்களில் இஸ்லாம் மதம் அநுசரிக்கப்படும் தன்மையையும், அங்கு பெற்றிருக்கும் மகிமையையும், நமது பாகங்களில் அதே மதம் அநுசரிக்கப்படும்தன்மையையும் இந்நாட்டு நிலையையும் சீர்தூக்கிப் பார்க்கில் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் பெரும்பாலோர் அம்மதத்தில் உண்மையையும் சீர்திருத்த நலனையும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர் என்பது எமது துணிபு. எக்தேந்த விஷயங்களை, இந்தப் பாகத்து முஸ்லீம்கள் பெரும்பாலோர் இஸ்லாம் மதத்திற்கு மிகவும் ஆதாரமானவை என்று கருதியிருக்கின்றார்களோ, அந்த விஷயங்கள் எல்லாம் துருக்கி, அராபு முதலிய நாடுகளில் புறக்கணிக்கப் படுகின்றனவென்பது வெள்ளிடை மலை. பாஷாபிமானத்தைக்கூட உதறித் தள்ளி துருக்கி தற்காலப் போக்கில் முன்னேற விரும்பி, லத்தீன் பாஷையைக் கற்று வருகின்றது. அங்கு முல்லாக்களின் சேட்டையும் ஆதிக்கமும் புதைக்கப்பட்டு விட்டனவென்றே கூறலாம். அந்த நாட்டில் உள்ளவர்கள் இப்பாகங்களில் உள்ள முஸ்லீம்கட்கு எவ்வகையிலும் இளைத்துப் போனவர்களல்லாமலிருக்க, இப்பாகத்தவர்கள் சிலர் சீர்திருத்தங்கட்கு விரோதமாக அமீர் அமானுல்லாவைத் தூற்றியதும், மதம் போச்சென்றதும், சீர்திருத்தமாவதுஎன்று எளனம் புரிந்ததும், மூடப் பிடிவாதக் கொள்கைகளே இஸ்லாம் மதம் என்று அவ்வுயரிய பதத்திற்கே இழுக்கை உண்டாக்கக் கருதியதும் நகைப்புக்கு இடமாய் இருந்தது. சீர்திருத்தக்கார அரசர் அமானுல்லா நாடு விட்டகன்ற காலத்தே, 'எல்லாச் சீர்திருத்தக்காரர்கட்கும் இது தான் கதி' என நம்மைப் பரிகசித்தவர்களும் இருக்கின்றார்கள். நமக்கு ஆப்கன் அரசர் யாராயிருக்கவேண்டுமென்பதைப் பற்றிக் கவலையில்லை; ஆனால் சீர்திருத்தக்காரர் யாராய் இருப்பினும் அவர் ஆப்கன் தேசத்து அமீராக இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இக்கோரிக்கை இப்பொழுது நாதிர்கான் அவர்களை அமீராக நியமிக்கப் பெற்றமையால் ஈடேறியது. இது இந்தியா உள்பட எங்கும் முல்லாக்கள், புரோகிதர்கள், குருக்கள்மார் முதலியவர்களின் ஆதிக்கம் தாழ்ந்து, இனி சீர்திருத்தக்காரர்களால் அறிவுப்பெருக்கு எய்தும் காலத்தையே குறிக்கின்றது என்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

ஜெனரல்-ஜெனரல் என்-அமீர் நாதிர்கானுக்கு ஜே! சீர்திருத்தத்திற்கு ஜே!! ஜே!! ஆப்கானிஸ்தானத்தியவும் காபூலினுடையவும் இஸ்லாம் மதம் உலகெங்கும் பெருக!!!

"திராவிடன்"

---

# முனிசிபல் தலைவர் தேர்தல்

சேலம், கரூர், ஈரோடு, வாணியம்பாடி ஆகிய ஊர்களில் முனிசிபல் தலைவர் ஸ்தானத்திற்குத் தேர்தல் நடைபெற்றதில், முறையே திருவாளர்கள் எஸ். கே. சடகோப முதலியார், டி. எஸ். முத்துகுமாரசாமி பிள்ளை, ஜனாப் கே. ஏ. சேக்தாவூத் சாஹிப் பகதூர், ஜனாப் ஹாஜி அப்துல் ரஹிம் சாஹிப் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

---

தை வளர்க்கச்செய்யும் முறைகளினால் இவருக்கு ஏற்பட்டுள்ள கஷ்டமும் பொல்லாப்பும் மிக அதிகமாகும். தனது சுயாலத்தையும் பெருமையையும் மட்டும் கவனியாத ஓர் மனிதர் தான் இவைகளை எல்லாம் செய்ய முடியுமேயன்றி மற்றவர்கள் செய்ய முடியாததாகும். சற்றேறக்குறைய 1,819லட்ச ரூபாய் வரவுசெலவுள்ள இந்த ஜில்லா போர்டின் நன்மைகள் திரு. செல்வம் இல்லாவிட்டால் ஒரே துவாரத்தில் தான் போய் சேர்ந்திருக்கும். எவ்வளவு கடுமையாயினும், மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய ஓர் தீர்மானத்தை நாம் செய்தால் அக்கட்டளையை உடனே அனுஷ்டான முறையில் செய்யும் திறனும் நம்பிக்கையு முடையவர் திரு: செல்வமாகும். அப்பேர்ப்பட்ட உண்மைசுயமரியாதைத்தலைவர் படத்தைத் திறந்து வைக்கும் பெருமை எனக்குக் கிட்டியதற்கு மீண்டும் மகிழ்ச்சியடைகிறேன் என்று திறந்து வைத்தார்.

அடுத்தபடியாக ஜில்லாபோர்டு உபதலைவர் திரு. எஸ். ஆர் சாமியப்ப முதலியார் அவர்களின் படத்தைத் திறந்து வைக்கும்படி டாக்டர் சுப்பராயன் அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே அவரும் திறந்து வைத்தார்.

பிறகு மாநாடு மாலையில் ஒரு பெரிய கூட்டத்தில் திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம், ஈ. வெ. ராமசாமி, சௌந்திரபாண்டியன் ஆகியவர்கள் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றிப் பேசினார்கள்.

---

# விற்பனை விளம்பரம்

## தொழிலாளருக்கு உதவி

தென்னிந்திய ரயில்வே சதியாலோசனை கேசில் பத்துவருட தண்டனையடைந்து ஜாமீனில் விடப்பட்டிருக்கும் தொழிலாள தலைவர்கள், சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டிருப்பதினால், அந்த அப்பீலை நடத்துவதற்கு வேண்டிய பொருளின்மையால் நாகப்பட்டணம் தொழிலாளர் சங்கத்துக்கு சொந்தமான திருச்சினாப்பள்ளி பெரிய கடை வீதியிலிருக்கும் ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடத்தையும், பொன் மலையிலிருக்கும் இரண்டு புஞ்சை நிலங்களையும் (3 ஏக்கர் 29 செண்டு ஒரு நிலம், 1 ஏக்கர் 25 செண்டு ஒருநிலம்) விற்று செலவு செய்யும்படி நாகப்பட்டினத்திலும் பொன்மலையிலும் 20-9-28-ந்தேதி 19-10-29-ந்தேதியிலும் கூடிய தொழிலாளர் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டிருப்பதினால் ஷை சொத்துக்களை விலைக்கு வாங்கப் பிரியப்படுபவர்கள் திருச்சினாப்பள்ளி தெப்பக்குளம் போஸ்டு, திரு. டி. வி. கே. நாயுடு அவர்களிடம் நேரிலும் கடித மூலமாகவும் தெரிந்து கொள்ளலாமென்று நாகப்பட்டணம் தொழிலாளர் சங்கம், விசேஷ கமிட்டி தலைவர், திரு. டி. கோவிந்தசாமி செட்டியார் தெரிவித்துக் கொள்கிறார்.

(800)

---

# அறிக்கை

## அகில திருவாங்கூர் சமூக சீர்திருத்த மகாநாடு

நவம்பர் 16-ந் தேதியன்று தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்துத் தலைவரவர்கட்கு ஒரு விருந்தளிக்கப் படுவதால், ராவ்பகதூர் எம். கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் மேற்குறித்த மகாநாட்டு நிகழ்ச்சியை டிசம்பர் மாதத்தில் மாற்றிவைத்துக்கொள்ளும்படி விரும்புவதனால், நவம்பர் 15,16, 17ந் தேதிகளில் கூடுவதாக இருந்த இம்மகாநாடு டிசம்பர் மாதத்திலேயே நடாத்தப்படும்.

தேதியும், மற்ற விவரங்களும் பின்னர் அறிக்கையிடப்படும்.

டாக்டர் எம். ஏ. செட்டோ

## 'ட்ருத் சீக்கர்' உண்மை நாடுவோன் என்னும் பத்திரிகையில் காணும்

# ஒரு ஆஸ்திக நாஸ்திக சம்பாஷணை

ஆ:—நீ சாவதற்கு பயப்படுகின்றாயா?

நா:—சிச்சி ஒருக்காலமும் இல்லை. அது ஒன்றே தான் மனிதன் அடைந்து தீரவேண்டியது என்பது எனக்கு தெரியும்

ஆ: எதிர்காலத்தில் நீ அடைய நேரிடக்கூடிய கஷ்டங்களைப்பற்றி ஏதாவது பயப்படுகிறாயா?

நா: கொஞ்சம் கூட எனக்கு அது விஷயத்தில் பயம் கிடையவே கிடையாது.

ஆ: நீ பிசாசை நம்புவதில்லையா?

நா: இல்லை; பிசாசு என்பதுசும்மா மனிதன் நினைத்துக் கொள்ளும் கனவைப்போன்ற உணர்ச்சியாகும்.

ஆ: யாராவது இறந்த பிறகு தண்டிக்கப்படுவார்கள் என்பதை நம்புகின்றாயா?

நா: நம்ப முடியவே முடியாது. அன்றியும் எதற்காகத் தண்டிப்பது?

ஆ: செத்த பிறகு நீ இப்போதுள்ள உணர்ச்சியுடன் இருப்பாய் என்பதை ஒப்புக் கொள்ளுகிறாயா?

நா: எப்படி இருக்க முடியும்? இந்தக் கேள்வியே எனக்குப் புரியவில்லை.

ஆ: தேவ தூதர்களையாவது நம்புகின்றாயா?

நா: அப்படி என்றால் என்ன?

ஆ: கடவுளால் தூதர்களையாவது மகான்களையாவது அனுப்பப்படுகிறது என்பதை நம்புகின்றாயா?

நா: நான் நம்புவதே கிடையாது. தேவ தூதர்களும் மகான்களும் மனிதர்களால் கற்பிக்கப்படுவதேயல்லாமல் அப்படி என்று யாரும் இல்லை.

ஆ: இறந்துபோன மனிதர்களில் பலர் வணங்கத் தகுந்த ஆவி ரூபமாய் இந்த உலகத்தில் இருக்கின்றார்கள் என்பதை நம்புகின்றாயா?

நா: ஆவிகளில் வணங்கத் தகுந்த ஆவி என்ற ஒன்று எப்படி தனித்திருக்க முடியும்? புகைகளில் ஒரு புகை தனித்திருக்க முடியுமா?

ஆ: வேதத்திலும் பஞ்சாங்கத்திலும் (ஆல்மனக்கிலும்) எது நம்பக் கூடியது?

நா: வேதத்தைவிட ஆல்மனாக் என்னும்பஞ்சாங்கமேஅதிக உண்மை கொண்டதாகும்.

ஆ: சரி இவைகளெல்லாம் போகட்டும்; கடைசியாக எந்தவிதமாகவாவது கடவுள் என்பதாக ஒன்றிருக்கும் என்பதையாவது ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா?

நா: கடவுள் என்பதாக ஒன்று இருந்தால் எந்தவிதமாகவாவது இருக்கும் என்று உத்தேசித்ததின் பேரில் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாவாக இருக்கும் என்பதாக நான் நினைப்பதில்லை. ஆனால் கடவுளை நீ அப்படித் தான் நினைத்துக்கொண்டிருக்கிறாயோ?

"ட்ருத் சீக்கர்"

# பொருக்கு மணிகள்

(திரு. ஈ. வே. இராமசாமியின் பேருரைகளில் மிளிர்வன.)

1. உலகில் உள்ள மதங்கள் எல்லாம் குருட்டு நம்பிக்கை என்கின்ற பூமியின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. ஈ. வெ. ரா.

* * *

2. குருட்டு நம்பிக்கையை அறவே விட்டு பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதானால் ஒரு மதமும் நிலைக்காது. ஈ. வெ. ரா.

* * *

3. அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவாரததை பயத்தால் நம்புகிறவன் பக்குவமடைந்த மனிதனாகான்.

* * * ஈ. வெ. ரா.

4. போராசையில்லா விட்டால் எந்த மனிதனும் தனது புத்திக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாததை ஒரு காலமும் நம்பி பின்பற்ற மாட்டான். ஈ. வெ. ரா.

* * *

5. கடவுள் நம்பிக்கைகூட மனிதனுக்கு அநேகமாய் பேராசையினாலும் பயத்தினாலும் ஏற்படுவதேயல்லாமல் உண்மையைக் கொண்டல்ல. ஈ. வெ ரா.

* * *

6. எந்தக்காரியத்தையும் வெளிப்படையாய்ச் செய்கின்றவன் திருடனானாலும் கொலைகாரனானாலும் அவன் யோக்கியனே. ஈ. வெ. ரா.

* * *

7. ஒழுக்கம் என்பது சொல்லுகின்றபடி நடப்பதும் நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல. ஈ. வெ. ரா.

* * *

8. கடமை என்பதும் தர்மம் என்பதும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடமிருந்து தனக்காக எதை எதை எதிர்பார்க்கின்றானோ அதனைத்தான் மற்றொரு மனிதனுக்கு வலியச் செய்வது. ஈ. வெ. ரா.

* * *

9. கடவுளைக் காப்பாற்ற மக்கள் புறப்பட்டதாலேயே கடவுளின் பலவீனம் விளங்குவதோடு கடவுள்களுக்கு வரவர பலவீனம் ஏற்பட்டு ஆபத்தும் பலப்பட்டுவருகின்றது. ஈ. வெ. ரா.

* * *

10. அரசனும் செல்வவானும் ஜாதிவித்தியாசத்தை ஆதரிக்கவேண்டியவர்களாகின்றார்கள். ஏனெனில், பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்றால் பணத்திலும் உயர்வு தாழ்வு இல்லாமல் போய்விடுமே என்று பணக்காரன் பயப்படுகிறான். ஈ. வெ. ரா.

* * *

11. பிறவியிலும் பணத்திலும் உயர்வு தாழ்வு இல்லையானால் ஆளுவதிலும் ஆளப்படுவதிலும் உயர்வு தாழ்வு இல்லாமல் போய்விடுமே என்று அரசன் பயப்படுகிறான். ஈ. வெ.ரா.

* * *

12. ஆட்சி, பிரபுத்துவம், ஜாதி உயர்வு இம்மூன்றும் உயிர் ஒன்றும் உடல் மூன்றுமாயிருக்கின்றன. ஈ. வெ.ரா.

* * *

13. கொள்ளைக்காரர்களாய் இருந்தவர்களே அரசராகிறார்கள். கொடுமைக்காரர்களாய் இருந்தவர்களே பிரபுக்களாகிறார்கள். அயோக்கியர்களாய் இருந்தவர்களே உயர்ந்த ஜாதிக்காரர்களாகின்றார்கள். ஈ. வெ. ரா.

* * *

14. வேதங்கள் இல்லாவிட்டால் மதங்கள் இருக்கமுடியாது. மதங்கள் இல்ல விட்டால் கடவுள்கள் இருக்கமுடியாது. ஈ. வெ. ரா.

* * *

15. கடவுள்கள் இல்லாவிட்டால் அரசன் இருக்கமுடியாது. அரசன் இல்லாவிட்டால் பணக்காரன் இருக்கமுடியாது. பணக்காரன் இல்லாவிட்டால் உயர்ந்த ஜாதிக்காரன் இருக்கமுடியாது. ஆகவே இவை ஒன்றை ஒன்று பற்றிக்கொண்டிருக்கின்றன. ஈ வெ. ரா.

* * *

16. பெரும்பாலும் சயாலக்காரர்களும் தந்திரக்காரர்களுமே கடவுளையும் வேதத்தையும் ஜாதியையும் உண்டாக்குகிறார்கள். ஈ. வெ. ரா.

* * *

17. மனிதனின் இவ்வுலக வாழ்க்கைக்காக வகுக்கப்பட்ட கொள்கைதான் மதம் என்றால், அந்த மதம் எதுவானாலும் அதைப்பற்றி யோசிக்கத் தயாராயிருக்கிறேன். ஈ. வெ. ரா.

* * *

18 மேல் உலகத்திற்கோ அல்லது கீழ் உலகத்திற்கோ அல்லது செத்த பின் நடக்கும் நடவடிக்கைக்கோ ஏற்பட்டது மதம் என்றால், அது எதுவானாலும் நான் கண்ணெடுத்துக்கூடப்பார்க்க மாட்டேன். ஈ. வெ. ரா.

* * *

19 மனிதனுடையவோ மிருகத்தினுடையவோ மலம் கையிலோ காலிலோ பட்டு விட்டால் தண்ணீர் விட்டு கழுவி விடுகின்றார்கள். ஆனால், மனிதர்கள் சரீரத்தின் மேலோ அல்லது சரீரத்தின் மேல் இருக்கும் துணியின் மேலோ பட்டு விட்டால் குளித்துத் தீரவேண்டும் என்கின்றார்கள். எனவே, இவர்கள் மனிதத் தன்மையுள்ள மனிதர்களா? ஈ. வெ. ரா.

* * *

20. கோயிலை சுத்தப்படுத்த என்று மாட்டையும், சாணியையும், மூத்திரத்தையும் கோயிலுக்குள் கொண்டு போகிறார்கள். ஆனால், மனிதன் அக்கோயிலுள்ள கடவுளை வணங்க என்று உள்ளே போனால் சாமி தீட்டாய் விட்டதென்று கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இவர்கள் அறிவுள்ள மனிதர்களா? ஈ. வெ. ரா.

* * *

21. பணக்கார அரசாங்கமோ பார்ப்பன அரசாங்கமோ ஏற்படுவதை விட பிரிட்டிஷ் அரசாங்கமே மேலானதாகும். ஈ. வெ. ரா.

* * *

22. தந்திரத்திலும் வஞ்சகத்திலும் மக்களின் அறியாமையினாலும் ஆட்சிசெய்யும் அரசாங்கத்தை விட துப்பாக்கியாலும் பீரங்கியினாலும் ஆட்சிசெய்யும் அரசாங்கம் மேலானது. ஈ. வெ. ரா.

* * *

23. கடவுள் உண்டானால் பேய் உண்டு; பேய் உண்டானால் கடவுள் உண்டு; இரண்டும் ஒரே தத்துவம் கொண்டது. ஈ. வெ. ரா.

* * *

24. கடவுளும் பேயும் மனிதர்களின் மனதிற்குத் தோன்றக் கூடியவைகளே; தவிர பிரத்தியக்ஷத்திற்கோ அனுபவத்திற்கோ தோன்றக் கூடியதல்ல. ஈ. வெ. ரா.

* 0 *

25 கடவுளும் பேயும் "அறிவிற்கும் மனதிற்கும் வாக்கிற்கும்" கூட எட்டாத வஸ்துக்கள். ஈ. வெ ரா.

* * *

26. கடவுளும்பேயும் "நம்பினவர்க்குண்டு நம்பாதவர்க்கில்லை, உண்டென்பார்க்குண்டு, இல்லை என்பார்க்கில்லை" மனமே காரணம் என்கின்ற நிபந்தனைகள் மீது இருப்பவைகள். ஈ. வெ. ரா.

* * *

27 குற்றம் என்பது நிர்ப்பந்தமில்லாமலே ஒரு மனிதன் தான் எதை எதை செய்ய பயப்படுகிறானோ மறுக்கிறானோ அதை மற்றொரு மனிதன் செய்தால்தான் குற்றமாகும். ஈ. வெ. ரா.

* * *

28. எந்தக்காரியங்கள் ஒருமனிதன் தான் அடிக்கடி செய்ய நினைத்தும் மற்றவர்கள் அறியாதபடி செய்தும் வேறு பல நிர்ப்பந்தங்களால் இச்சைக்கு விரோதமாய் செய்ய முடியாமல் இருந்ததுமாய் இருக்கின்றனவோ, அந்தக்காரியங்களை மற்றவர்கள் செய்தால் அது எப்படிப்பட்ட காரியமானாலும் ஒருக்காலமும் குற்றமாகாது. ஈ. வெ. ரா.

* * *

29 ஒரு மனிதன் ஒரு பெண்ணைப் பார்த்து ஆசைப்படுவது, ஒரு பதவியைப் பார்த்து ஆசைப்படுவதற்கும் ஒரு வஸ்துவைப் பார்த்து ஆசைப்படுவதற்கும் ஒப்பான காரியம் தானே தவிர, மற்றப்படி அது ஒரு தனிப்பட்ட குற்றமோ அல்லது மேற்கண்ட மற்றவைகளுக்கு மேற்பட்ட குற்றமோ ஆகிவிடாது. மற்றென்ன குற்றமென்றால் பொறுமையடக்க சக்தியில்லை என்கின்ற பலவீன குற்றம் ஆகும். ஈ. வெ. ரா.

* * *

30. மனிதன் சட்டமோ மதக்

கொள்கையோ ஏற்படுத்த வேண்டுமானால் ஐம்புலன்களின் இயற்கை உணர்ச்சிக்கும் ஆசையின் சுபாவத்திற்கும் ஏற்றவிதமே விதிசெய்ய வேண்டும். அதற்கு விரோதமான கொள்கை கொண்ட மதமும் சட்டமும் மனிதனை அடிமையாக்கி சிறைப் படுத்துவதற்கே ஒப்பாகும்.

ஈ. வெ. ரா.

* * *

31. பாவத்திற்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், காவலுக்குப் பயந்து பதிவிரதையாயிருப்பவளும், மானத்திற்குப் பயந்து பதிவிரதையாயிருப்பவர்ளும், புருஷன் உதைக்கு பயந்து பதிவிரதையாயிருப்பவளும் ஒரேயோக்கியதை உடையவளே யாவாள். ஈ. வெ. ரா.

* * *

32 பாவத்திற்குப்பயந்துதிருடாதவனும், காவலுக்குப் பயந்துதிருடாதவனும் உதைக்குப் பயந்து திருடாதவனும், மானத்திற்குப்பயந்துதிருடாதவனும், ஒரேவிதயோக்கியதையுடையவனுவான். ஈ. வெ. ரா.

* * *

33. மதக்குறி என்பது மாட்டுமந்தைக்காரன் தனதுமாடுகளுக்குப்போடும் அடையாளம் போலவே மதத்தலைவன் தனது மதத்தைப் பின் பற்றுகின்றவர்கள் என்பதைக்காட்ட ஏற்படுத்தப்பட்ட குறியேயாகும்.

ஈ. வெ. ரா

* * *

34 இந்து மதத்தின் கல்வித்தெய்வமும், செல்வதெய்வமும், பெண்தெய்வங்களாயிருந்தும் இந்துமதக்கொள்கையின்படி பெண்களுக்கு கல்வியும் சொத்துக்களும் இருக்கயிடமில்லை.

ஈ. வெ. ரா.

* * *

35. இந்தியாவில் காகிதம், புஸ்தகம், எழுத்து, எழுது கருவி எல்லாம் சரஸ்வதியாக பாவிக்கப்பட்டு வணங்கிவந்தும் 100க்கு 5 பேர்களே படித்திருக்கின்றார்கள். ஈ. வெ.ரா.

* * *

36 மேல் நாட்டில் காகிதங்களினால் மலம் துடைத்து சரஸ்வதியை அலட்சியம் செய்தும் அங்கு 100க்கு 90 பேர்கள் படித்திருக்கிறார்கள்.

ஈ. வெ. ரா.

* * *

37. இந்தியாவில் உள்ள தொழிலாளிகள் தங்கள் ஆயுதங்களை யெல்லாம் சரஸ்வதியாகக் கருதி பூஜை செய்தும், இந்தியர்கள்தொழிலில்லாமல் கப்பலேறி வேறு நாட்டிற்குக் கும்பல் கும்பலாய்ப் போய் மடிகிறார்கள். ஈ. வெ. ரா.

* * *

38. கல்லை கடவுளாக்கும் மந்திரங்கள் ஏன் ஒருமனிதனை மற்ற மனிதனுக்குச் சமத்துவமான மனிதனாக்கக்கூடாது? ஈ. வெ. ரா.

* * *

39. மதங்கள் எல்லாம் கடவுளாலாவது அல்லது கடவுள் அவதாரங்களாலாவது, அல்லது கடவுள் தூதராலாவது ஆக்கப்பட்டிருக்குமானால்ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்கும் சண்டை ஏன்? ஈ வெ. ரா.

* * *

40. வேதங்கள் எல்லாம் கடவுள் வாக்காய் அல்லது கடவுள் சித்தமாய் இருக்குமானால் ஒன்றுக்கொன்று மாறுபடுவானேன்? எல்லாமக்களும் ஒன்றையே ஒப்புக்கொள்ள மறுப்பானேன்? ஈ. வெ ரா.

* * *

41 ஒரு மதத்தலைவனின் கொள்கையோ ஒழுக்கமோ நல்லதாயிருக்கின்றது என்பதற்காக அந்த மதம் உயர்ந்ததாகிவிடாது. ஆனால், அந்த மதத்தின் மேன்மை அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் நடவடிக்கையைப் பொருத்திருக்கின்றது.

ஈ. வெ ரா.

* * *

42 சுதந்திரமான காதலுக்கு இடமிருந்தால்தான் ஒரு நாடோ ஒரு சமூகமோ அறிவு அன்பு நாகரீகம் தாக்ஷண்யம் முதலியவைகளில் பெருக்கமடையும். நிர்ப்பந்த காதல் இருக்குமிடத்தில் மிருகத் தன்மையும் அடிமைத்தன்மையும் தான் பெருகும். ஈ. வெ ரா.

* * *

43. பெண்களுக்குமாத்திரம் கற்பு நிர்ப்பந்தமாய்வைத்ததாலேயே ஆண்கள் விபசாரிகளாக வேண்டிதாய் விட்டது. ஈ வெ. ரா.

* * *

44. விதவைத்தன்மை இல்லாமலிருந்தால் அரைபாகம் விபசாரத்தன்மைகுறைந்திருக்கும் ஈ வெ. ரா.

* * *

45. இவர்கள் என்ன சொல்லுவார்கள், அவர்கள் என்ன நினைப்பார்கள், என்று நினைக்கிற தன்மை ஒருவித அடிமைத் தன்மையாகும்.

ஈ. வெ. ரா.

* * *

46. பிரதிநிதித்துவத்தாலும் ஓட்டுகளாலும் எல்லா சீர்திருத்தமும் செய்து விடலாம் என்று நினைப்பது முடியாத காரியமாகும் சில சீர்திருத்தங்கள் ஏதேச்சாதிகாரத்தாலேயே செய்தாக வேண்டும். ஈ. வெ. ரா.

* * *

47. உண்மையான யோக்கியன் சர்க்காருக்கோ அல்லது பொது ஜனங்களுக்கோ நல்லவனாக இருக்க முடியாது. ஈ. வெ. ரா.

* * *

48. மனிதன் பெண்களை தன்னுடைய ஒரு சொத்தாக மதிக்கிறானேயொழிய தன்னைப் போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள ஜீவன் என்று மதிப்பதில்லை. ஈ. வெ. ரா.

* * *

49. எந்த நாட்டாரும் பெண்களை அடிமையாக மதித்து பந்தோபஸ்தாகத்தான்வைத்திருக்கிறார்கள் உதாரணமாக வெள்ளைக்காரர்கள் பெண்களுக்கு பூட்சுகளில் குதி 3 அங்குலம 4 அங்குலம் உயரம் வைத்து, ஓடாமல இருக்கும்படியும், சைனாக்காரர்கள் காலுக்கு இரும்பு பூட்சு போட்டு வளராமல் தடுத்து ஓட முடியாத படியும், துருக்கியரும் அராபியரும மூடி இட்டு மூட்டைபோல் செய்து ஓடமுடியாதபடியும், இந்தியர்கள் காலிலும் கையிலும் பெரும் பெரும் காப்பு (காவல்) போட்டு ஓடாமது படியும் செய்துதான் வைத்திருக்கிறார்கள். ஈ. வெ ரா.

* * *

50. வேண்டுதலை வேண்டுதலை வேண்டுதலை என்று பார்ப்பனரல்லாதார் ஆண்களும் பெண்களும் தலைமொட்டை அடித்துக்கொள்வது போல பார்ப்பனர்களில் யாராவது மொட்டை அடித்துக்கொள்ளுகின்றார்களா? ஈ. வெ. ரா.

* * *

51, எந்தபார்ப்பனராவது வேஷம் போட்டு ஆடுவதோ, செடில் குத்திக் கொள்ளுவதோ, அலகுக் குத்திக் கொள்ளுவதோ, கன்னத்திலோ நாக்கிலோ கம்பியைக் குத்திக் கொள்ளுவதோ, ஆகிய காரியங்களைச் செய்கிறார்களா? கோயில் கட்டுகின்றார்களா? ஈ. வெ. ரா.

* * *

52 எந்த பார்ப்பனராவது சத்திரம் கட்டி எல்லா மக்களுக்கும் சாப்பாடு போடுகின்றார்களா? எங்காவது தமிழ் பள்ளிக்கூடம்கட்டி இருக்கின்றார்களா? ஈ. வெ. ரா

* * *

53. சடங்கு,பண்டிகை, உற்சவம் இம்மூன்றும் மக்களை பொருளாதாரத் துறையில் அடிமையாக்கி வைப்பதற்காகவே இருந்து வருகின்றன.

ஈ.வெ.ரா.

* * *

54. மேலுலகம் மோக்ஷம் நரகம் இம்மூன்றும் மனிதனை மூடனாகவும் பயங்காளியாகவும், அடிமையாகவுமே ஏற்படுத்தப்பட்டவை. ஈ.வெ.ரா.

* * *

55. "மேலுலகம்" என்பதும் "தேவலோகம்" என்பதும் கண்ணினால் பார்க்கக்கூடியவைகளாகவோ மனிதன் போய்வரக் கூடியவைகளாகவோ இருந்திருந்தால் பார்ப்பனர்கள் இவ்வளவு புளுகு புளுகி இருக்கமாட்டார்கள். ஈ வெ. ரா.

* * *

56. இப்பொழுது மத சம்பந்தமாகவோ சாஸ்திர சம்பந்தமாகவோ கடவுள் சம்பந்தமாகவோ உள்ளபுரட்டுகளுக்கெல்லாம் ஒரே ஒரு சமாதானம் தான் இருந்துவருகின்றது. அது என்னவென்றால் "நம்பாதவன் நாஸ்திகன்" என்பதுவே. ஈ. வெ. ரா.

* * *

57. என்ன கஷ்டப்பட்டாவது மறு உலகத்தை தயவு செய்து மறந்துவிட்டு இந்த உலக நடவடிக்கைகளுக்கு உங்களுடைய வாழ்க்கையை பொருத்துங்கள், ஈ.வெ.ரா.

* * *

58. ஆண்களுக்கு கற்பு இருந்தால் அது தானாகவே பெண்களையும் கற்பாக இருக்கச்செய்யும். பெண்களுக்கு கற்பு இருந்தால் அது ஆண்களை கற்புடன் இருக்கச் செய்ய உதவாது.

ஈ. வெ. ரா.

* * *

59. மதம் என்றால் என்ன? அது எத்தனை? எப்பொழுது செய்தது? யார் செய்தது? யாருக்காகசெய்தது? எது சரி? எது தப்பு? என்பவைகளைத் தேடிக்கொண்டு திரிவதைவிட இயற்கை என்ன சொல்லுகின்றது? உன் புத்தி என்னசொல்லுகின்றது? என்பதைக் கவனித்தால், அதுசீக்கிரத்தில் உன்னை நல்வாழ்க்கையில் (உனக்குத் திருப்தியும் சாந்தியும் உண்டாகக்கூடிய வாழ்க்கையில்) கொண்டு விட்டுவிடும். ஈ. வெ. ரா.

* * *

60. மதத்தில் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு இடமிருந்தாலென்ன? இல்லாவிட்டால் என்ன? அது மக்கள் வாழ்க்கைக்கு அவசியமா? இல்லையா? அதனால் மக்கள் கஷ்டம் நீங்குமா? நீங்காதா? என்பதைத்தான் கவனிக்க வேண்டும். ஈ.வெ.ரா.

* * *

61. மதத்தை நம்பாதவர்களும் மதப்படி நடக்காதவர்களுமே மதம் மதம் என்று நம்மைத் தொல்லைப் படுத்துகிறார்கள். ஈ.வெ.ரா.

* * *

62 என் கஷ்டத்தை சாஸ்திரமும் மதமும் கடவுளும் கவனிக்கவில்லை. ஆனால் நான் ஏன் அவைகளை மதிக்கவேண்டும். ஈ. வெ, ரா

* * *

62 மனிதனின் அடிமைத்தனத்திற்கு மூன்று காரியங்கள் இப்போது முக்கியமாய் இருந்து வருகின்றன.

* * *

அ. யாரோ ஒருவன், எதோ ஒரு காலத்திலென்னமோ ஒருபாஷையில் யாருக்காகவோ, என்ன உத்தேசித்தின் மீதோ, சொன்னதாக யாராலோ எழுதிவைக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு பின்பற்ற சம்மதிப்பது.

ஆ. மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று பயப்படுவது.

இ. நாம் இறந்து போனால் நமது பெண்டு பிள்ளைகளுக்கு என்ன கதி என்று நினைப்பது. ஈ. வெ. ரா.

* * *

63. காங்கிரசுக்காரர்கள் சீர்திருத்தக்காரரையும் வைதிகர்களையும் ஏமாற்றி அதிகாரமும் பதவியும் பணமும் சம்பாதிக்கப் பார்க்கிறார்கள். உதாரணமாக,

வைதீகர்களிடம் சென்று ஓ! வைதிகர்களே! எனக்கு ஓட்டுக்கொடுங்கள்; நான்சட்டசபைக்குச்சென்று எவ்வித சீர்திருத்த சட்டமும்செய்யப்படாமல் முட்டுக்கட்டை போட்டு காப்பாற்றுகிறேன் என்கின்றார்கள். ஈ.வெ.ரா.


* * *

சீர்திருத்தக்காரர்களிடம் வந்து ஓ! சீர்திருத்தக்காரர்களே! எனக்கு ஓட்டுக் கொடுத்து சட்டசபைக்கு அனுப்புங்கள்; எவ்வித சீர்திருத்தம் வேண்டுமானாலும் சட்டம் செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி இருவர்களையும் ஏமாற்றுகிறார்கள். ஈ. வெ. ரா,

* * *

64. கோயில்கள் சாமிக்காக கட்டியதல்ல மற்றெதற்காக என்றால்,ஜாதி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 நவம்பர் 3உ

# மதப் பித்து

நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு எப்படி பிறவியின் காரணமாகவே ஜாதி கற்பிக்கப்பட்டு, அந்த ஜாதியின் பேரால் அவன் அழைக்கவும் பட்டு, அந்த மனிதனும் அதை ஒப்புக் கொண்டு தன்னை இன்ன ஜாதியான் என்று எண்ணிக் கொள்ளுகின்றானோ; அது போலவே மதமும் ஒரு மனிதனுக்கும் பிறவிக் காரணமாகவே கற்பிக்கப்பட்டு, அவனும் அந்த மதத்தின் பேரால் அழைக்கப்பட்டு, தானும் அதை ஒப்புக் கொண்டு தன்னை இன்ன மதத்தான் என்றே எண்ணிக் கொண்டு வருகின்றான்.

ஆனால், ஜாதியானது பிறவியின் காரணமாக ஏற்படுகின்றதென்று ஜாதியைக் கற்பிக்கும் சாஸ்திரங்கள் என்பவைகளால் சொல்லப்பட்டுவருவதால், பிறவியின் காரணமாக ஜாதி நிர்ணயிக்கிறவர்களுக்கு மேல்கண்ட ஆதாரங்களை சொல்லிக் கொள்ள இடமுண்டு. ஆனால் மதமானது பிறவியின் காரணமாக ஏற்படுவதாக இன்றுவரை எந்த மதமும் அது சம்பந்தப்பட்ட சாஸ்திரமும் சொல்லவே இல்லை. மதம் என்பது கொள்கை என்றும், அந்தக் கொள்கையானது எந்த மனிதனும் எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளவும், தள்ளவும் உரிமையுடையது என்றுமே தான் சொல்லப்பட்டு வருவதுடன், அந்தப்படியே அநேக மனிதர்கள் அடிக்கடி மதம் மாறிக்கொண்டும் வருகிறார்கள். அதாவது இந்துக்கள் என்பவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, மகமதியர்களாகவோ, பௌத்தர்களாகவோ, பிரம்ம சமாஜிகளாகவோ, நாஸ்திகர்களாகவோ மாறுவதும்; ஒரு கிறிஸ்துவர் மகமதியராகவோ, இந்துவாகவோ, பௌத்தராகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும்; ஒரு மகமதியர் கிறிஸ்துவராகவோ, இந்துவாகவோ, பௌத்தராகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும்; ஒரு பௌத்தர் இந்துவாகவோ, மகமதியராகவோ, கிறிஸ்தவராகவோ நாஸ்திகராகவோ மாறுவதும்; ஒரு நாஸ்திகர் இந்துவாகவோ மகமதியராகவோ கிறிஸ்துவராகவோ பௌத்தராகவோ மாறுவதும்; இவர்கள் அடிக்கடி உள் பிரிவு மதக்காரர்களாக, அதாவது, சைவன் வைணவனாகவும் வேளாளன் சைவனாகவும் சைவன் சமணனாகவும் சமணன் சைவனாகவும் மற்றும் இதுபோலவே அடிக்கடி மாறுவதும்; சர்வசாதாரணமாகப்பார்த்துவருகின்றோம். இந்த முறையில் தான் இன்றைய தினம் உலகத்தில் சுமார் 2000 வருஷத்திற்கு முன் ஏற்பட்டதான பௌத்த மதத்தில் 55 கோடி மக்களும், 2000 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட கிறிஸ்துவ மதத்திற்கு 50 கோடி மக்களும், 1300 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட மகமதிய மதத்திற்கு 23 கோடி மக்களும் காலமே குறிப்பிட முடியாததான அவ்வளவு பழைய இந்து மதத்திற்கு 20 கோடி மக்களும் பௌத்த, கிறிஸ்துவ, மகமதிய ஆகிய மதங்களுக்கு முன்னால் இருந்துவந்த யூத மதத்திற்கு ஒரே ஒரு கோடி மக்களும், மதம் குறிப்பிட இயலாத மக்கள் 17 கோடியுமாக இருந்து வருகின்றார்கள். இவர்கள் இத்தப்படி எப்படி உண்டாயிருக்க முடியும்? அநேகமாக இவ்வளவு ஜனங்களும் ஏதோ ஒரு மதத்திலிருந்தோ அல்லது மதமே இல்லாதவர்களாயிருந்தோதான் புதிதாக ஏற்பட்ட மதப் பிரசாரங்களின் மூலமாக அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இன்றைய தினம் இருக்க வேண்டும். இந்தக் கொள்கைப்படி பார்த்தாலே மக்களுக்கு மதம் பிறவியின் காரணம் அல்லவென்பதும், அவரவர்கள் மனப்பான்மையும், மற்றவர்களின் பிரசாரமும் காரணமென்றும் விளங்கும். அன்றியும் இந்தக் கொள்கைப்படியே இனியும் உலகத்தில் எத்தனை மதம் வேண்டுமானாலும் உற்பத்தியாகலாம் என்பதும், அவைகளுக்கெல்லாம் இப்போதிருக்கும் மக்களேதான் பெரும்பகுதியும் போய் அப்புது மதங்களில் சேர்ந்தாக வேண்டுமென்பதும் நன்றாய் விளங்கும். எனவே, மதத்தையும் ஜாதியையும் இரண்டையும் பார்க்கும்போது மதத்தைவிட ஜாதியே அதிக பலமுடையதாகும். ஏனெனில், ஜாதி பிறவியில் உண்டாவது; அது மாற்ற முடியாதது என்று சொல்லப்படுவது; ஆனால் மதமோ கொள்கையின் மூலம் ஏற்படுவது; அது மன உணர்ச்சிக்கும், அறிவு உணர்ச்சிக்கும் தக்கபடி அடிக்கடி மாற்றிக்கொள்ள உரிமையுடையதென்பதாகும். ஆகவே, பிறவியினால் ஏற்படுகின்றது என்று சொல்லும்படியான ஜாதியை அடியோடு அழித்து எல்லா மக்களையும் ஒன்று சேர்த்து ஒற்றுமையையும் சகோதரத் தன்மையையும் உண்டாக்கவேண்டும் என்பதாக கூறப்படும் மக்களின் முயற்சியை ஒப்புக்கொண்டு ஆதரவளிக்கச் சம்மதிப்பதாகச் சொல்லும் மக்கள் கேவலம் கொள்கையாலும் அறிவு உணர்ச்சியாலும் இருக்கும் மதத்தை அழித்து மக்களை ஒன்று சேர்க்க முயற்சிப்பதில் என்ன ஆட்சேபனை இருக்கக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதன் அறிவு வளர்ச்சியின் மூலமும் ஆராய்ச்சித் தெளிவின் மூலமும் அசௌகரியத்தின் மூலமும் சுயநலத்தின் மூலமும் அடிக்கடி மாற்றிக்கொள்ள சுதந்திரம் இருக்கும். மதத்தைப்பற்றி பிடிவாதம் காட்டுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதும் நமக்கு விளங்கவில்லை. அநேகமாக மதங்களை இன்றைய தினம் வலியுறுத்துபவர்களில் அநேகர் தங்கள் மதத்திற்குச் சொல்லும் ஆதாரங்கள் எல்லாம் மதத்தை உண்டாக்கின மதத் தலைவர் பெரியார் என்றும், அவர்கள் அநேக அற்புதங்கள் செய்த பெரியார்கள் என்றும், தங்கள் தங்கள் மதம் இன்ன இன்ன பரீக்ஷைக்கு நின்று வெற்றி பெற்றது என்றும் சொல்வதன் மூலம் அவைகளைப் பெருமைப் படுத்தி பேசுகிறார்களே அன்றி, அவைகளில் ஏதாவது ஒன்று இன்றைய தினம் நடைபெற முடியுமா என்பதைப்பற்றி கேட்போமானால், கோபித்துக் கொள்ளுகின்றார்களே ஒழிய வேறு சமாதானம் கிடையாது. அதுதான் போகட்டுமென்றாலோ அம்மதக் கொள்கைகளைப்பற்றியும் அதே மாதிரி மதத்திற்காக கொள்கைகள் என்று சொல்லப்படுவதல்லாமல் கொள்கைக்காக மதமென்றோ, சௌகரியத்திற்காக கொள்கைகள் என்றோ, பகுத்தறிவுக்கு ஒப்புகின்றதா என்றோ ஒருக்காலமும் சொல்ல முடியாதவைகளாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் மதத்திற்காக கொலைகளும், கொள்ளைகளும், யுத்தங்களும், உயிர்விடத்தக்க வீரங்களும் நாட்டில் மலிந்து கிடக்கின்றன. அதுதான் போகட்டுமென்றாலோ, மதத்திற்காக செலவாகும் பணங்களும், நேரங்களும், அறிவுகளும், ஊக்கங்களும் கணக்குக்கடங்காதவைகளாகவே இருக்கின்றன.

இந்த மதம் என்பதைப் பொறுத்தவரை ஏற்படும் செலவுகள் சகிக்கமுடியாததாயிருப்பதோடு அதனால் நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகள் அளவிடமுடியாதனவாகவும் இருக்கின்றன.

மற்ற மதக்காரர்கள் எல்லாம் மதத்தின் பேரால் பணங்களை வசூல் செய்து மதத்தில் உள்ள மக்களுக்கு ஒற்றுமை, கல்வி, தொழில், ஒழுக்கம் ஆகியவைகளை உண்டாக்குவதற்கும், மேற்கொண்டு அன்னிய மதத்தில் இருக்கும் மக்களை தங்கள் மதத்தில் சேர்ப்பதற்கும் உபயோகப் படுத்துகின்றார்கள், ஆனால், இந்து மதக்காரர்கள் என்பவர்களோ மற்ற மதக்காரர்கள் எல்லோரையும் விட அதிகமான பணம் சம்பாதித்து ஒற்றுமை இல்லாமலும், கல்வி இல்லாமலும், தொழில் இல்லாமலும், ஒழுக்கம் இல்லாமலும் செய்து வந்திருப்பதுடன் அன்னிய மதத்தில் போய் சேரவும் தாராளமாய் நிர்ப்பந்தமும் இடமும் தந்து வந்திருக்கிறார்கள்.

உதாரணமாக இன்றைக்கு 50 வருஷ ஜன கணிதப்படி இந்துக்கள் 50 வருஷத்திற்கு முன்னுள்ள ஜனத் தொகைப்படி நூற்றுக்கு 10 பேர்கள் வீதம் ஜனத் தொகையில் குறைந்திருக்கிறார்கள். மற்றமதக்காரர்களோ நூற்றுக்கு 25 முதல் 40 வரை உயர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் யார் என்று பார்த்தால் "தெய்வீகத் தன்மைபொருந்தியதும் ஆத்மார்த்தம் நிரம்பியதும், தெய்வத்தன்மை பொருந்திய ரிஷிகளாலும், முனிவர்களாலும், ஆச்சாரியர்களாலும் சமய குரவர்களாலும், அவதார புருஷர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்ட ஒப்புயர்வற்ற சனாதன வேத இந்து மதத்தில் இருந்து

இசா மக்களால் இழைக்கப்பட்ட தங்களுடைய கொடுமைகளிலிருந்து தப்புவிப்பதற்காகவென்றே ஓடிப் போனவர்களாவார்கள்."

எந்த மத ஆச்சாரியனும் மத பக்தனும் இது விஷயத்தைப்பற்றி கிஞ்சிற்றாவது ஆலோசித்து கடுகளவு கண்ணீராவது கொட்டினவன் இல்லை. இப்படிப்பட்டதாலேயே தேய்ந்து போய்க்கொண்டிருக்கும் மதத்திற்காக ஏற்படும் செலவுகளையும், மேனிக்கேட்டையும், அறிவுத் தடையையும் நீக்கவோ, கடுகளவாவது குறைக்கவோ எவனும் வெளி வந்தவனுமல்ல. ஆனால், இப்படிப்பட்ட இந்து மதத்திலிருந்து, இப்படிப்பட்ட இந்துக்களின் கல்நெஞ்சம் படைத்த ஒழுக்க ஈனங்களிலிருந்து, விலகிக் கொள்ளக் கருதி சென்ற காலத்தில் சிலர் மகமதியர்களாகி விட்டதாலும், கிறிஸ்தவர்களாகி விட்டதாலும் அவற்றை நாம் பாராட்டியதாலும் சில நண்பர்களுக்கு மிக்க மனத்தாங்கல் ஏற்பட்டு நம்மீது காய்ந்து விழுந்து சுமார் 15 கடிதம் வரையில் எழுதியிருக்கின்றார்கள். அவைகள் மலேயா நாட்டிலிருந்தும், பர்மா தேசத்திலிருந்தும், கொழும்பு சீமையிலிருந்தும், இந்திய உள்நாட்டிலிருந்தும் வந்தவைகளாகும். அப்படி எழுதியிருப்பவர்களில் அநேகம்பேர்,

"நீர்தான் மதம் வேண்டியதில்லை என்று பேசவும், எழுதவும் செய்கின்றீரே? அப்படியிருக்க மகமதிய மதத்தை ஏன் ஆதரிக்கிறீர்? அதில் போய்ச் சேர்ந்தவர்களை ஏன் பாராட்டுகிறீர்?"

என்று எழுதி யிருக்கிறார்கள். ஆனால் இப்படி எழுதினவர்கள் எல்லோரும் மதமே வேண்டாம் என்கின்ற கொள்கையை ஒப்புக்கொண்டு நமக்கு புத்திமதி கூறினவர்களா? அல்லது இந்து மதத்தை விட்டு மக்கள் வேறு மதத்திற்கு போகின்றார்களா என்கின்ற மதப் பித்துக்கொண்டு எழுதினவர்களா? என்று பார்ப்போமானால் ஏறக்குறைய அதிகம் பேர் மதப்பித்துக்கொண்டு இந்து மதம் போய் விடுமே என்றோ அல்லது மகமதிய மதம் மாத்திரம் என்ன உயர்ந்தமதம் என்றோ, கருதித் தான் எழுதி இருக்கவேண்டும் என்பதாகவே நினைக்கின்றோம்.

அவர்களுக்கு ஒரு பதில் சொல்ல விரும்புகின்றோம். அதாவது இந்து மதத்தைவிட மகமதிய மதம் மேலானதே. ஏனென்றால், அதில் ஒற்றுமை சமத்துவம் விக்கிரகாராதனை மறுப்பு ஆகியவைகள் இருக்கின்றது. அந்த மதம் இன்று துருக்கி, ஆப்கானிஸ்தானம் ஈஜிப்டு முதலிய நாடுகளை ஆட்சி கொண்டு வருகின்றது; துணிகரமான சீர்திருத்தத்திற்கு முனைந்து நின்று வெற்றி பெற்று வருகின்றது. இவைகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளுவதானாலும் இந்துவாயிருப்பதின் காரணத்தால் தீண்டப்படாதவராகவும், காணப்படாதவராகவும், தெருவில் நடக்கப்படாதவராகவும், "கடவுள் சந்நிதானத்தில்" நிற்கப்படாதவராகவும் இருக்கின்றது ஆறறிவுபடைத்து, "ஆண்டவனுடைய தூய திருக்கோயிலாகவுடைய" சரீரத்தைத் தாங்கி நிற்கும் ஒரு மனிதன் இந்துமதத்தை விட்டு மகம்மதிய மதம் புகுந்தானானால் அப்போதே சூரியனைக் கண்ட குமரி இருட்டு பறந்தோடுவதுபோல் மறைந்து போகின்றதென்பது மட்டும் உறுதி! உறுதி!! உறுதி!!!

இதை யாராவது மறுக்கின்றார்களா என்று கேட்கின்றோம். மற்றபடி 'மேல் லோகமும்' 'ஆண்டவன் சன்னிதானமும்' 'பாவமன்னிப்பும்' இந்து மதத்தை விட மகமதிய மதத்தில் மிக்க சமீபமென்றோ மிக்க சுலபமென்றோ நாம் ஒருசிறிதும் ஒப்புக்கொள்ளுவதில்லை. தவிர இந்து மதத்தில் இருக்கின்ற ஒரு 'சக்கிலியோ' 'பறையனோ' 'பள்ளனோ' இன்றையதினம் 'இந்து மதத்தை விட்டு விட்டேன்' என்று சொல்லுவானானால் அவனை ஒருக்காலமும் தொட்டுக் கொள்ளவோ, தெருவில் நடக்கவிடவோ, பக்கத்தில்வர சம்மதிக்கவோ எவரும் ஒப்புக்கொள்ளுவதில்லை. இந்த நிலையில் உள்ள மக்களிடம் தாழ்த்தப்பட்டவர்கள் மதத்தை விட்டுவிடுவதினால் மாத்திரம் எப்படி சுதந்திரமடையக் கூடியவர்களாகி விடுவார்கள்? ஆனால், மகம்மதியர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ ஆகிவிடாமல் கண்டிப்பாக சட்டத்தில் ஆட்சேபனை இல்லை என்பதுடன் சிறப்பாக மகம்மதியர்களாகி விட்டால் சட்டத்தில் ஆட்சேபனை இல்லாததோடு அனுபவத்திலும் ஆட்சேபனையில்லாமல் போய் விடுகின்றது. பொதுவாக நமது லட்சியம் ஜாதிமத வித்தியாசம் ஆகிய இரண்டும் ஒழிந்து அவைகளால் ஏற்படும் மூட நம்பிக்கைகளும் ஒழிய வேண்டுமென்பதாகும். மத வித்தியாசம் ஒழிகின்ற வரையிலும் ஜாதி வித்தியாசம் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால் மத வித்தியாசம் ஒழியப் பாடுபட்டுக் கொண்டிருப்பதுடன் ஜாதிவித்தியாசம் ஒழியச்செய்ய வேண்டிய காரியங்களையும் கூட செய்து கொண்டுதான் இருக்க வேண்டி இருக்கின்றது. ஆகவே அம்முயற்சியில் ஒன்று தான் நாம் இப்போது மகமதிய மதத்தைத் தழுவியவர்களை ஆதரிப்பதும், பாராட்டுவதுமே ஒழிய வேறில்லை. பார்ப்பனர்கள் சமீபகாலமாய் செய்துவரும் சூழ்ச்சிகளை உணர்ந்தவர்கள் இந்து மதத்திற்காகவோ இந்துக்கள் பிறமதம் புகுவதற்காகவோ சிறிதும் அதிருப்தி அடைய முடியாதென்பதே நமது நம்பிக்கை.

குழந்தை மணங்களை தடுக்கும் மசோதாவுக்கு இந்து மதத்தின் பேரால் ஆட்சேபனையும் சால்திரத்தின் பேரால் சத்தியாக்கிரகமும் செய்வதற்கு புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டு பிரசாரமும் பத்திரிகையும் நடத்த பணமும் சேகரித்து வருகின்றார்கள்.

இதுமாத்திரமல்லாமல் இந்துக்களுக்கு சிறப்பாக பார்ப்பனர்களுக்கு (தங்கள் ஆதிக்கத்திற்கு ஆதாரமான பசு) மதத்தைக் காப்பாற்ற காங்கிரசே நல்ல சாதனம் என்று திரு என். சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் பார்ப்பனர்களுக்குச் செய்தி விடுத்து எல்லோரையும் காங்கிரசில் சேரும்படி அழைக்கிறார், அதாவது அவர் சர்க்காரை மத சம்பந்தமான காரியங்களில் பிரவேசிக்க வொட்டாமல் செய்ய வேண்டுமானால் காங்கிரசைக் கைப்பற்றியாக வேண்டும் என்று வியாக்கியானமும் செய்திருக்கிறார். இதிலிருந்து என்ன விளங்குகின்றது என்று பார்த்தால் மதத்தின்பேரால் உள்ள கொடுமைகளை ஒழிக்க சமூகத்துறையிலும் சம்மதிக்க மாட்டோம்; அரசியல் துறையிலும் சம்மதிக்க மாட்டோம் என்று பார்ப்பனர்கள் வைதிக கோலத்துடனும் தேசியக் கோலத்துடனும் சொல்லுவதாக ஏற்படுகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

தவிரவும் நாமும் இந்த ஜாதி வித்தியாசத்தைப் போக்க பிற மதம் புகுவது என்பதையே பிரதானமாகக் கொண்டிருக்கவில்லை. அப்படிச் செய்பவர்களை ஆதரிப்பதொரு பக்கமும் கோயில் பிரவேசம் ஒரு பக்கமும் கோர்ட்டுகளில் விவகாரம் இன்னொரு பக்கமும், சமபந்தி ஒரு பக்கமும், கலப்பு மணம் மற்றொரு பக்கமும், பிரசாரம் இன்னொரு பக்கமும், சட்டம் செய்ய முயற்சி இனியொரு பக்கமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம உரிமையும் சம சந்தர்ப்பமும் கிடைக்க வேறு ஒரு பக்கமும், இப்படி பல வழிகளிலும் முயற்சி எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம், இவைகளுக்கு இடையூறாக ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் தொல்லைகள் விஷமப் பிரசாரங்கள் பழி சுமத்தல்கள் மிரட்டல்கள், ஆபத்துக்கள், மொட்டைக் காகிதங்கள் முதலாகிய தடைகளின் பக்கத்திலிருந்து கவனித்துப் பார்க்கின்றவர்களுக்குத் தெரியுமே ஒழிய, தூரத்திலிருந்து கொண்டு பத்திரிகைகளை மேல் வாரியாய் பார்த்துக்கொண்டு குற்றம்சொல்லப் புறப்படுபவர்களுக்கு அவ்வளவு நன்றாய் உண்மை முழுவதும் விளங்கிவிட முடியாதெனவே சொல்லுவோம். தவிர கடைசியாக ஒன்று சொல்லி இதை முடிக்கின்றோம்.

இனி சமீபகாலத்திற்குள் அதாவது கால் நூற்றாண்டுகளுக்குப்பின் இப்போது இந்துக்களாயிருக்கின்றவர்கள் கண்டிப்பாய் இந்துக்களாக இருக்க முடியவேமுடியாதென்பதை ஒவ்வொரும் மனதில் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும்; வேண்டுமானால் குட்சிக்காரர்களும் சோம்பேறிகளும் இதை ஒப்புக் கொள்ளாமல் வெறும் வாய் வேதாந்தம் பேசக் கூடும். அதாவது "புத்தரால் அழிக்க முடியாத இந்துமதம், மகமதியரால் அழிக்க முடியாத இந்துமதம், வெள்ளைக்காரர்களால் அழிக்க முடியாத இந்துமதம் எத்தனையோ ஆயிரம் வருடங்களாக எத்தனையோ ஆபத்துக்களுக்கு தப்பிவந்த இந்துமதம் இனிதானா அழியப் போகின்றது' என்று பஞ்சகச்சத்தையும் உச்சிக் குடுமையையும், தொந்தி வயிற்றையும் கொண்டவரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம்பேறிகள் கால்மேல்கால் போட்டுக்கொண்டு வயிற்றைத் தடவிக்கொண்டு, பேசலாம். ஆனால் அதில் சிறிதும் உண்மை இருக்க முடியாது ஏனெனில் அந்தக்காலம் வேறு, இந்தக் காலம் வேறு என்னவென்றால் அப்போதைய சவுகரியம் வேறு; இப்போதைய சவுகரியம் வேறு என்பதையும் அது மூட நம்பிக்கைகாலம் இது அறிவு ஆராய்ச்சிகாலம் என்பதையும் கவனித்தால் விளங்கும். அவ்வளவிற்குகூட நாம் போகவேண்டியதில்லை. நம்மில் அநேகர் இன்றைக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் 70, 50, 20 வருஷங்களாக என்னமனப்பான்மையில் இருந்தோம் படிப்படியாக 5, 6 வருஷத்திற்குள் இன்றைக்கு என்ன மனப்பான்மையில் இருக்கின்றோம்? இந்த வீதாசாரத்தை இன்னும் ஒரு இருபத்தி ஐந்து வயதுக்கு பின் வட்டியுடன் வட்டிக்கு வட்டியுடன் சேர்த்து பண்ணிட்டுக் கொடுத்தால் என்ன பலன் ஏற்படும். என்பதை யோசித்துப் பாருங்கள் ஆகவே மதத்தை நேர்முகமாக கட்டிக்கொண்டழுதாலும் மறைமுகமாகக் கட்டிக் கொண்டழுதாலும் விளையும் பலன் ஒன்றேயாகும். இதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இதனால் பின்னால் ஏற்படப் போகும் லாபத்தைப் பார்க்கச் சம்பவம்வாய்த்தவர்கள் தாங்களும் முயற்சி செய்யாததற்கு வருந்துவார்கள் என்றே நம்புகிறோம்.

## சுயமரியாதை இயக்கத்தின் பலன்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு பார்ப்பனர்களும் புராணப்பண்டிதர்களும், புஸ்தகக் கடைக்காரர்களும் புரோகிதக் கூட்டத்தார்களும் எவ்வளவுதான் பழிகள் கூறி விஷமப்பிரசாரம் செய்து வந்தும் நாட்டில் தோன்றியிருக்கும் உணர்ச்சிகளையும் அதனால் ஏற்பட்டிருக்கும் பலன்களையும்பற்றி இரண்டொரு நிகழ்ச்சிகளை குறிப்பிடுகின்றோம்.

பார்ப்பனர்களை எந்தக்காரணம் கொண்டும் நம்புவதென்பதோ அவர்களோடு ஒத்துழைப்பதென்பதோ அவர்கள் கலந்துள்ள கூட்டங்களில் சேர்வதென்பதோ தேர்தல்களில் அவர்களுக்கு ஓட்டுச்செய்வதென்பதோ முதலாகிய காரியங்கள் அடியோடு மறுக்கப்பட்டு வருகின்றது. கோயில்கள் சம்பந்தமான விஷயங்களில் பூஜைகள் அபிஷேகங்கள் உற்சவங்கள் புதுக்கோயில்கள் கட்டுதல் ஆகிய காரியங்களில் அலக்ஷியம் காட்டப்பட்டு வருவதுடன் பல கோயில்கள் அரை குறை

கோவிலில் இருந்தவைகளும் நிறுத்தப்பட்டு விட்டன.

பண்டிகைகள், விரதங்கள் சடங்குகள் முதலியவைகள் அநேகமாக சில இடங்களில் அடியோடு விடப்பட்டும், சில இடங்களில் மிக்க அலக்ஷியமாக ஏதோ நிர்பந்தத்திற்கு நடத்துபவைகளாகவும் காணப்படுகின்றன.

விதவைகள் மணம் என்பதும், கலப்புமணம் என்பதும் தினம் தினம் நடக்கும் விஷயங்களும், நடந்த தேவை விளம்பரங்களும் வெளியான வண்ணமாய் இருந்து வருகின்றன. ஜாதி வித்தியாசம் ஒழித்தல், தீண்டாமை ஒழித்தல் முதலிய வித்தியாசங்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு பயன்கொடுத்து வருகின்றன. அதாவது, நிறும்மக்கள் மகமதியராவதும் கிறிஸ்துவராவதுமான செய்திகள் வெளியாகின்றன. கோயில் பிரவேசம் பல இடங்களில் நடக்கின்றன.

புரோகித விலக்கு சங்கங்கள் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுகின்றன.

மதத்தைப்பற்றிய புரட்டுகள்வெகு தாராளமாய் வெளிப்படுத்தப்படுவதோடு மதப்புரட்டர்கள் எல்லாம் மூலையில் முக்காடிட்டு ஒடுங்கி உட்கார்ந்து கொள்ள வேண்டிய தாக்கிவிட்டன; அன்றியும் அவர்களின் உண்மையான தோல்வியைக் காட்ட அறிகுறி என்னவென்றால் தாங்கள்வாய்திறக்கயோக்கியதை அற்றுப்போய் புத்தியில்லாத பாமரமக்களை ஏவிவிட முயற்சியில் இறங்கி இருப்பதேயாகும்.

இந்துமதப் புரட்டு தேசமெல்லாம் பரவிவருவதுடன், அடுத்தஜனகணிதத்தில் ஒவ்வொருவரும் இந்தியன் அல்லது இந்துவல்லாதவன் என்று சொல்லவேண்டும்என்றும், எந்தக் காரணம் கொண்டு ஜாதியையும் ஜாதிப் பட்டத்தையும் சொல்லக்கூடாதென்றும், நூற்றுக்கணக்கான சங்கங்களும் மகாநாடுகளும் தீர்மானங்கள் செய்தனுப்புவது களுமேயாகும்.

வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்,தேசத்துரோகம்,தேசியத்திற்குவிரோதம் என்று எவ்வளவோ தூரம் பார்ப்பனர்களும் அவர்களது வால்களும் கத்தியும் இப்போது சட்டசபையிலும் சர்க்கார் உத்தியோகத்திலும்ஏற்பட்டு நிலைத்து அனுபவத்திற்கு வந்துவிட்டதோடு பார்ப்பனர்களே தங்கள்வகுப்புக்குள்ள உரிமையை கெஞ்சிக்கேட்கவேண்டிய அளவுக்கு தைரியமாய் வெளியில்வந்து விட்டார்கள், உதாரணமாகசர்க்கார்மதுவிலக்குப்பிரசார ஜில்லா கமிட்டிகள் ஒவ்வொன்றுக்கும்ஒருபார்ப்பனர்என்கின்றகணக்கு வைத்து நியமிக்கவேண்டும் என்று திவான்பகதூர் திரு. ராமச்சந்திரராவே முயற்சி எடுத்துக்கொண்டதோடு தேவஸ்தானக் கமிட்டிகளில் பார்ப்பனர்களுக்கு உண்டான பங்குஏன் கொடுக்கவில்லை என்றுசட்டசபையில் திரு சத்தியமூர்த்தியேபலகேள்விகள் கேட்கவும், இந்தக் கேள்வியை திரு. சத்தியமூர்த்தி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ உரிமையைஒப்புக்கொண்டு கேட்கின்றாரா என்று திரு. சி. எஸ். இரத்தின சபாபதிமுதலியார் கேட்கவும், சர்க்காரார் ஆம் என்று பதில் சொல்லவுமான நிலைமைக்கு வந்து விட்டது.

மற்றும் ராமேஸ்வரம் கோயில் தேவஸ்தான சம்பந்தமான ஒருஉத்தியோக அறிக்கையில் "சுயமரியாதை இயக்கம் தோன்றியபிறகு கோயில் வரும்படி குறைந்து வருகின்றது; ஆதலால் முன்போல இனி வரும்படி எதிர்பார்க்க முடியாது" என்று காணப்பட்டிருக்கின்றது.

மற்றும் ரிஜிஸ்திரேஷன் இலாக்கா வருஷாந்திர ரிபோர்ட்டு ஒன்றில் "இப்போது ரிஜிஸ்டர் கலியாணங்கள் அதிகப்பட்டு வருவதால் கல்யாணங்களை ரிஜிஸ்டர் செய்ய ஒவ்வொரு இடத்திலும் அதிகமான ரிஜிஸ்டிரார்களை நியமிக்கவேண்டும்" என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

வைதீகக்குடுக்கைகளுக்கும் புராண அழுக்கு மூட்டைகளுக்கும் வருணாச்சிரம புராணங்களுக்கும் அடியோடு பொது மேடைகள் இல்லாமல் செய்து விட்டது.

காஞ்சீபுரம் சங்கராச்சாரி மடத்தில் இருந்து வந்த பள்ளிக்கூடத்தில் "தீண்டைப்படாத"வர்களைசேர்த்துக் கொள்ளாததற்காக கிராண்டு மறுக்கப்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது.

சென்னைபச்சையப்பன் காலேஜில் 'தீண்டப்படாதவர்களை' சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டது. அருப்புக்கோட்டை நாடார் பள்ளிக்கூடத்திலும் சேர்த்துக்கொள்ளப் பட்டாய் விட்டது. திருப்பதி தேவஸ்தான சமஸ்கிருதபள்ளிக்கூடத்தில் பார்ப்பனரல்லாதார்களை சேர்த்துக் கொள்ளவேண்டுமாய் சர்க்கார் உத்திரவு போட்டுஅந்தப்படி சேர்த்துக் கொண்டும் ஆய்விட்டது.

பெண்களுக்கு மூன்றாவது பாரம் வரை சம்பளம் இல்லாமல் சொல்லிக் கொடுப்பதாக சர்க்கார் ஒப்புக்கொண்டு அந்தப்படி அமுலிலும் வந்து விட்டது.

பெண்களுக்கு போதனா முறை பாடசாலைகள் முக்கிய தாலூக்காக்கள் தோறும் ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வேலை நடந்து வருகின்றது.

விதவைகள் ஆச்சிரமம் வெளி ஜில்லாக்களில் ஏற்படுத்த யோசனைகளும் ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றது.

இவ்வளவும் அல்லாமல் முனிசிபாலிட்டிக்கு சம்பந்தப்பட்ட பொது கிணறுகளில் "தீண்டப்படாதார்" உள்பட எல்லோரும் தண்ணீர் எடுக்கலாம் என்றும் யாராவது ஆக்ஷேபித்தால் ஆக்ஷேபிப்பவர்களுக்கு 50 ரூபாய் அபராத மென்றும் சட்டம் செய்தாகி விட்டது. ஜில்லா போர்டு தாலூக்கா போர்டு சம்பந்தப்பட்ட கிணறுகளுக்கும் அதே மாதிரி சட்டம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

பதினாறு வயதிற்குட்பட்ட பெண்களுக்கு கல்யாணம் செய்யக் கூடாது என்றும், பதினெட்டு வயதுக்கு மேற்படாத கல்யாணமில்லாத பெண்களை புணரக்கூடாதென்றும் சட்டம் செய்தாய்விட்டது.

விதவைகள் சொத்துரிமைக்கும் பெண்கள் சொத்துரிமைக்கும் சட்டங்கள் கொண்டுவரப்படப் போகின்றன.

சாமிபேரால் பெண்களுக்குபொட்டுக்கட்டி விபசாரிகளாக்கப்பட்டு வருவதை நிறுத்த சட்டங்கள் செய்யப்பட்டு விட்டன. பட்டணங்களில் விபசார விடுதிகளை ஒழிக்க சட்டம் செய்யப்படுகின்றது. இப்படியாக இன்னும் அநேக விஷயங்கள் இந்தியா முழுவதும புற்றில் இருந்து ஈசல்கள் புறப்படுவதுபோல் தினத்திற்கு தினம புதிதாக இந்த இரண்டு வருஷத்தில் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றதை கண்ணில் பார்த்துக் கொண்டு வருகின்றோம். இன்னமும் அடுத்த வருஷத்துவக்கத்தில் சில விஷயங்களுக்கு சத்தியாக்கிரகம் என்பவைகள் தாராளமாய் நடைபெறக்கூடிய நிலைமைக்கு வந்து விடும் என்கின்ற பலமான நம்பிக்கை நமக்கு உண்டு என்பதையும் தைரியமாய் வெளிப்படுத்துகின்றோம். அன்றியும் அதற்குள் பார்ப்பனர்கள் சாரதா சட்டத்தை மீறி செய்யப்போவதாய்கூறும்சத்தியாக்கிரகம்பார்ப்பனர்கள்இப்போதுசொல்லுகின்றபடி நடக்குமானால் அதுவும் நமது சுயமரியாதை இயக்கத்தின் பலன் என்பதோடு அதை நம்மவர்கள் நடத்தப்போகும் சத்தியாக்கிரகத்திற்கு அனுகூலமாய் தேசத்தில் உணர்ச்சி உண்டாக்கவும் கூடும்.

---

## கரூர் நகரசபை தலைவர் தேர்தல்

(நமது நிருபர் தந்தி)

கரூர். டி. எம். முத்துக் குமாரசாமிப்பிள்ளை கரூர் நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---


(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யைப் பிரித்துக் காட்டி மக்களை தாழ்த்தவும், பணம் பறித்துஒருகூட்டத்தார் பிழைக்கவும், மக்களை அறியாமையில் வைத்து அடிமைகளாக்கவும் கட்டப்பட்டதாகும். ஈ. வெ. ரா.

66. ரயிலும் மோட்டாரும் ஆகாயக் கப்பலும்போக்குவரவு சாதனைகளும் இல்லாத காலத்தில் புளுக ஆரம்பித்தால் ஜனங்கள் கண்டு கொள்ளமாட்டார்கள் என்று கருதி, பூலோகத்தில் இமயமலையை கைலங்கிரி (வெள்ளிமலை) என்றும், பால்கடல் தயிர் கடல் என்றும், சிரஞ்சீவிகளும் சித்தர்களும் இங்கு இருக்கிறார்கள் என்றும், மற்றும் இது போல் ஆசை தீரப் புளுகி வைத்தான். ஈ. வெ. ரா.


# MESSAGERIES MARITIMES.

**MADRAS.**



## பிரஞ்சு கப்பல் பிரயாண விளம்பரம்.

சென்னையிலிருந்து சிங்கப்பூர், சய்கோன், ஜப்பான் முதலிய இடங்களுக்கு கப்பல் புறப்படும் தேதிகள்.

| | |
|---|---|
| S. S. Azay le Rideau | 28-11-29 |
| S. S. Amboise | 26-12-29 |
| S. S. Compiegne | 23-1-30 |

சென்னையிலிருந்து புதுச்சேரி, கொழும்பு, மார்செல்ஸ், முதலிய இடங்களுக்கு கப்பல் புறப்படும் தேதிகள்.

(லண்டனுக்கும் பிரயாண டிக்கட் கொடுக்கப்படும்.)

| | |
|---|---|
| S. S. Compiegne | 10-11-29 |
| S. S. Chantilly | 8-12-29 |
| S. S. Azay le Rideau | 5-1-30 |

Apply for Freight & Passage:—

**T. G. ELUMALAI,**

*6/20, North Beach Road,*

(813) *Madras.*


---

## தென் இந்திய ரயில்வே வழக்கு அப்பீல்

### பொது மக்களுக்கு வேண்டுகோள்

ரெயில்வேத் தொழிலாளர்களின் நலனுக்காக தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம் பாடுபட்டு வந்தது. இச்சங்கத்தை தென்னிந்தியா ரெயில்வே ஏஜண்டும் அங்கீகரித்து இதன் முறையீடுகளை யூனியன் பிரதிநிதிகள் மூலமாய்க் கேட்டுவந்தார். இதனால் அதிகாரிகட்கும் தொழிலாளர்கட்கும் இணக்கம் இருந்து வந்தது. ஆனால் 1928ல் 3171 தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்க அதிகாரிகள் ஆலோசித்தமையால் 20-7-28ல் ஓர் வேலை நிறுத்தம் துவக்கப்பெற்றது. இதன் பயனாய் தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பெற்று, திருச்சி செஷன்ஸ் நீதிபதியால் 10 வருடங்கட்குத் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள். இதனை சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டதில், தலைவர்கள் ஜாமீனில் வெளிவந்திருக்கின்றார்கள்.

அப்பீல் வழக்கு அடுத்த மாதம் முதல் துவக்கமாகும். எற்கனவே சங்கத்தால்

# " இராமாயணத்தின் ஆபாசம் "

உலகத்தில் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆழ்த்தி வைப்பதற்குரிய சான்றுகள் ஆழ்த்தும் சமூகத்திற்றான் காணப்படுவது வழக்கம். ஆனால் தமிழ்மக்களை மிருகங்கள், குரங்குகள், பேய்கள், இராக்கதர்கள், கொடியவர்கள், குடிகாரர்கள், சோரம்புரிபவர்கள், கொலை நிகழ்த்துபவர்கள், அநாகரிகர்கள், வரன்முறை அற்றவர்கள், தாசி மக்கள், அடிமைகள், குரூபிகள் என்ற வகையில் திரித்துக் கூற ஆரியர்கள் இராமாயணம் என்னும் ஒரு கட்டுக் கதையை வரைந்து, அது ஒரு மதியின் மிக்க ஆரிய முனிவனால் எழுதப்பட்டதென்று அதனைப் போற்றி, அண்ட முகடு முட்டும் வரையிற் புகழ்ந்து, அதற்கோர் மொழிபெயர்ப்பு போன்ற கம்ப—இராமாயணத்தையும் வரைந்து இத் தென்னிந்தியாவில் புகுத்தியதும்; இத்தென்னிந்திய மக்கள் தம் இழிவையே அடிப்படையாகக் கொண்டு வரையப்பெற்ற இராமாயணத்தை ஓர் இதிகாசம் என ஏற்று அதனை மெய்யென்று நம்பி அவ்விதிகாசக் கதா நாயக நாயகிகளை தெய்வங்களாக ஏற்றதும் வருந்தத் தக்கதோர் உண்மையாகும். அறிவுடைய திராவிட மக்கள் ச்சியில் மிகுந்த ஆரியக்கதையாம் இராமாயணத்தை நம்பி பார்ப்பன வலையிற் சிக்கியதற்குக் காரணம், சிந்திக்குந்தோறும் சிந்திக்குந்தோறும் எளிதில் தோற்றக்கூடியதாயில்லை.

என்றாலும் பொருள் காப்பாளன் அறிவிலும் வலிமையிலும் மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஆற்றல் உடையவனாய் இருப்பினும், அறிவிலும் சீலத்திலும் குன்றிய ஓர் கள்வன், அப்பொருளை ஏகதேசம் கவர்ந்து செல்லுவதுபோல், அறிவுடைய நம் திராவிட மக்கள் இப்பார்ப்பன ஆபாசக் கதையாகிய இராமாயணக் கதையை ஏற்று மதிமோசம் போயினர். பார்ப்பன சூழ்சியை பத்துக் கோடி முறை வலியுறுத்தினும், நாம் ஏமாற்றம் அடைந்தது, அடைந்ததான்.

எனவே, நம்மை இப்பார்ப்பனர்கள் இற்றை வரையில் ஆழ்த்தி அவர் நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும், கடவுள்களையும் நம்மவை என்று ஏற்று நடக்குமாறு செய்தற்கு இத்தகைய கதைகளே சீவ நாடிகளாய் இருக்கின்றன.

பார்ப்பன வேதங்களையும், வேதாந்தங்களையும் பார்ப்பனரே அறியாதவர்களாய் இருக்க, நம்மவர்கள் பெரும்பாலும் அறிவதற்கில்லை. நம்மவர்கள் தெய்வங்கட்கும்; சமூக ஒழுக்கங்கட்கும்; மற்றும் எல்லாவிதமான இயல்கட்கும் இப்பொழுது நமக்கு ஆதாரமாயுள்ளவை பார்ப்பனப் புத்தகங்களேயாம் என்பதில் தடையுளதோ? இல்லை.

எனவே, நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறியவும், பார்ப்பனர்கள் நம்மைத் தாழ்மைப்படுத்த இன்றுவரை நம்மை அடர்ந்தரசுபுரியும் சூழ்ச்சி முறையைத் தெரிந்து அதனைக் கத்தரித்து சுயமரியாதை உணர்ச்சி படைக்கவும், இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் நூல் நமக்குக் கண்ணளிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூலில் நம் அரிய குடியரசில் வாரந்தோறும் வெளிப்போந்த கட்டுரைகளை மிளிர்வதனால், கட்டுரையாசிரியர் : திரு: சந்திரசேகரப் பாவலரின் ஆராய்ச்சிக்கு, நாம் ஒரு ஆராய்ச்சி வெளியிடுதல் மிகையாகும்.

ஆதலின் உண்மை திராவிடமக்கள் தொடர்ச்சியாக நம் பதிப்பகத்தால் வெளியிடப்படும் 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலை வாங்கிப் படித்து உண்மை உணர்ந்து எதிரிகட்குத் தக்க ஆப்பிறுத்துவது இன்றியமையாததாகும்.

---

திரட்டப்பட்ட தொகை வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் குடும்ப சீவனத்துக்கும், தலைவர்கள் வழக்குக்கும் செலவிடப்பெற்று மிகவும் நலிந்து போய்விட்டது.

அப்பீல் வழக்கிற்கு குறைந்தது 10,000 ரூபாய் வேண்டியிருக்கிறது.

தலைவர்கள் பொது நலத்துக்குஉழைத்தவர்கள்; தீமை புரிந்தவர்களல்லர்; இனி தண்டிக்கப்படுவார்களாயின் அவர்கள் குடும்பங்கள் மிகவும் அல்லற்படும். எனவே தம்முயிரைத் தொழிலாளர் நலனுக்குத் தியாகம் புரிய முன்வந்த நமது அன்பான தலைவர்கள் 15 பேர்கட்கும் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவியளித்தல் கடமையாகும்.

உதவிப் பொருள் அனுப்புபவர்கள் திரு: வி. பி. வே. காயாரோகணம்பிள்ளை பாங்கர், நாகப்பட்டினம், தென்னிந்தியா என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டி. கோவிந்தசாமி செட்டியார்,

பிரதிவாதக் கமிட்டித் தலைவர்.

---



ரூ. 2-8, இம்மாதம் வரைதான் குறைந்த விலை. } இனும். மூன்றுகள். ரூ. 2-8,

மோசமடையாதீர்கள்—மேக்கரை கவனித்து வாங்கவும்.

கெடியார மென்றால்—எல்லாம் கெடியாரமாகி விடுமா? கவனியுங்கள்.

சரியான காலம் காட்டக்கூடியதும், நீண்ட காலம் உழைக்கக்கூடிய

ரிஜிஸ்டர் பாக்கெட்வாச் (அண்டு) லீவர் கைவாச் இனும்




இங்கிலாந்தில் செய்து மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தியாரால் புகழ்பெற்ற ரிஜிஸ்டர் W. B. பவுண்டன் பேனா தங்க ப்ளேட் நிப்புள்ளது. இதை வாங்குபவர்களுக்கு 5 வருஷம் உத்திரவாதமுள்ள லீவர் வாச் இனும். இந்த சொற்பவிலையில் கிடைக்கிறது, ஆச்சரியமல்லவா. (2) பேனாவுக்கு ஆர்டர் கொடுத்தால் 18 காரட் கோல்டன் ரிஸ்டுவாச் இனும். விலை ரூ. 5. பாக்கெட் வாச் வேண்டுமானாலும், ரிஸ்டு வாச் வேண்டுமானாலும் விபரமாய் எழுதவும். போலி விளம்பரத்தைக்கண்டு ஏமாறாதீர்கள்.

முக்கிய குறிப்பு: எங்களிடமிருந்து ¼ டஜன் ½ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுண்டு.

BRITISH EMPORIUM-W-DEP-T., 7th Beat, BOMBAY, 12.



இனும்! இனும்!!

"லீலா ரஹஸ்யம்"

போலி விளம்பரங்களைக் கண்டு பணத்தை பாழாக்காதீர்கள். மதன லீலையில் ஸ்திரிகளை தானாகவே ஈடுபடச்செய்யும் முறைகளும், இனை வீழ்ச்சியின்போது இரு பாலர்களுக்கும் ஏககாலத்தில் இன்பத்தை தரச் செய்யும் முறைகளும் அடங்கிய 'லீலா ரஹஸ்யம்' என்னும் காப்பி ஒன்றை உள்நாட்டார் ஆறணா தபால் பில்லைகளும், வெளிநாட்டார் எட்டணா தபால் பில்லைகளும் அனுப்பினால் முதல் 200 காப்பி வரை இனாமாக அனுப்பப்படும். பிறகு விலைக்கு விற்கப்படும், அபூர்வ விஷயங்கள் அடங்கிய இதற்கு ரூபாய் பத்து விலை ஏற்படுத்தியபோதிலும் அவசியமானவர்கள் கொடுத்துத் தான் வாங்கவேண்டி வரும்.

விலாசம்: —"K"

C/o. S. R. SEKARAM,
11, Soorammalpet,
Egmore, MADRAS.


---

சாதிவேற்றுமையைக் களைந்தெறியுங்கள் !

இன்ப ஊற்று ! இனிய பொக்கிஷம் ! !

## ★ கற்பகம் ★

அற்புதமான பல விஷயங்களோடு மாதந்தோறும் வெளிவரும் உயர்ந்த

## ‘நாவல்’ சஞ்சிகை !

சகோதர சகோதரிகளே !

பாலும் தேனும் கலந்ததோ, நல்ல சீனி சர்க்கரை சேர்ந்ததோ என்று நினைக்கும்படியான இன்பந்தரத்தக்க “கற்பகம்” என்னும் சஞ்சிகையானது அடுத்த கார்த்திகை மாதமுதல் வெளிவரப் போகின்றது. இந்த சஞ்சிகை (டிம்மி) 72 பக்கங்களையுடையது. முதல் 64-பக்கங்களில் இன்பம் சொட்டும்படியான நீண்ட கதையொன்றும், பாக்கியுள்ள எட்டு பக்கங்களில் இன்பம், விநோதம் முதலியன அடங்கிய அற்புத விஷயங்களும் வெளிவரும். இதில் வெளிவரும் கதைகளும், மற்ற விஷயங்களும் படிப்போரின் மனத்தை ஆனந்தசாகரத்தில் அமிழ்த்தும் என்பது திண்ணம். நீங்கள் என்றும இன்பமடைய விரும்பினால், அற்புதமான கதைகளை வாசிக்க விரும்பினால், உலக ரகசியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உடனே “கற்பக”த்திற்குச் சந்தாதாரராகச் சேருங்கள். இதன் ஆசிரியர் “திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர்” அவர்கள் இருபது வருடங்களாகத் தமிழ் துறையிலும், பத்திரிகாசிரிய நிலையிலும், பலவகையான புத்தகங்களை எழுதும் வகையிலும், உழைத்துத் தேர்ந்த அனுபவம் வாய்ந்தவர். அவரைப் போன்றவர்களைக் கொண்டு நடைபெறும் பத்திரிகைகள் தமிழ் நாட்டில் இரண்டொன்றுக்குமேல் இல்லை. நாங்கள் மிகுந்த பொருட்செலவில் இந்த ஆசிரியரைக் கொண்டு “கற்பகம்” என்னும் சஞ்சிகையை வெளியிடத் தீர்மானித்துள்ளோம். ஆகையால் அப்பத்திரிகையின் பெருமையைப் பற்றி நாங்கள் அதிகமாக யாதும் கூறவேண்டியதில்லை. கற்பகத்தில் முதன்முதல் ‘சென்னை நகரத்தின் இரகசியங்கள்’ (Mystries of Madras) என்னும் வரிசையில் ‘சௌந்தரவதனி அல்லது சிறந்த இரகசியங்கள்’ என்னும் கதை அற்புதமான பல விஷயங்களோடு வெளிவரும்.

முக்கிய கவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிதேசங்களுக்கு வி. பி.யில் அனுப்ப முடியாது. அவர்கள் முன்பணம் அனுப்பியே தங்கள் பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும.

3 மாத சந்தா அணா 0-10-0. 6 மாத சந்தா ரூ. 1-0-0. வருட சந்தா ரூபா 2-0-0. வெளிநாட்டுக்கு ரூ. 2-8-0.

உடனே ஷை சந்தாதாரராகச் சேரவும்

மாதிரி பிரதி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**கற்பகம் ஆபீஸ்,**

5, வீராசாமி பிள்ளை வீதி, ஏழுகிணறு, சென்னை

## மாதரும் சமூக சுதந்திரமும்

(நாகலிங்கம்மொழிபெயர்த்தது)

ஏ. ஆர். பொதுவால் பி. ஏ. எம். பி. ஸி. எம். எர்ணாகுளம் மகாராஜா கல்லூரி பத்திரிகையில் எழுதுவது:-

“ஆணும் பெண்ணும்” என்னும் பிரச்னை நன்மை தீமை இரண்டையும் கொண்டதாய் இருந்தபோதிலும், இந்தியா தேசத்தில் அவ்வளவு முக்கிய கவனத்தை இன்னும் பெறவில்லை. இவ்வியக்கத்தின் புது மாதிரியால ஆண் பெண் சேர்க்கை, நேசம், அன்பு முதலியன வயது சென்றவர்களுக்கு வெறுப்புள்ளதாய் இருந்தாலும், இளையோர் அபிமானம அளவுகடந்திருக்கிறது. எக்காரியத்தையும் கொள்கையையும் மிக லேசாய் மதிக்கும் இந்தியா அதை முற்றிலும் உணர்ந்து அநுபவ சாத்தியமான முறைகளைக் கையால ஆரம்பிக்க இன்னும் காலம் செல்லும் என்றே எண்ணுகிறன். ஆனால், ஐரோப்பாவில் இதன் வேகம் அதிகமாயிருக்கிறது. ஒரு பெண், தான் ஒரு ஆடவனைப் போன்றே அவ்வளவு முழு சுதந்திரத்தோடு இருப்பதாகவே நம்புகிறேன்.

அத்தகைய சுதந்திரம் இவர்களுக்கு ஏற்றதுதானா என்பதை நாம் பரிசீலனை செய்யவேண்டும். பெண்கள் இயற்கையாகவே எத்தகைய அசந்தர்ப்பங்களுக்கு ஆட்படவேண்டியிருக்கிறதென்பதை முதலில் கவனிக்க வேண்டும்.

சரீர பலம் இருந்தால் மட்டும் போதுமானதல்ல. அதிக பளுவுள்ள ஒரு வஸ்துவை ஒரு மனிதன் தூக்க முடியுமானால்அது அவனுடைய உயர்வை சற்றும் அதிகப்படுத்தாது. சர்க்கஸ் போன்ற விளையாடுமிடங்களில் அது ஆச்சரியமாய் தோன்றலாம். அத்தகைய செய்கைகள் பெண்கள் செய்வதையே நான் கண்டிருக்கிறேன். வாழ்க்கையிலேயே மிகவும் கடோமான இடைஞ்சல், கர்ப்பம், தாய்மை, ஊட்டல் முதலியன. ஆனால் இக்காலத்திய நவீன எண்ணம் அது ஒரு இடையூறல்ல வென்பதும், பலத்தை அதிகரிக்கிற தென்பதாகும். ஒரு தாய் சந்ததியின் தாயாகவும் சமுதாயத்தின் தாயாகவும்விளங்குகிறாள், இத்தகைய கஷ்ட சமயங்களிலிருந்தும் காப்பாற்றப்படுகிறாள். பிள்ளைப் பேறு கழிந்து, பிள்ளை வளர்ப்பில் கவனம் செலுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதிக கவலைக்கிடமான சந்தர்ப்பங்கள் கடந்தாகிறது. இவைகழிந்த சில வாரங்கள் தன் குடும்ப வேலைகளை கவனிக்க முடியாதிருந்து பின்னர் சரியாகி விடுகிறது. சுரத்தினால் வருந்துகிற ஒரு பனிதனைக்காட்டிலும்இவர்களுக்குக் கஷ்டம் அதிகமில்லை. அதிலும் இக்காலத்தியசாஸ்திர ஞானமுறை அநுஷ்டிக்கப்படுவர்களுக்கு இக்கஷ்டமுமில்லை என்பது உறுதி. “துக்கத்திலும் கஷ்டத்திலும் நீ பிள்ளைகளைப் பெறுவாயாக” என்ற பைபிள் வாசகத்தை பெண்களினின்றும் பிரித்தாகிவிட்டது. இந்த நவீன காலத்தில் அக்கொடுமைகளினின்றும் காப்பாற்ற அநேக முறைகள் காணக்கிடக்கின்றன. ஆனால்,இந்த சந்தர்ப்பத்தில் பிள்ளைப்பேற்றை மட்டுப்படுத்திக்கொள்ளும் முறைகள் அவசியம் கவனிக்கப்பட வேண்டியவையாகும். மதத்தைப்பற்றியோ, மதக் கொள்கைகளைப்பற்றியோ நான் விவரிக்க விரும்பவில்லை. மதத்தில் நம்பிக்கையோ பற்றோ அளவுகடந்து கொண்டவர்கள் வருஷத்திற்கு இரண்டு பிள்ளைகள் பெறட்டும். அதனால் ஏற்படும் அபாயங்களை அநுபவிக்கட்டும். ஆனால்,இளம் நங்கைகள் மட்டற்றகுழந்தைகளைப் பெறுவதாலும்,அவைஆயிரக்கணக்கில் மடிவதும், பின்னர் பலமிழந்து நடைபிணங்களாய் வாடுவதாலும்ஒருபெரிய சமுதாயத்தின் சக்தியையே வீணாக்குகிறார்கள் என்பதுமட்டும் உறுதி. நமது தேசத்தில் உள்ள பெண்கள் பிள்ளைகளைப் பெறுவதைவிட வேறு தொழியங்கள் இருப்பதாகவே கருதுகிறார்கள்.

வரையறையில்லாது குழந்தைகளைப்பெற்று குடும்பத்தை நிரப்புவது மதியீனமாகும். பகுத்தறிவுள்ள எந்தப் பெண்மணியும் அடுக்கடுக்காய் குழந்தைகளைப் பெற விரும்புகிறவில்லை. மனிதன் அதை கடவுள் செயல் என்கிறான், ஆனால் பெண்ணோ வானத்தை அண்ணாந்து பார்க்கிறாள். தன் கையை நெரித்துக் கொள்கிறாள், தன் விதியை நொந்து கொள்ளுகிறாள். ஆனால் விதி என்பது என்ன என்பதைக்கண்டுபிடிக்க அவர்களை உலகத்தைச் சுற்றிப் பார்த்து வரும்படியாய் வேண்டிக் கொள்கிறேன். இது விஷயத்தில் 100-க்கு 99-பாகம் மனிதனே குற்றவாளியாகிறான்.

(தொடரும்)

# பார்ப்பனர்களின் சிறப்புத் தர்மம்

(உறந்தை ம. இராமலிங்கம்)

நமக்கு நாமே சிறந்த புண்ணிய ஞான பூமியாகக் கொண்டாடும் இந்தியாவில் பெரும்பாலோரில் அப்பிரத்தியட்சமாயுள்ள அணுவாதி பதார்த்தங்களை அறியுமாற்ற லணுவளவில்லாவிடினும், கடவுளது அருவம் அருவுருவம் உருவமாகிய திருமேனிகளைக் கண்டு களிக்கும் ஆஸ்திக சிகாமணிகளுக் களவேயில்லை. அதிலும் சிவ விஷ்ணுவாதிகளை பிரத்தியக்ஷமாய்க்கண்டு அவைகளில் ஒவ்வொன்றுக்கே பரத்வம் சாதித்து பழக்கிடும் பக்த சிகாமணிகளுக்கோ பஞ்சமின்று. வேதாகமதிகளைத் திருவுளம்பற்றிய விமலனுக்கே சாங்கிதாக்கிய சுருதி கூறிய காலத்து, அக்கினி அப்பு பிருதிவி யென்னும் மூன்று பூதங்கட்கும் சூக்ஷ்மமாயுள்ள வாயு ஆகாசாதிகளை அறிந்து கூறும் ஆற்றலில்லாத போது இவர்கள் அதிருட்சமதெய்வம், சக்திகளைக் கண்டு ஆஸ்திகம் சாதிப்பதும் ஆச்சரியமே. அதிலும் இகத்தில் தங்களுக்குச் சம்பவிக்கும் வறுமை நோய் மரணதினின்று தப்பித்துக்கொள்வதற்கும், புத்திராதி சம்பத்துக்களைப் பெறுதற்கும், துஷ்ட சிறு தெய்வங்கட்கு ஆடு மாடு, பன்றி கோழிகளைப் பலி இட்டுப் பூசிக்கின்றார்கள். பூசித்து துக்கத்தினின்றும் அங்ஙனம்தப்பித்தும் சம்பத்துக்களைப் பெற்றிலகுவோரொருவரையேனும் இப்பாரத கண்டத்துக் காண்பதரிதாகவே இருக்கின்றது. இங்ஙனமிருந்தும்இப்பலியில்சம்மவர்கட்கு அவநம்பிக்கை ஜனியாது மென்மேலும் சிரத்தாபத்தி அதிகரித்துவருவதே பேராச்சரியமாய் இருக்கின்றது. இங்ஙனம் விருத்தியாவதற்குக் காரணம் தங்களை மேல் ஜாதியரெனக்கொண்டுகல்வி ஆசாரம்தெய்வபக்தி முதலியவைகளில் தங்களுக்குச் சமானமில்லையென்று நடிக்கும் பார்ப்பனர்களாகவே இருக்கின்றார்கள். எங்ஙனமெனில்:— கிராமாந்தரங்களில் மசூல் அறுவடை முடிந்து ஓய்ந்திருக்கும் காலங்களில் அறுவடைக்கு முன் விவசாயிகள் சாகுபடி காரியங்களில் பாடுபட்டதினாலேயே கிராமத்தில் பீடையேற்பட்டு விடுவதாகவும், அவைகளைப் போக்குவதற்காகவே ஒவ்வொரு கிராமங்களில் கிராம தேவதைகளென்னும் பிடாரிப் பெண்தெய்வங்களிருப்பதாகவும், அவைகள், பொங்கல், மாவிளக்கு, தேங்காய், பழம் முதலிய நைவேத்திய சுத்த பூசையேற்பதாகவும், அவைகட்குக் காவலாயுள்ள துஷ்ட கருப்பு தெய்வங்கட்கு ஆடுமாடாதிகளை அதன் சந்நிதியில் வெட்டி பலி கொடுத்துத் திருப்தி செய்தால்தான் கிராமத்தில் அம்மை, வாந்தி பேதி, காய்ச்சல் முதலிய பீடைகள் அணுகாதிருக்கும். அங்ஙனம் செய்யாவிடில் மேற்கூறிய தேவ வியாதிகள் அணுகி பொது மக்களை ஆபத்துக்காளாக்கிவிடுமே ஆதலின் அவைகட்கு அதிருப்தி யுண்டாகாதிருக்கும்படி பிடாரித் திருவிழாவைக் கொண்டாடவே வேண்டுமென்று, பாமர மக்களை வற்புறுத்த, அவர்களும் இவர்களது வாக்கை தெய்வ வாக்காகவே நம்பி உற்சாகத்தோடு அப்பிடாரித் திருவிழாவைக் கொண்டாடுகின்றார்கள். இங்ஙனம் நிகழும் சம்பவத்திற்குத் திருச்சிபுத்தூர்அக்கிராரத்துள்ள மூன்றுகுடி ஐயமார்ப் பார்ப்பனர்களே போதிய சான்றும் அன்றியும் சிலர் ஐய! ஜீவகாருண்ய விரத சீலராயுள்ள பிராமணோத்தமர்களே! நீங்களும் இக்கொலை பாதகத் திருவிழாவைக்கொண்டாட முன் வரலாமோ? வென்றுகேட்டால், அதற்கவர்களில் சிலர் சொல்லுவதாவது:— முன்னர் வேதோக்தமாக நடந்துவந்த யாகங்களை உதகளைப்போன்ற சிலர் தோன்றி அதில் குறைகூறித் தடுத்ததினால் தான், ஊரில்மழை குறைந்து பஞ்சமாதிகள் பரவி ஜனங்களைக் கஷ்டத்திற்காளாக்கிவிட்டது, இன்னும் சிறிது தலை காட்டிக் கொண்டிருக்கும் பிடாரித்திருவிழாவில் நிகழும் பலியையும் தடுப்பதற்காக நீங்கள் புறப்பட்டிருக்கிறீர்களாக்கும். கலியின் கொடுமை இவ்வாறிருப்பதற்கு உங்கள் பேரில் குறை கூறுவதில் பிரயோஜனமின்றென்பதாகக் கோபிக்கின்றார்கள். இதனாலேயே இப்பார்ப்பனர்கள் இக்கொலை பாதகத்தை மிகவும் சிறந்த தர்மமாகக் கொண்டிருக்கின்றதாகவே புலனாகின்றது. இதற்கு வேறான எவ்வளவோ சிறந்த தர்மங்களிவர்கட்குடன் பாடாயிருப்பினும் அத்தர்மங்களனைத்தினும் இவ்வேள்வியே முக்கிய தர்மமாயிருப்பதற்குக் காஞ்சிபுரத்தில் நிகழ்ந்த வேள்வியைக் குறை கூறிய பார்ப்பனர்களையே ஜாதிப்பிரஷ்டம் செய்ததுமையே போதிய சான்றும். ஓர் ஊரில் யாகம் நடைபெறுவதாயிருந்தால், அவ்வூரிலுள்ள பொது ஜனங்களனைவோருக்கும் இவ்வேள்வியினாலேயே இகபரத்தும் போதிய போக மோட்சங்கள் பிராப்தமாவதாகப் பிரசாரம் செய்து பணம் வசூலித்து எல்லாப்பார்ப்பனர்களும்சேர்ந்து அக்காரியத்தை நடைபெறச் செய்கின்றார்கள். இதனாலேயே இவர்களது சிறந்த வைதிக தர்ம மெவ்வளவு விருக்கிற தென்பதை அறிஞர்களறியற்பாலது. ஆலயங்களில் த்வஜஸ்தம்பம் பலிபீடம் நந்தி இவைகளை அமைத்து சிலஆலயங்களில் அக்கினி கருமமும் நிகழ்கின்றதும். அவ்வேள்வியையே குறிப்பிடுகின்றது. அதற்குச் சில பக்தசிகாமணிகள் ஆலய தெரிசனார்த்தமாய் வரும் பசுவெனப் பெயரிய மனிதன் துவஜஸ்தம்பத்தருகில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது அவனது நான் எனதென்னும் தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டு நல்லார் சந்நிதி சென்று அவனது திருவருளைப் பெறும் பக்தி நெறியைக் குறிப்பிப்பதாகக் கூறுகின்றார்கள். மூவரால் பாடப்பெற்ற திருச்சி உய்யகொண்டான் திருமலை கற்குடி நாதராலயத்தின் துவஜஸ்தம்பத்தருகில்பழையபெரும் வெட்டறிவாள் வைத்து இன்றும் பூசிக்கப் பெற்று வருவதைக் காண்போர்க்கு ஒவ்வோராலயங்களிலுமைந்துள்ள துஜஸ்தம்பம் பலிபீடங்களைவகள் இவர்கள் கூறும் பக்தி மார்க்கத்தைக் குறிப்பிடுகின்றதா? அல்லது பார்ப்பனர்கள் கொண்டுள்ள பலி இடும் வேள்வியிலேயே சர்வாபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாகு மென்னும் கர்மநெறியைக் குறிப்பிக்கிறதா வென்பதும், இனிது புலனாகும் அதிலும் இவர்களது ஓம குண்டங்களில் யோனி குண்டமுமிருக்கின்றது. இக்குண்டம் பவுண்டரீக யாகத்தைக் குறிப்பிப்பதேயாகும்.

இருக்கு வேதத்தில் 21 சாகைகளும் யஜுர் வேதத்தில் 109 சாகைகளும் சாமவேதத்தில் 1000 சாகைகளும், அதர்வண வேதத்தில் 50 சாகைகளுமிருப்பதால் இந்த 1180 சாகைகளும் 1180 உபநிடதங்களாயிருப்பதாயும், இதில் 840 உபநிடதங்கள் கர்மத்தையும், 232 உபநிடதங்கள் உபாசனையையும், 108 உபநிடதங்கள் ஞானத்தைதப் பிரதிவாதிப்பினும் இவைகளிலும் முக்கியமான ஈச, கேன, கட, பிரசன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐத்ரேய, சாந்தோக்கிய, பிரகதாரண்யக, மென்னும் 10 உபநிடதங்களே முக்கியமானதென்று கூறப்பெற்றிருப்பதால்; இதற்கு அதிகாரிகள் அதிதுர்லபமென்றே சித்திப்பதால் பெரும்பாலோர் கர்மாதிகாரிகளாகவே இருக்கின்றார்கள். பார்ப்பனர்கட்குச் சிறந்து விளங்கும் பிரஸ்தானத்திரயத்துளொன்றாயுள்ள பகவத்கீதையில் எவ்வளவோ ஆத்மலாபத்திற்கின்றியமையாத சாங்கியயோக மார்க்கங்களைக் கூறிகடைசியாக எல்லாக் கருமங்களையும் பரித்தியாகம் செய்துவிட்டுத் தன்னையே சரணாகதியடைந்து இக்கௌரவர்களைக் கொல்லுவதே, சிறப்புதர்மமாகக் கூறியிருக்கிறதேயன்றி நியாயமாக நாயாதிகளுக்குச் சேரவேண்டிய பாகத்தைக் கிரமமாய்க் கொடுத்து விடும்படியாக துரியோதனாதியர்களின் புத்தியைச் சிறிது மாற்றி இருதாரத்தயர்களும் சமாதானமாய் வாழும்படி செய்தால் இவரது தெய்வீகத் தன்மைக்கே தேனு மிழுக்கேற்பட்டு விடுமா? அல்லது இங்ஙனம் கொன்று நாசமாக்குவது தான் கருணாகரக் கடவுள் தர்மமோ? அளவிறந்த அண்டங்களைத் தன் அகட்டில் வைத்துப் பாதுகாத்துவருபவராக அருச்சுனனுக்கு விஸ்வரூபங் காட்டிய கண்ணனுக்கு இக்கௌரவர்களைத் திருத்த முடியாமல் பூபாரம் தீர்க்க வந்த புதுமையே புதுமை. இக்கீதை கிருஷ்ணன் வாக்கென்பதை ருசுப்படுத்தப் போதிய ஆதாரங்களுளதுவாயினும் இல்லெனினும், இது கருணாகர கருமதத்தை வகுத்த பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்டவையேயன்றி கண்ணன் வாக்கன்று.

இவர்களது வேதாகம புராண இதிகாசங்களில் இவ்வேள்வியின் பலேயே அளவிறந்த சக்தி பூர்வமாய இகத்திலும் பரத்திலும் அதி அற்புத கோரிக்கைகளெல்லாம் நிறைவேறி விடுவதாகவும், அதற்கு இன்னின்ன வருணாச்சிரமிகள்தான் அதிகாரிகளென்றும், ஒரு வருணத்தானது தருமத்தை மற்றவன் செய்தால் அவன் அநேக ரௌரவாதி நரகங்களை அடைவானென்றும்கூறி இருக்கின்றனவே! இவ்வளவு மந்திர சக்தி வாய்ந்த வேள்வியாதிகளிருக்கும் போது சுயராஜ்யத்திற்காக மகாத்மா முதல் எத்தனையோ தேசாபிமானிகள் ஜெயிலில் உண்ணவிரதங்களாலும் கசையடிகளாலும் மேன்மேலும் கஷ்டப்பட வேண்டும்? ஒரு யாகத்தில் 50,100 ஆடுகளைக் கொன்று மந்திரச் சக்தியினால் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுத்து அவர்களை திருப்தி செய்து இப்பொழுது இந்தியர்களுக்குச் சுயராஜ்யம் கொடுக்கக் கூடாதென்று முட்டுக்கட்டைபோடும் பார்லிமெண்டு மெம்பர்களின் புத்தியைச் சிறிது மாற்றிவிடலாகாதா? அங்ஙனம் செய்தால் வேள்விதர்மத்திற்கேதேனும் பங்க மேற்பட்டு விடுமா அல்லது இக்காலத்தில் அந்த வேள்வியாதிகட்கு அத்தகைய சக்தியில்லாமலே போய் விட்டதா? அங்ஙனமாயின அத்தகைய வேள்வியே இகபரத்துக்கு ஏற்ற சாதனமெனப் பொது மக்களை ஏன் ஏமாற்றவேண்டும்? இவ்வேள்விக்குப் பதிலாகப் பிடாரிகட்குப் பலியிடுவதையும் ஆதரித்துப் பார்ப்பனரல்லாதாரையும் கொண்டாடும்படி வற்புறுத்துவோரவர்கள் அப்பிடாரிகட்கு இவர்களும் பலி கொடுத்து அந்த மாமிசத்தை ஏன் பகிரங்கமாய் புசிக்கலாகாது? ஒரு காலத்தில் நீடித்த பஞ்சம் ஏற்பட்டபொழுது விசுவாமித்திர ரிஷி சண்டாளனிடமிருந்து நிஷேத மாமிசத்தைக் கிரகித்து அதை யாகத்தில் அவிர்ப்பாகமாகக் கொடுத்ததைதேவர்கள் திருப்தியாய் ஏற்றுக்கொண்டதாயிருக்கும்பொழுது இந்த பூசுரர்கள் புசித்தால்தான தோஷமேற்பட்டு விடுமோ? மனிதனுக்குக் கொல்லா விரதமே சிறந்த தர்மமெனப் போதித்த பௌத்த தருமத்தைப் போக்கி வேள்வியில் ஆடுமாடுகளைக் கொன்று புசிப்பதே சிறந்த தருமமாகக் கூறி பகிரங்கமாய்ப்புசித்தும் மகமதியாதி ஹோட்டல்களில் மறைவாக மாமிசாதிகளைப் புசித்து வருபவர்கள் கொல்லாவிரதியர்களென நடிப்பதும்பார்ப்பன தருமமாகத்தானே இருக்கின்றது. இத்தருமங்கட்குடன்படாத கொல்லாவிரதிய உத்தம அந்தணர்களாயிருப்பின் "அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற பிரமாணத்திற்கிணங்க தங்கள் சகோதரர்களாயுள்ள பார்ப்பனரல்லாதார்க்கும் [illegible] கூறிய "கொல்லா விரதம்" [illegible] மெல்லாயோகை யெல்லார்க்குஞ்

## ஒரு ஐயவினா

அன்பிற்சிறந்த சுயமரியாதை இயக்கத் தலைவர்களுக்கு வணக்கம்!

யான் இரண்டாண்டுகளாய் தங்களை ஆசிரியராய்க் கொண்டு வெளிவரும் "குடி அரசு" பத்திரிகையை வாசித்து வருவதன் பயனாய் இந்து மதத்திலுள்ள ஆபாசங்களை அறிந்து சில மாதங்கட்குமுன் இந்து மதத்திலிருந்து விலகி இன்றுவரை எம்மதத்திலும் சேராமல் சுயமரியாதைக் கொள்கைகளின்படியே என்வாழ்நாளை கழித்து வருகின்றேன்.

யான் இந்துமதத்திலிருந்து விலகி பிறமதத்தில் புகுவதற்காக பிறமதத்தினர்களிடம் விசாரித்தும் எனது சிற்றறிவுக் கெட்டியவாறு ஆராய்ந்தும் பார்த்தபொழுது ஒவ்வொரு மதத்திலும் சுயமரியாதைக்கொள்கைகளுக்கு சிறிது முரண்பாடாய் இருப்பதால் எம்மதத்திலும் சேராமல் சுயமரியாதைக் கொள்கைகளை ஒரு மதம் என்று எண்ணுது அதன் கொள்கைப்படியே நடந்து வருகின்றேன்.

சுயமரியாதை இயக்கம்தோன்றிய பிறகும் நாங்கள் சென்னையில்கூடிய ஆதித்திராவிடர் மகாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மதம் மாற்றத்தினுல் தான் விமோசனம் கிடைக்குமென சொற்பெருக்காற்றியிருப்பதை அறிந்தும் இந்துமதத்திலுள்ள ஆபாசங்களை விளங்கியும்நாள்தோறும் பிறமதத்தில் புகுவதும் சமீபத்தில் சிலையம்பட்டியில் 69 இந்துக்கள் முஸ்லீமானதை நம் குடி அரசில் வாசித்துநம் நெஞ்சம் பதைபதைத்து சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி எனக்கு ஒருயோசனை தோன்றியது. அதை இக்கடிதம் மூலமாய் தங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

சுயமரியாதை இயக்கமானது எம்மதத்திலாவது விருப்பமோ வெறுப்போ இல்லாமல் இருக்கவேண்டுமோடு மதமே மக்களுக்கு அவசியமில்லை யென்றும் சுயமரியாதைக்காரர்கள் எம்மதத்திலும் சேராது சுயமரியாதைக் கொள்கைகளை ஒரு மதம் என்று எண்ணுது அதன் கொள்கைப்படியே நடக்கவேண்டும் யென்பது தான் எனது யோசனை.

மதமில்லாமல் மக்கள் வாழ முடியாதா என்பது தான் இக்கடிதத்தில் எனது வினு.

பொது ஜனங்கள் மதம்மாறிக் கொண்டிருந்தால் ஒரு நாளும் ஒற்றுமையுண்டாகாது என்பதுதான் எனது அபிப்பிராயம்.

ஒற்றுமை உண்டாக்க உதித்ததே நமது சுயமரியாதை இயக்கம்

இந்து மதத்தில் இருக்கவும் கூடாது பிறமதத்தில் போவும் கூடாது என்பது தான் எனது அவா

சுயமரியாதை இயக்கமானது எல்லாம் வல்ல சக்தி ஒன்று உண்டென்றும் அதன் கொள்கை தான் சுயமரியாதைக்கொள்கை என்றும்மதமே மக்களுக்கு அவசிய மில்லை என்றும் பிரசாரம் செய்தால் பிறமதத்தினர்களும் மதம் என்னும் ஜெயிலை உடைத்தெரிந்து விட்டு சுயமரியாதை இயக்கத்தோடு கலந்து மானிடராய்ப் பிறந்தோர் எல்லோரும் சமம் என்றும் மதமேமக்களுக்கு அவசியமில்லை என்றும் சுயமரியாதை இயக்க உணர்ச்சியால் நாமெல்லோரும் ஒற்றுமையாய் இருப்போம் என்றும் கூறுவார்கள்.

இதற்காகவே சுயமரியாதை இயக்கம் அல்லும் பகலும் அரும்பாடுபடவேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் பதிலை எதிர் நோக்கும்,

தே, ஈ, புஷ்பராஜன்,

---

செப்புவ[illegible] "தனிச்சை பராபரமே" யென்ற[illegible]ணம் தெய்வ சந்நிதியில் நிகழும் [illegible]சாலையால் நிகழும் அனர்த்தங்களை [illegible]கெடுத்துரைத்து அவர்களையும் [illegible]கொல்லாவிரதியர்களாக்க முன்வர மாட்டார்களா? குழுமியாய் பிடாரியை இருவகுப்பினரும்கொண்டாடி [illegible]ம்பொழுது பார்ப்பனரல்லாதார் [illegible]மட்டும் பலியிடச் செய்தும் இவர்கள் பலியிடாதிருப்பது எத்தகையத[illegible]மையென்று இயம்பலாகும். இத்[illegible] வஞ்சகர்களை அந்தண[illegible] என்னைமழைக்கலாகும். இனி[illegible] [illegible]லும் [illegible]திருவிழாவில் தலை[illegible] [illegible]ப்பார்ப்பனரல் அது மட்டுமே உரிமைதான்.

---

### வந்தவாசி

**"சுயமரியாதை இறுதிக்கடமை"**

வந்தவாசி பாக்கார திரு. சௌபாக்கியம்மாளின் இறுதிக்கடமை சடங்கு வெள்ளிக்கிழமை 25-10-29 பார்ப்பனீயமின்றிஏழைகளுக்கு அன்னமளித்து அன்றே வேளாள ஏழை மாணவ கல்வி பயிர்ச்சிக்கென்று ரூ 500 பாக்கார சௌபாக்கியம்மாள் நிதியென நாமமிட்டு டாக்டர். தணிகாசல இராமலிங்கம் அவர்களால் எடுத்து வைக்கப்பெற்றது.

---


## உத்திரவாதம்!

நம்முடைய திருநேத்திர சஞ்சீவி பல மூலிகைகளைக் கொண்டு சித்தர் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது காலரா, பிளேக், சுரம், ஜன்னி இவைகளை ஒரு மணி நேரத்திலும், பரு, கண் குத்து, பல்வலி முதலிய சகல வலிகளையும் 5, 6 நிமிஷத்திலும் சுகமாக்கக்கூடிய சஞ்சீவி. ஒரு முறை பரீட்சித்தால் இதன் அபூர்வ சக்தியைத் தெரிந்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2-0-0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

ஆர். பி. நரசிம்மலு நாயுடு,
191, தெற்கு மாட வீதி,
மதுரை.

(191)



வியாபாரத்திற்கழகு — — விளம்பரம் செய்தல்



## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். வில்லிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல,10 வருஷங்கள்கூட ரிப்பேர்இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடிகார கைச்சங்கிலி இனுமாகச் சேர்த்து அனுப்பப்படும். மேற்படி கடியாரத்துக்கு இங்கிலாந்தில் செய்து மாட்சிமை தங்கிய 5-ம் ஜார்ஜ சக்ரவர்த்தியால் புகழப்பட்ட பௌண்டன் பேனு தங்க பிளேட் நிப்பு போட்டது ஒன்று (ரூ. 3-0-0 மதிப்புள்ளது) 15 நாட்கள் வரை இனுமாகவும் அனுப்பப்படும் வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லை யென்றுல் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுடன் அனுப்புகிறோம். இனும் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. உடனே எழுதுங்கள்.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி
தங்கசாலைத் தெரு, மதராஸ்



## தமிழரசு

### ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் துணிந்து கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வரைந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0 | வெளிநாடு ரூ. 4-0-0

'தமிழரசு' காரிய நிலையம்,
31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

(65)

## விதவா விவாக சபை

### புருஷர்கள் தேவை

சென்னை விதவா விவாக சபைக் காரியதரிசி நமக்குப் பின் வருமாறு அறிவிக்கிறார்:—

விதவா விவாக சபையார் கீழ்க் கண்ட விதவைகளுக்கு விவாகம்செய்துவைக்க விரும்புகிறார்களாதலால், விவாகஞ் செய்துகொள்ள விரும்பும் கனவான்கள் மேற்படி சபையாருக்குத் தெரிவித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:—

(1) பி. ஏ. வகுப்பில் படித்து வரும் 20 வயதுடைய ஒரு பிராமண கன்னிகா விதவைக்கு, நல்ல நிலைமையும் ஐவேஜுமுடைய ஒரு தமிழ் ஸ்மார்த்த பிராமணர் தேவை.

(2) மைசூரில் நர்ஸ் வேலைசெய்து வரும் 30வயதுடைய ஒரு பிராமண விதவைக்கு, அப்பெண்பேரில் 2000 ரூபாய் பணம் கட்டக்கூடிய ஒரு கனவான் தேவை. அக்கனவான் பிற ஜாதியினராக இருந்தாலும் சரி.

(3) தெலுங்கு, தமிழ், மகாராஷ்டிரம், கூர்ஜரம் முதலிய பாஷைகள் பேசும் 14 வயதுடைய பிராமணரல்லாத ஒரு கூர்ஜர விதவைக்கு சர்க்கார் உத்தியோகத்தில் 80 ரூபாய்க்குக் குறையாத சம்பளம் பெறும் ஒரு புருஷர் தேவை. பெண்ணுக்கு வைதியல் வேலை நன்கு தெரியும்.

(4) 22 வயதுள்ள ஒரு நேபாள விதவைக்கு தகுந்த வரும்படியும் சொத்துமுள்ள ஒரு புருஷர் தேவை.

(5) தமிழ் மலையாளம் முதலிய பாஷைகளும், சங்கீதமும், சிறிது ஆங்கிலமும், தெரிந்த 19 வயதுடைய ஒரு பிராமண கன்னிகா விதவைக்கு எர்ணாகுளம், திருவாங்கூர், கொச்சி, மலையாளம், திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களிலிருந்து வந்த நல்ல நிலைமையுடைய ஒரு புருஷர் தேவை.

(6) உபாத்தியாயர் வேலை பார்த்து வரும் 34 வயதுடைய நாயுடு ஜாதியைச்சேர்ந்த ஒரு விதவைக்கு தகுந்த வரும்படியும் சொத்துமுள்ள ஒரு வரன் தேவை.

இதைப்பற்றிய கடிதப் போக்குவரத்து விதவா விவாக சபை, 161, பிராட்வே, ஜார்ஜ் டவுன், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

## இந்தியாவில் மிஷனெரி உலகம்

திருவாளர் ஏ. ஜே. அன்பையன் அவர்களால் வெளியிடப்பெற்ற 'இந்தியாவில் மிஷனெரி உலகம்' என்னும் பெயரிய நூலொன்று எம் மதிப்புரைக்கு அனுப்பப் பெற்றோம்.

மிகப்பரந்த நோக்கத்துடன் வரையப்பெற்ற இந்நூலின்கண், இந்தியாவில் உள்ள மேனாட்டுக் கிறிஸ்துவப் பிரசாரகர்களின் நிலைமையைப் பற்றித் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் செந்நெறியில் செல்லாது, தீநெறியாம் சூழ்ச்சியிலும், சுயநலத்திலும் பிரித்தாளும் வழியிலுமேயே செல்லுகின்றனர் என்று, இம்மேனாட்டு மதப் பிரசாரகர்களின் புரட்டை திரு அன்பையன் பிறர் மனதில் தெள்ளிதிற் பதியுமாறு கூறியிருக்கின்றார். ஆங்காங்கே எல்லா மனிதர்களும் வேறுபாடின்றி பாராட்டற்குரிய அரிய உண்மைகள் மிளிர்கின்றன.

ஒரு உண்மையை ஒரு மதம் என்று பெயரிட்டு வரையிறுக்கும் போதே, அம்மதம் பொது மதமாய் இருப்பதற்குரிய இலக்கணத்தை இழந்து விடுதலால், எம்மதத்திற்கும் புரோகிதப்புரட்டு வேண்டுவது அவசியமா யிருக்கின்றது. இதுபோலவே, வரையறுக்கப்பட்ட இக்கிறிஸ்துவ மதத்திலும் இப்புரோகிதர்கள் செய்யும் புரட்டை திரு: அன்பையன் வெளிப்படுத்துவதனுல், மிஷனரிகளைத் தெய்வங்கள் என்று கருதி ஏமாற்றமடையும் அநேகர் நல்வழிப்படுதல் கூடும் என்று கருதுகின்றோம்.

'நம்மிடம் பெருமை, அறியாமை, தன்னலம் என்னும் வியாதிகள் இருந்து வரும் வரை நாம் சகோதர ஐக்கியம் பெற முடியாது' என்றும், 'கிறிஸ்துவைப் போலிருந்து உன்னையே முற்றிலும் அறிந்து உலகத்துக்குப் பயன்படு என்னும் உண்மையை அறிந்திருப்பரேல் மேனாட்டுப்பாதிரிகள் 70,000 பேர்கள் இருந்தும் பெரும் போர் நடக்கச் சும்மாயிருந்திருப்பரோ' என்று திரு. அன்பையன் அவர்கள் கிறிஸ்துவின் அடிப்படையான கொள்கைகட்குப் பாதிரிகளின் கொள்கைகள் எவ்வாறு முரண்படுகின்றனவென்பதை எடுத்துக் காட்டிப்போதருவது பெரிதும் பாராட்டற்குரியதே.

இந்நூலைக் கிறிஸ்துவர்கள் மட்டுமின்றி எல்லா மக்களும் படித்து இன்புற வேண்டுகின்றோம். பொது நலம் பற்றித் துணிவுடன் வெளிவந்த திரு. அன்பையனுக்கு இக்கிறிஸ்துவ உலகம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பது எமது துணிபு.

---

பெரியகுளம்:— இவ்வூர் வடகரையில் 16-10-29 அன்று மரணமான திருமதி லட்சுமிஅம்மாள் தகனத்தை யாதொரு மூடக்கிரியைகளும் இன்றி, இறந்தவர் அண்ணன் குமாரர் திரு. சுப்பையா அவர்கள் நடாத்தி வைத்தாரென்றும், இது சௌராட்டிர வகுப்பில் முதன் நிகழ்ச்சியாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

---

ரூ. 2-15-0 ரூ. 2-15-0

பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாகஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்ப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனுமாய் அனுப்பப்படும்.




W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0 இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனும். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த வேஷப் வேண்டுமோ இனும்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

---

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை.

## மதிப்புரை

### விமல போதம்

ஸ்வாமி விமலாநந்தா அவர்களால் தொகுக்கப்பெற்ற விமல போதம் என்னும் நூலொன்று கிடைக்கப் பெற்றோம். இந்நூலின்கண் சித்த மதத்தை விளக்கி உரைப்பதற்கு, நூலாசிரியரவர்கள் அரும்பாடு பட்டிருப்பர் என்றேயாம் கூற வேண்டியிருக்கின்றது. இதிற் காய சித்தி, மனோ சித்தி, அறிவு சித்தி என்னும் மூவகைச் சித்தியின் தன்மைகளையும் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒட்டிய பல ஆராய்ச்சிகளையும் தெள்ளத் தெளிய யாந்தரத்தாரும் உணரும் வண்ணம் ஆசிரியரவர்கள் பரந்த விஷயங்களை சுருங்க விளக்கியிருப்பது பாராட்டற்பாலதாம்.

நூலிற் கூறும் உண்மைகள் உண்மைகளா என்பதைப்பற்றி நூலை வாங்கிப் படிப்பவர்களே தங்கடங்கள் அறிவைச் செலுத்திப் படித்துத் துணிபுறுதல் சிறப்புடைமையாதலால், இவ்விடயத்தை படிப்பவர்கட்கே விட்டுவிடுகின்றோம்.

நூல் மிகத் தெளிவாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளதென்றும்; நூலைப் பதிப்பிக்க ஆசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சி சிறிதன்று என்றும், இதன் விலை அணா இரண்டே என்றும் மட்டும் வாசகர்கட்கு எடுத்துரைக்க விழைகின்றோம்

நூல் சென்னை சோல்டன் கம்பெனி அச்சியந்திரசாலையில் மிக அழகுபடப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

---

## நோட்டீஸ்

கோயம்புத்தூர் தென் பிரிவு
பஞ்சாயத்து கோர்ட்டு
1929-ம் அ நெ. 386.

வாதி:—வெ: அருணாசலம் செட்டியார்

பிரதிவாதி:—சேலம் கால்நடை ரிஜிஸ்திரேஷன் பாங்கி லிமிடெட் காரியதரிசி, ராஜகோபால் செட்டி.

இதனால் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தும் நோட்டீஸ் என்னவென்றால், வாதி பிரதிவாதி பேரில் இந்த கோர்ட்டில் கணக்குப்படி ரூ. 46-5-0க்கு ஒரு தாவா தொடர்ந்திருப்பதால் மேற்படி தாவா 1929-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந் தேதி விசாரணைக்கு போடப்பட்டிருக்கிறது. அந்தத் தேதியில் பிரதிவாதியாவது அல்லது அவருடைய ஏஜண்டாவது நேரில் ஆஜராகி தகுந்த ஆட்சேபனை செய்யாதிருக்கும் பட்சத்தில் மேற்படி மெம்பர் ஒரு கட்சியாய் தீர்ப்பு செய்யப்படும்.

சி. ஆர். ஹரிராவ்,
20/114, சாளுவன் தெரு,
கோயம்புத்தூர்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

...த்தால் அடிமைப்பட்ட கோழைகளையும், சைவ வைணவ ஜீவகாருண்ய பக்திமான்களையும், பணம் தேடலாத் திரோபோகும் குருவும், அவர்கள் கூட உண்டு வாழும் கூட்டமுமான இவர்களையெல்லாம் கொண்டு மட்டுமிருந்தால் நமது மதத்தையும் அதன் சமூகத்தையும் காப்பாற்றிவிட முடியுமா? நமது சமூகம் அரசியல் விஷயத்தில் எல்லா தேசத்தோடும் சமமாக நிற்க முடியுமா? இவ்வுலகின் இடைவிடாக்கஷ்டங்களினாலும் போட்டியினாலும் கடினமாகப்பாடுபட்டுக் கொண்டிருக்க வேண்டியது சமயங்களின் தலைவிதியாயிற்றே. சமூகங்கள் அதன் ஜனத்தின் சிருஷ்டியான கல்வி, கோயில், கலை முதலியவைகளைக் காப்பாற்ற வேண்டாமே? இவைகள் மனுஷியலோகத்தை உயிர் வளர்மடையதாக்கிப் பலவிதங்களில் அழகுபடுத்துகிறதென்று மட்டும் அலங்கரித்து அதைக்கொண்டு வயிற்றைப்பெருக்கிக்கொண்டிருந்தால்மட்டும் சமயம் காப்பாற்றப்பட்டுவிடுமோ! ஒழுக்கம், நியதிகள், ஒளி, அந்தகாரம், நன்மை தீமை இவற்றைப்பற்றின எண்ணங்கள் முதிர்ந்து பக்குவமடையாவிட்டால் சமயம் பாழாகாதா. சிவனின் பஞ்ச முகத்தின் நடுமுகத்திலிருந்து பிறந்த ஆதி சைவ பிராமணர்களுக்கு நமது ஈசன் விட்ட வேத ஆகம சுருதிகளையும், கல்ப மடையர், நல்ல அடிமைகள் என்னும் அர்த்தத்தோடு கூடின சத்சூத்திரர்களுக்குநமது ஈசன் அளித்த சைவ ஆகம சாஸ்திரங்களையும்,மடையர், அடிமை என்று சொல்லக்கூடிய சூத்திரர்களுக்கு நமது சமாச்சாரிகளிடத்தே தேவாரதிருவாசகம்பெரிய புராணம் முதலியவைகளையும் அதற்குப் பின் சூத்திரர்களுக்கு ஈசனால் அளிக்கப்பட்ட கந்தபுராணம், திருவிளையாடல் புராணங்களையும், சண்டாளன், பாவி, நீசன், புலையன் முதலியவர்களுக்கு கோயில் கோபுர கலசத்தைத் தரிசித்துக் கொள்ள நமது ஈசனிட்டகட்டளைகளையும்இதுபோல்றே விஷ்ணு சொன்ன வைணவக்கிரமங்களையும்,பிரமா சொன்ன கிரமங்களையும் நாம் வைத்துக்கொண்டு நமது சமூகத்தைக் காப்பாற்ற முடியுமா? அவையனைத்துமே உயிருள்ள மனிதனுலும் ஆண்மையுடைய வீரனாலுமே காப்பாற்றப்பட முடியுமென்றல்லவோ சொல்லுகின்றன. அப்பேர்ப்பட்டவர்களை நம் மதத்திலிருந்து அந்நிய மதத்திற்குத்துரத்துகிறோம். அவர்கள் அங்கு போய் திரும்பி வந்தால் வணக்கத்துடனவர்களுக்கு மரியாதைசெய்கிறோம். நமது ஆலயத்தின் உள் பிராகாரத்திலும் விடுகிறோம்; தொழுகிறோம்; ஒன்றாயிருந்து உண்ண சிறிது தடைப்பட்டாலும் சற்று விலகியிருந்து உண்ணுவதற்கு சம்மதிக்கிறோம் மலையாளத்தில் வீட்டு வேலை, நெல்லடிக்கும் களத்துவேலை முதலியவைகளுக்கு ஒரு சிலுவையை நீண்டப்படாதவர்கள் கழுத்தில் மாட்டிவிட்டுவிட்டால் தீட்டுப்போய் விடுகிறது. வேலைதீர்ந்த உடன் அதைக் கழற்றி வாங்கிக்கொள்ளுகிறார்கள். சிலுவைகழுத்திலிருந்தால் தீட்டில்லை அதில்லாவிட்டால் தீட்டு உண்டு என்பவைகளை நடத்திக் காட்டுகிறோம். இதனுல் அன்னிய மதத்தின் விசேடத்தையும் சௌகரியத்தையும் பழக்கி மத மாற்றத்திற்கு வழிகாட்டுகிறோம் நாம் இதற்கு வெட்கப்படுவதில்லை; வருத்தப்படுவதில்லை. அதனாலுண்டாகும் நன்மை தீமைகளைப்பற்றி நினைப்பதேயில்லை. நினைப்பவர்களை தூஷிக்கிறோம். மதத்துரோகி என்கிறோம். எவர்கள் மதத்தை அழிக்கும் பாவிகளென்று நினைத்துப்பாருங்கள் நமது மதத்திலிருந்து அன்னிய மதத்திற்குத் துரத்தும் ஏற்பாட்டை நிலை நிறுத்தச்சொல்லுகிறவர்களா? நமது மதத்திலுள்ள கொடுமைகளை ஒழித்து நம் மதஸ்தர்கள் நம் மதத்திலேயே இருக்கவேண்டுமென்கிறவர்களா? என்பதை ஆலோசியுங்கள்.

நமது மதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்கிறவர்களும், பத்திரிகையில் எழுதுகிறவர்களும், சங்கத்தில்பேசிக் கொள்ளுகிறவர்களும், சுவாமி விவேகானந்தரை மேற்கோள் காண்பிக்காமலிருப்பது இப்பொழுது சுருக்கம். ஆனுல் அவர் நமக்கிட்ட முக்கியமான பட்டப் பெயரைப்பற்றி கவனிக்காமல் விட்டுவிட்டோம். 1893ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி மெனுட்டிலிருந்து எழுதின கடிதத்தில் அப்பெரும் பட்டத்தால் நம்மையெல்லாம் கூப்பிடுகிறார். அதாவது, ஏ! கொடுமையாளர்களே என்பதேயாம். 'ஆ! கொடுமையாளர்களே ஒரு புறம் கொடுமை, மறுபுறம் அடிமைத்தனம் என்பதை அறியாத உங்களை ஆட்சிசெய்பவரென்று நினைக்கிற எந்த சனசமூகத்தாருக்கும் அடிமையாகவிருக்கிற நீங்கள் உங்கள் சனசமூகத்திற்குச்செய்யும்கொடுமையை விட்டுவிடுங்கள். பரந்த உலகத்தைப் பாருங்கள்.

---

ஈரோடு டி. மு. கோர்ட்டு

ஒ. பி. நெ. 42/29

வெங்கய நாயக்கன் — மனுதாரன்

| | |
|---|---|
| அப்பிச்சிக் கவுண்டன் வகையரு | எதிர் மனுதாரர்கள |

ஷை மனுதாரனுக்கு 1-வது எதிர் மனுதாரனுன எடையங்காட்டு வலசு செங்கோடக் கவுண்டன் மகன் அப்பிச்சிக் கவுண்டனுல் 1-9-1910ல் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் அடமானப் பத்திரப்படி ரூபாய் 1268-4-0 சேர வேண்டுமென்றும், அதற்கு கோர்ட் பீசுகளை கொடுக்க தனக்கு சக்தியில்லாததால் பாபராக ஏற்றுக கொள்ள வேண்டுமென்றும், ஷை நெம்பரில் மனுதாரன் மனுக் கொடுத்து 16-11-29 தேதி ஆட்சேபனை நோட்டீசு வாய்தா ஏற்பட்டிருக்கிறது.

கே. வி. சுப்பா ரெட்டி,

வக்கீல்.

---

ஈரோடு டி. மு. கோர்ட்டு

1929 ஆப ஓ. எஸ். நெ. 581

| | |
|---|---|
| ஈரோடு இரத்தினதீப நிதி லிமிட்டெட் (சார்பாக) செக்ரடரி ஆர் சதாசிவம் செட்டியார் | வாதி. |
| கஸ்பா ஈரோடிலிருக்கும் சுப்பராயர் மகன் பி எஸ். சேஷாத்திரி அய்யர் | பிரதி வாதி |

ஷை நெம்பர் பிரதிவாதிக்கு வாதிக்காக வக்கீல் இ. வி. நஞ்சப்ப செட்டியார் தெரிவிப்பது:—

வாதியின் பாங்கிக்கு நீர் 17-8-26 தேதியில் எழுதிக் கொடுத்திருக்கும் பிராமிசரி நோட்டுப்படிக்கு ரூபாய் 472-15-6ம் கிடைக்க வேண்டுமாய வ. தி தாவா செய்து 5-11-29ந்தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் ஆஜராகாவிடில் ஒரு கக்ஷியாய்த் தீர்மானிக்கப்படும்.

ஈ. வி. நஞ்சப்ப செட்டியார்

வாதி வக்கீல்.

ஈரோடு

25-10-29.

---

# நோட்டீஸ்

ஈரோடு டி. மு. கோர்ட்டு

ஒ எஸ் 544 ஆப் 1929.

| | |
|---|---|
| கருப்ப கவுண்டன் 1 சின்னக்கருப்ப கவுண்டன் 2. | வாதிகள் |
| ஈரோடு தாலூகா கருக்குப்பாளையத்திலிருக்கும் வையாபுரி மூப்பன் மக்கள் கருப்ப மூப்பன் 1, பச்சா மூப்பன் 2 நஞ்ச மூப்பன் 3, அம்மாசை மூப்பன் 4 | பிரதிவாதிகள் |

இதனுல் ஷை பிரதிவாதிகளுக்குத் தெரிவிக்கும் நோட்டீசு என்னவெனில், ஷை நம்பரில் அடமானப்படி வாதிகள் ரூ. 3491-0-0 வரவேண்டுமாய் தாவா செய்து, 4-11-29ல் வாயிதா ஏற்பட்டிருக்கிறது. அன்றையதினம் நீங்கள் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராகி ஆக்ஷேபனை தெரிவித்துக் கொள்ளாவிடில் எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு பெறக் கோரப்படும் என்ற விபரம் இதனுல் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அ. தேய்வசிகாமணி,

வாதி வக்கீல்.

ஈரோடு,

26-10-29

---


# இனும்!

கிளேஸ் பேப்பரில் இரண்டு கலரில் அச்சிட்ட, தமிழ் இங்கிலீஷ் தேதிகளடங்கிய 1930-ம் வருஷத்து காலண்டர் இனும். விலாசம் தெளிவாய் எழுதவும்.

சரஸ்வதி அன் கோ.,

கோவில்பட்டி, S. I. Ry.


# நோட்டீஸ்

ஈரோடு டி. மு. கோர்ட்டு

ஒ. எஸ். 587 ஆப் 1929

| | |
|---|---|
| மாரப்ப கவுண்டன் | வாதி |
| ஈரோடு தாலூகா, திங்களூர் கிராமம் மந்திரிபாளையம் புதூரிலிருக்கும் நஞ்சபோயன் மகன் ராமபோயன் | 1-ம் பிரதிவாதி |

ஷை பிரதிவாதிக்குத் தெரிவிக்கும் நோட்டீஸ் யாதெனில், ஷை நம்பரில் அடமானப் பத்திரப்படி வாதி ரூ. 513-0-0க்கு தாவா செய்து 6-11-29ல் வாயிதா ஏற்பட்டிருக்கிறது. அன்று நீர் நேரிலாவது, வக்கீல் மூலமாவது ஆஜராகி உமது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளாவிடில் எக்ஸ்பார்ட்டி தீர்ப்புப் பெறப்படும் என்ற விபரம் இதனுல் உமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அ. தெய்வசிகாமணி,

வாதி வக்கீல்.

ஈரோடு.

26-10-29

---

# நோட்டீஸ்

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம்

நமது பார்வையிலிருந்து வரும் குண்டுக் குதிரையானது நாளது நவம்பர் மாதம் 1-ந் தேதியிலிருந்து அடுத்த டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை கோயமுத்தூரில் ம-ா-ா-ஸ்ரீ தாலூகா போர்டு பிரசிடெண்டு அவர்கள் வசம் வைத்திருக்கப்படும். குதிரைகளுக்கு குண்டுநாட்ட தேவையுள்ளவர்கள் மேற்படி தவணைக்குள்ளாக மேற்படி பிரசிடெண்டு அவர்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். ஒரு தடவை குண்டு நாட்ட சார்ஜ் ரூ. (10) பத்து என்ற விபரம் அறியவும்.

வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர்,

கௌரவ காரியதரிசி.

---


நறுமணம்! பெருங்குணம்!

காப்பிக் குடியை ஒழிக்கும்

# நேப்பி பவுடர்

Registered No (3108)

பலஹீனம், தாகம், உஷ்ணம், பித்தம், மலக் கட்டிதுகளை நீக்கிப் புஷ்டியைத் தருவதில் நிகரற்றது. வி. பி. வேறு. அயல் நாட்டுக்கு முன் பணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ½ சேர் டின் 3, | ரூ. | 1 | 0 | 0 |
| டஜன் ½ | ரூ. | 1 | 12 | 0 |
| ¼ பவுண்டு டஜன் 1, | | 3 | 0 | 0 |

S. V. ராஜப்பா,

நேப்பி பாக்டரி, பழனி, S I

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல ஞரிந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், மன்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 }
சிறிய டின் ரூ. 1—0—0 } தபால் சார்ஜ் வேறு.

# பார்ச வாய்வு மருந்து.

விரை வாய்வு, நரம்புத்தளர்ப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

பார்க்கப் பவுன் மோதிரம் தோற்கும்படியான
ஜ்வலிப்புள்ள அற்புத

# எலக்டிரிக் மோதிரம்



இது அமெரிக்காவில் ஓர் மின்சார நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவிற்கே புதிதாகும். பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் யாரும் அணியலாம். நோய் வராமல் தடுத்துக் கொள்வதற்கும் நோயைக் குணப்படுத்துவதற்கும் உத்தரவாதமானது 8 வித லோகங்களால் மிகவும் பார்வையாக செய்யப்பெற்ற இம்மோதிரத்தை விரலில் அணிந்தால் அதினின்றும் மின்சார சக்தி வெளியாகி தேகத்திற்கு பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்தி, பேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுவன்சா, க்ஷயம், குட்டம், ப்ளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னதுவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை, வெட்டை முதலிய ஸ்திரீ வியாதிகள், எதுவுமே நம்மிடம் அணுகாது. நற்சாட்சி பத்திரங்கள் தினமும் வருகின்றன.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0 மோதிரம் 6-க்கு ரூ. 7—0—0
மோதிரம் 3-க்கு ரூ. 3—12—0 மோதிரம் 12-க்கு ரூ. 13—0—0
ஒரே தடவையில் 12 மோதிரம் வாங்குபவர்களுக்கு இங்கிலாந்தில் செய்யப்பட்ட டபிள்யூ. பி. பௌண்டன் பேனா தங்க பளேட் நிப்பு போட்டது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் ஸர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டது. ரூ. 3 மதிப்புடைய இந்தப் பேனா இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உடனே எழுதுங்கள்.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3 56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மெரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி !!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கண்டசுவாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9-0-0.
6 டின் விலை. ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0.
F. M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8-0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.


புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

# வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க!

அதி அற்புதம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல்
500 ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் மாட்டி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம். இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.
விலை ரூ. 3—14—0.

பினாங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0. உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
(30) தங்கசாலை, மதராஸ்.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயண் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0
வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

## சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,
14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## குடி அரசு புத்தகாலயம்

வெதப்புரட்டை வெளியாக்கும்

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0-12—0 |

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—
மானேஜர், குடி-அரசு புத்தகாலயம்,
(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்.

## கர்ப்பாசய ரோக நிவாரணி


"சௌரியா"வின் அபூர்வ சக்தியைக்கண்டபெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான ஔஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகால பக்ஷிவீடு, ருதுசிராவம், பக்ஷிவீடை தடைபட்டுப்போவது, வெள் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை நழுவி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணைச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பலம் முதலிய சகல ரோகங்களும் இந்த "சௌரியா"வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.
கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கராம் மெடிகல் ஹால்,
(7) தந்தி விலாசம் "சௌரியா" சேலம்.

## படக்காட்சி

ரூ. 20 ஆகயிருந்தது ரூ. 5-8-0 தான்
அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்
(நெ. 2. சிறிய சைஸ், எலெக்ட்ரிக் விளக்கு பாட்டெரியுடன்)



வெகு அற்புதமான இந்த மெஷினிலுள்ள படக்காட்சி சாலையில் அனுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம். நர்த்தனமாடுவது, நீரச்செயல், கன் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், யாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு ஜஜக்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)
விலை ரூ. 5 8 0
தனி பிலிம் டேப் 1 ஜஜம் 0 6 0
3 ஜஜக்கள் [illegible]

முந்துங்கள்!

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)

## குமரன்

காரைக்குடி. தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0

மானேஜர் குமரன், காரைக்குடி.
(எப்)

## Beauty For Ladies !
## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, வெல்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்தம் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள அதனமான புடவை.

18 முழம் × $2\frac{1}{2}$ அகலம் ரூ. 4-6.
15 முழம் × $2\frac{1}{2}$ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)